



# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

CHENNAI | Volume- 3 | Issue:45 | 30-08-2025 | சனிக்கிழமை | Free E- Paper | சென்னை | மதுரை | கோவை | திருச்சி





## இன்றைய பஞ்சாங்கம்

30.08.2025 ஆவணி 14
சனிக்கிழமை

சூரிய உதயம் 6.04

திதி:
இன்று இரவு 9.37 வரை சப்தமி பின்பு அஷ்டமி.

நட்சத்திரம்:
இன்று பிற்பகல் 2.34 வரை விசாகம் பின்பு அனுஷம்.

யோகம் :
இன்று பிற்பகல் 2.53 வரை ஐந்திரம் பின்பு வைதிருதி.

கரணம்
இன்று காலை 8.38 வரை கரசை பின்பு இரவு 9.37 வரை வணிசை பின்பு பத்திரை.

அமிர்தாதி யோகம் :
இன்று முழுவதும் சித்த யோகம்.

சந்திராஷ்டமம் :
இன்று பிற்பகல் 2.34 வரை ரேவதி பின்பு அசுவினி.

நல்ல நேரம்
காலை 7.45 – 8.45
மாலை 4.45 – 5.45.
இராகு காலம்
காலை 9.00 – 10.30.
எமகண்டம்
பிற்பகல் 1.30 – 3.00..
குளிகை
காலை 6.00 – 7.30

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# ஜப்பானின் ரூ.6 லட்சம் கோடி முதலீடுகளை ஈர்க்க இந்தியா இலக்கு

## பிரதமர் மோடி



டோக்கியோ, ஆக.30:
ஜப்பானின் ரூ.6லட்சம்கோடி முதலீடுகளை ஈர்க்க இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளது," என பிரதமர் மோடி கூறியுள்ளார்.

ஜப்பான் சென்றுள்ள பிரதமர் நரேந்திர மோடி, தலைநகர் டோக்கியோவில் அந்நாட்டு பிரதமர் ஷிகெரு இஷிபாவைச் சந்தித்து இரு நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பை மேலும் அதிகரிப்பது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தினார். இதையடுத்து, இரு தலைவர்களும் கூட்டாக செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

அப்போது பேசிய பிரதமர் மோடி, "பிரதமர் இஷிபா உடனான பேச்சுவார்த்தை ஆக்கப்பூர்வமாக இருந்தது. உலகின் இரண்டு பெரிய பொருளாதாரங்களாகவும், துடிப்பான ஜனநாயக நாடுகளாகவும் உள்ள இந்தியாவுக்கும் ஜப்பானுக்குமான கூட்டாண்மை இரு நாடுகளுக்கு மட்டுமல்ல, உலகளாவிய அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு மிக முக்கியமானது. இதில், நாங்கள் இருவரும் ஒத்த கருத்தைக் கொண்டுள்ளோம். சிறந்த உலகை வடிவமைப்பதில் வலுவான ஜனநாயக நாடுகள் இயற்கையான பங்காளிகள்.

இந்தியா - ஜப்பான் சிறப்பு உத்திகள் மற்றும் சர்வதேச கூட்டாண்மையில் ஒரு புதிய அத்தியாயத்துக்கு நாங்கள் அடிக்கல் நாட்டி உள்ளோம். அடுத்த 10 ஆண்டுகளுக்கான திட்டங்களை நாங்கள் உருவாக்கி உள்ளோம். முதலீடு, புதுமை, பொருளாதார பாதுகாப்பு, சுற்றுச்சூழல், தொழில்நுட்பம், சுகாதாரம், மக்களுக்கு இடையேயான நட்புறவு, அரசுகளுக்கு இடையேயான கூட்டாண்மை ஆகியவற்றில் ஒத்துழைப்பை மேலும் அதிகரிக்க நாங்கள் முடிவெடுத்துள்ளோம்.

அடுத்த 10 ஆண்டுகளில், ஜப்பான் இந்தியாவில் 10 ட்ரில்லியன் யென் (ஜப்பான் நாணயம்) முதலீடு செய்வதை இலக்காக நிர்ணயித்துள்ளோம். இந்தியா மற்றும் ஜப்பானின் சிறு, நடுத்தர நிறுவனங்கள் மற்றும் ஸ்டார்ட் அப் நிறுவனங்களை இணைப்பதில் சிறப்பு கவனம் செலுத்தப்படும். உயர் தொழில்நுட்பத் துறையில் ஒத்துழைப்பை அதிகரிப்பது இரு நாடுகளுக்கும் முன்னுரிமையான விஷயமாக உள்ளது. டிஜிட்டல் கூட்டாண்மை, செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றில் ஒத்துழைப்புக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஜப்பானிய தொழில்நுட்பமும் இந்திய திறமையும் ஒரு வெற்றிகரமான கலவை என்று நாங்கள் நம்புகிறோம். அதிவேக ரயில் கட்டமைப்பில் இணைந்துள்ள நாங்கள், அடுத்ததாக துறைமுகங்கள், விமானப் போக்குவரத்து, கப்பல் கட்டுமானம் போன்ற துறைகளிலும் விரைவான முன்னேற்றத்தை அடைவோம்.

மனிதவள பரிமாற்றத்துக்கான செயல் திட்டத்தின் கீழ் அடுத்த 5 ஆண்டுகளில் பல்வேறு துறைகளில் இரு தரப்பில் இருந்தும் 5 லட்சம் பேர் பரிமாற்றம் செய்ய ஊக்குவிக்கப்படுவார்கள். இதில், 50 ஆயிரம் திறமையான இந்தியர்கள் ஜப்பானின் பொருளாதாரத்துக்காக தீவிரமாக பங்களிப்பார்கள். இந்தியாவும் ஜப்பானும் சுதந்திரமான, திறந்த, அமைதியான, வளமான, விதிகள் சார்ந்த இந்தோ-பசுபிக் பிராந்தியத்துக்கு முழுமையாக உறுதிபூண்டுள்ளன.

பயங்கரவாதம் மற்றும் சைபர் பாதுகாப்பு குறித்து எங்களுக்கு இடையே பொதுவான கவலைகள் உள்ளன. இரு நாடுகளின் பொதுவான நலன்கள், பாதுகாப்பு மற்றும் கடல்சார் பாதுகாப்புடன் இணைக்கப்பட்டுள்ளன. பாதுகாப்புத்துறை மற்றும் புதுமை துறையில் பரஸ்பர ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த நாங்கள் முடிவு செய்துள்ளோம். இந்தியா, ஜப்பான் கூட்டாண்மை பரஸ்பர நம்பிக்கையில் வேரூன்றியுள்ளது. உலகத்துக்கான அமைதி, முன்னேற்றம், செழிப்பு குறித்த பொதுவான கனவை நாங்கள் சுமந்து செல்கிறோம்" என தெரிவித்துள்ளார்.

## முதல்வர் இன்று வெளிநாடு பயணம்



சென்னை, ஆக.30:
ஜெர்மனி, பிரிட்டன் நாடுகளுக்கு 7 நாள் பயணமாக முதல்வர் மு.க.ஸ்டாலின் சனிக்கிழமை (ஆக.30) சென்னையிலிருந்து புறப்படுகிறார்.

சர்வதேச முதலீடுகளை ஈர்க்கும் வகையில், இந்தப் பயணத்தில் பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. சென்னையில் இருந்து விமானம் மூலம் சனிக்கிழமை காலை ஜெர்மனிக்குப் புறப்படும் முதல்வர், அங்கு 3 நாள்கள் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்கிறார்.

தொடர்ந்து செப்டம்பர் 1-ஆம் தேதி பிரிட்டன் தலைநகர் லண்டனுக்குச் செல்லும் அவர், அங்குள்ள கிங்ஸ் கல்லூரியில் மாணவர்கள் இடையே உரையாற்றுகிறார். மேலும், ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பெரியார் ஈ.வெ.ரா. படத்தைத் திறந்து வைக்கவுள்ளார். லண்டனில் உள்ள புலம்பெயர்ந்த தமிழர்களைச் சந்தித்து தமிழகத்தில் முதலீடுகளை மேற்கொள்ள அழைப்பு விடுக்க உள்ளார்.

இந்தப் பயணத்தின்போது, இரு நாடுகளிலும் உள்ள தொழில்முனைவோர், தொழில் நிறுவனங்களிடம் முதலீடுகளை ஈர்ப்பது தொடர்பாக அவர் உரையாட உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## திமுக அரசால் கல்வி பாழ்பட்டுப் போய்விட்டது: அண்ணாமலை

சென்னை, ஆக.30:
தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-


திமுக ஆட்சிக்கு வந்த பிறகு, அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை குறைந்து கொண்டே வருகிறது என்பதை, ஒவ்வொரு ஆண்டும் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இன்னும் சொல்லப் போனால், திமுகவின் கல்விக் கொள்கை என்பதே, தனியார் பள்ளிகளுக்குப் பயன்படும் வகையில்தான் அமைந்திருக்கிறது. வசதி படைத்த குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகள், தனியார் பள்ளிகளில் பல மொழிகள் கற்கும் வாய்ப்பு வழங்கப்படும் நேரத்தில், ஏழை, எளிய குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு அந்த வாய்ப்பு மறுக்கப்படுகிறது. கடந்த ஆட்சிக் காலத்தில் அரசுப் பள்ளிகளில் கொண்டு வரப்பட்ட LKG, UKG உள்ளிட்ட தொடக்கக் கல்வி, இன்று தமிழக அரசுப் பள்ளிகளில் நடைபெறுவதில்லை.

மேலும், அரசுப் பள்ளிகளில், ஆண்டாண்டு கால திமுகவின் புரட்டுகளை பாடத்திட்டத்தில் திணித்திருப்பதால், கடன் வாங்கினாலும் பரவாயில்லை, தங்கள் குழந்தைகளுக்குத் தரமான கல்வி கிடைக்க வேண்டும் என்பதற்காக, எளிய குடும்பங்களும், தனியார் பள்ளிகளில் தங்கள் குழந்தைகளைச் சேர்க்கின்றனர்.

இதனால், பெருந்தலைவர் காமராஜர், அரசுப் பள்ளிகள் மூலமாகச் செய்த கல்விப் புரட்சி, திமுக அரசால் இன்று பாழ்பட்டுப் போய்விட்டது. தமிழகப் பெற்றோர்களும், பெரும் கடன் சுமைக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்றார்.

# கமலா ஹாரிஸுக்கு வழங்கப்பட்ட ரகசிய சேவையின் பாதுகாப்பு ரத்து! டிரம்ப் உத்தரவு!



அமெரிக்க, ஆக.30:
அமெரிக்க முன்னாள் துணை அதிபர் கமலா ஹாரிஸுக்கு, வழங்கப்பட்ட ரகசிய சேவையின் பாதுகாப்பை அதிபர் டொனால்ட் டிரம்ப் ரத்து செய்துள்ளதாக, வெள்ளை மாளிகையின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க சட்டத்தின்படி முன்னாள் துணை அதிபருக்கு, பாரம்பரியமாக ரகசிய சேவை பிரிவின் (சீக்ரெட் சர்வீஸ்) பாதுகாப்பு பதவியில் இருந்து விலகிய ஆறு மாதங்கள் வரை வழங்கப்படும்.

இந்நிலையில், அமெரிக்க முன்னாள் அதிபர் ஜோ பைடன் தனது ஆட்சியின் முடிவில், அப்போதைய துணை அதிபரான இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கமலா ஹாரிஸுக்கு வழங்கப்படும் ரகசிய சேவை பிரிவின் பாதுகாப்பை கூடுதலாக 6 மாதங்களுக்கு நீட்டிக்கும் உத்தரவில் கையெழுத்திட்டதாகக் கூறப்படுகிறது.

இதில், நிகழாண்டின் (2025) ஜனவரி மாதம் பதவி விலகிய முன்னள் துணை அதிபர் கமலா ஹாரிஸுக்கு வழங்கப்பட்ட இந்தப் பாதுகாப்பானது ஜூலையில் காலாவதியானதாகக் கூறப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து, முன்னாள் துணை அதிபரான கமலா ஹாரிஸுக்கு கூடுதலாக வழங்கப்பட்ட ரகசிய பாதுகாப்பை, தற்போதைய அதிபர் டொனால்ட் டிரம்ப் நேற்று (ஆக.28) ரத்து செய்து உத்தரவிட்டதாக, அந்நாட்டு ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

முன்னதாக, அமெரிக்காவில் கடந்த 2008-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டத்தின்படி பதவிக்காலம் முடிந்த 6 மாதங்கள் வரை துணை அதிபர் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு ரகசிய சேவையின் பாதுகாப்பு அளிக்க அங்கீகாரம் வழங்கப் பட்டுள்ளது.

மேலும், பதவி விலகிய பின்னரும் முன்னாள் அமெரிக்க அதிபர்கள் ரகசிய சேவையின் பாதுகாப்பை தங்களது வாழ்நாள் முழுவதும் பெறுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## பல லட்சம் வாசகர்களை கொண்ட தமிழ்நாடு இ-பேப்பரை https://epaper.tamilnaduepaper.com/ இணையதளத்தில் படித்து பயன்பெறுங்கள்

# தீ ஆணையத் தலைவராக சங்கர் ஜிவால் நியமனம்!



சென்னை, ஆக.30: தீ ஆணையத் தலைவராக முன்னாள் டிஜிபி சங்கர் ஜிவாலை நியமித்து முதல்வர் ஸ்டாலின் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

தமிழக காவல் துறையின் தலைமை இயக்குநா (டிஜிபி) சங்கா ஜிவால் இன்றுடன் பணி ஓய்வுபெறும் நிலையில், புதிய பதவி வழங்கப்பட்டுள்ளது.

காவல்துறை தலைமை இயக்குநர் பதவியிலிருந்து ஓய்வுபெறும் சங்கர் ஜிவாலுக்கு புதிய பதவி வழங்கப்பட்டிருக்கும் நிலையில், புதிய காவல் துறையின் தலைமை இயக்குநா நியமனம் குறித்த அறிவிப்பு இதுவரை வெளியாகவில்லை.

இந்த நிலையில், தமிழ்நாடு காவல்துறை நிர்வாக பிரிவு டிஜிபியாக உள்ள வெங்கட்ராமன், அடுத்த டிஜிபியாக நியமிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

டிஜிபி சங்கர் ஜிவால் மற்றும் காவல்துறை வீட்டு வசதி நிறுவன டிஜிபி சைலேஷ்குமாரின் பணிக்காலம் ஆகஸ்ட் 31ஆம் தேதியுடன் நிறைவு பெறவிருக்கிறது. இன்றுதான் கடைசி பணி நாள் என்பதால் இன்று மாலை எழும்பூர் ராஜரத்தினம் வளாகத்தில் பிரிவு உபசார விழா நடைபெற்றது.

முன்னதாக, பணி ஓய்வுபெறும் டிஜிபி சங்கர் ஜிவால், இன்று காலை மரியாதை நிமித்தமாக தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினை சந்தித்துப் பேசினார்.

சங்கா ஜிவால் உத்தரகண்ட் மாநிலத்தைச் சோந்தவர். பொறியாளரான இவா, ஐபிஎஸ் தோவில் தோச்சி பெற்று, கடந்த 1990-ஆம் ஆண்டு தமிழக காவல்துறை பணியில் சோந்தவர். மன்னாா்குடி உதவி காவல் கண்காணிப்பாளராகப் பணியைத் தொடங்கிய சங்கா ஜிவால் டிஜிபியாக பணி ஓய்வு பெறுகிறார்.

சேலம் மாவட்டக் காவல் கண்காணிப்பாளா, மதுரை மாவட்டக் காவல் கண்காணிப்பாளா, திருச்சி மாநகர காவல் ஆணையா, மத்திய போதைப் பொருள் தடுப்புப் பிரிவு மண்டல இயக்குநா, உளவுப் பிரிவு டிஐஜி, ஐ.ஜி., சிறப்பு அதிரடிப்படை ஏடிஜிபி, ஆயுதப்படை ஏடிஜிபி, சென்னை பெருநகர காவல் ஆணையா் என பல்வேறு பதவிகளை வகித்தவர். இவா 2 முறை குடியரசுத் தலைவா பதக்கம் பெற்றுள்ளாா்.




# திருக்குறள் குறள்-365

அற்றவ ரென்பார் அவாவற்றார் மற்றையார்
அற்றாக அற்ற திலர்



பற்றற்றவர் என்றுக் கூறப்படுவோர் அவா அற்றவரே, அவா அறாத மற்றவர் அவ்வளவாகப் பற்று அற்றவர் அல்லர்.

## சிந்திக்க ஒரு நொடி


வாழ்க்கை அழகாக்க.....



எந்த கையை குலுக்கி நகர வேண்டும் என்பதும், எந்த கையை பிணைத்துக் கொள்ள வேண்டும் என்பதையும் கற்றுக் கொண்டாலே போதும்..

**கல்ஸ்..**

## சக்கரத்தாழ்வாருக்கு சிறப்பு திருமஞ்சனம்



காரைக்கால் மாவட்டம் கோட்டுச்சேரியில் எழுந்தருளி இருக்கும் அருள்மிகு வரதராஜபெருமாள் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் சக்கரத்தாழ்வாருக்கு ஸ்வாதி நட்சத்திரத்தை முன்னிட்டு திருமஞ்சனம் மற்றும் மகா தீபாராதனையும் நடைபெற்றது பக்தர்களுக்கு தீர்த்தம் சடாரி துளசி மற்றும் இதர பிரசாதங்கள் வழங்கப்பட்டன.

**தகவல் நாராயணன்.J கோட்டுச்சேரி**

## ஸ்ரீஜோதி விநாயகர் ஸ்வாமி ஆலய கும்பாபிஷேகம்



**தஞ்சாவூர்,ஆக.30:**

தஞ்சாவூர் மகர்நோம்புச்சாவடி, விஜயமண்டத்தெரு, அருள்மிகு ஜோதிவிநாயக ஸ்வாமி ஆலயத்தில் கும்பாபிஷேக முன்னிட்டு கடந்த 27.08.2025 காலை 9 மணிக்கு ஸ்ரீ ப்ரஸன்ன வேங்கடேஸப் பெருமாள் திருக்கோவிலில் இருந்து புனித நீர் கடம் புறப்பாடு தொடர்ந்து முதல் கால யாகசாலை பூஜை (28.08.2025) இரண்டாம் கால யாகசாலை பூஜை, மூன்றாம் கால யாகசாலை பூஜை, நேற்று (29.08.2025) நான்காம் யாகசாலை பூஜை, கடம் புறப்பாடு, அதை தொடர்ந்து காலை 9 அளவில் ஸ்ரீஜோதி விநாயகர் ஸ்வாமி ஆலய கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

## உங்களுடன் ஸ்டாலின் முகாம்



**ராணிப்பேட்டை,ஆக.30:**

ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் சந்திரகலா அவர்கள் அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம் பாரஞ்சி ஊராட்சி CSI நடுநிலைப் பள்ளியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமை பார்வையிட்டு உடனடி தீர்வு காணப்பட்ட மனுக்கள் மீது பயனாளிகளுக்கு நல திட்ட உதவிகள் வழங்கினார்கள் உடன் சோளிங்கர் சட்டமன்ற உறுப்பினர் ஏ எம் முனிரத்தினம் , ஒன்றிய குழு தலைவர் நிர்மலா சௌந்தர் , வட்டாட்சியர் வெங்கடேசன், வட்டார வளர்ச்சி அலுவலர் பிரபாகரன் , தாஸ் பிரகாஷ், ஊராட்சி மன்ற தலைவர் ரவி மற்றும் பலர் உள்ளனர்

# பூதேரிபுல்லவாக்கம் அருள்மிகு ஸ்ரீதான்தோன்றியம்மன் தேர்த்திருவிழா கோலாகலம்

### ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்



**செய்யாறு ஆக. 30:**

செய்யாறு அடுத்த வெம்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், பூதேரிபுல்ல வாக்கத்தில் அருள்மிகு தான்தோன்றியம்மன் கோயில் எழுந்தருளி உள்ளது .பிரசித்தி பெற்ற இக்கோயிலில் நேற்று முன்தினம் தேர்த்திருவிழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

திருத்தேர் பணிக்குழுவினர் மற்றும் விழா குழுவினர்கள் பொதுமக்கள் ஒன்றிணைந்து தேர்திருவிழா ஏற்பாடுகளை விமர்சியாக செய்திருந்தனர் முன்னதாக தான்தோன்றி அம்மன் கோயிலில் சிறப்பு அபிஷேகம் ஆராதனை வழிபாடு நடைபெற்றது.

பின்னர் மூலவரான அருள்மிகு தான்தோன்றியம்மன் உற்சவர் ஆக எழுந்தருளி தேரில் அமர்ந்தார். அதனைத் தொடர்ந்து திருத்தேர்பவனியினை எம்எல்ஏ ஓ. ஜோதி வடம் பிடித்து இழுத்து துவக்கி வைத்தார்.

பின்னர் ஆயிரக்கணக்கான பக்தர்களும், பொதுமக்களும் கலந்து கொண்டு தேரை வடம் பிடித்து இழுத்து முக்கிய வீதிகள் வழியாக வலம் வந்து, பின்னர் அதன் நிலையை அடைந்தது. தேர்த்திருவிழாவை முன்னிட்டு காவல்துறை, தீயணைப்பு துறை, மின்சாரத்துறை உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். மேலும் திருத்தேர்பணி குழுவினர், கோயில் அர்ச்சகர் உள்ளிட்ட விழா குழுவினர் விரிவான ஏற்பாடுகளை செய்து இருந்தனர்.

# எலி வாகனம், அன்னம் வாகனம் ஸ்ரீஞான கணபதி சிறப்பு வழிபாடு



கோயம்புத்தூர் 29.08.2025 விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் கொலு மண்டபத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீ ஞான கணபதிக்கு முதல் நாள் எலி வாகனத்திலும், இரண்டாம் நாள் ஸ்ரீ ஞான கணபதி கையில் வீணையுடன் அன்னம் வாகனத்தில் அருள் பாலிக்கும் காட்சி. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# 16ஆம் ஆண்டு விளையாட்டு விழா



திருச்சி காட்டூர் ஆயில் மில் எக்விடாஸ் குருகுல் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 16 – ஆம் ஆண்டு விளையாட்டு விழாவும் மற்றும் இந்திய தேசிய விளையாட்டு நாள் விழாவும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

# பள்ளி மேலாண்மை குழுக் கூட்டம்



பென்னாகரம் ஒன்றியம் சின்னப்பள்ளத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் பள்ளி மேலாண்மை குழுக் கூட்டம் - SMC தலைவி கங்கா தலைமையில் நடைபெற்றது. பள்ளியின் தலைமை ஆசிரியர் மா. பழனி அனைவரையும் வரவேற்று கூட்டத்தின் நோக்கம் பற்றிய விளக்கினார். பள்ளியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் திறன் திட்டம், பள்ளி சுகாதாரம், புதிய பாரத எழுத்தறிவு திட்டம், பள்ளிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள் பற்றி பேசினார்.

கூட்டத்தில் துணைத்தலைவி ராஜேஸ்வரி, அஜய், மணி, சாலம்மாள், அம்பிகா, வளர்மதி உள்ளிடோர் கலந்துக்கொண்டார்கள்.

# விநாயகருக்கு புதிதாக வெள்ளிக்கவசம் சாத்தப்பட்டு மகா கும்பாபிஷேகம் விழா



நெற்குப்பையில் உள்ள அரசமரத்து ஸ்ரீ வயிரவ சித்தி விநாயகருக்கு புதிதாக வெள்ளிக்கவசம் சாத்தப்பட்டு மகா கும்பாபிஷேகம் விழா நடைபெற்றது

# கரிய மாணிக்க பெருமாள் கோவில் மகா கும்பாபிஷேகம்...!



**வந்தவாசி, ஆக.30:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த உளுந்தை கிராமத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ கரிய மாணிக்க பெருமாள் கோவிலில் மகா கும்பாபிஷேக விழா வெகு விமரிசையாக நடைபெற்றது. மூல மூர்த்திகளுக்கு விசேஷ திருமஞ்சனம் நடந்தேறியது. பிறகு முதல் கால பூஜை, இரண்டாம் கால பூஜை, நவக்கிரக ஹோமம், கணபதி பூஜைகள் உள்ளிட்டவை நடைபெற்றது. பிறகு புனித நீர் கலசம் யாகசாலை பூஜையில் வைக்கப்பட்டு மகா தீபாராதனை நடந்தேறியது. பிறகு வேத மந்திரங்கள் முழங்க பட்டாச்சார்யாக்கள் புனித நீரை கோபுர கலசங்களில் ஊற்றி மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். பங்கேற்ற அனைவருக்கும் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப்பட்டது.

**பா. சீனிவாசன், வந்தவாசி.**

# ஸ்ரீயோக நரசிம்மருக்கு ஸ்வாதி விழா யாகசாலை பூஜைகள்



**திருவண்ணாமலை, ஆக.30:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த சோகத்தூர் கிராமத்தில் உள்ள ஸ்ரீஅமிர்த வல்லி நாயிகா சமேத ஸ்ரீ யோக நரசிம்மர் திருக்கோயில் நரசிம்ம மூர்த்திக்கு ஆவணி ஸ்வாதி முன்னிட்டு ஸ்வாதி விழா வெகு விமரிசையாக நடைபெற்றது. மூல மூர்த்திகளுக்கு பால் தயிர் சந்தனம் இளநீர் உள்ளிட்ட வாசனை திரவியங்கள் கொண்டு விசேஷ திருமஞ்சனம் நடந்தேறியது. பிறகு புதிய வஸ்திரம், பூ மாலைகள் சாற்றி அலங்காரம் செய்து யாகசாலை பூஜைகள் நடைபெற்றன. அதைனை தொடர்ந்து உலக நன்மைக்காக கூட்டுப் பிராத்தனை மற்றும் அன்னதான வைபவம் நடைபெற்றது. இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

**பா. சீனிவாசன், வந்தவாசி.**

# விநாயக சதுர்த்தி முன்னிட்டு வித்யா கணபதிக்கு அபிஷேக ஆராதனைகள்



சென்னை தாம்பரம் அருகே மேடவாக்கம் கூட்ரோடுஅங்குள்ள இராகமாலிகா அடுக்கு மாடிக் குடியிருப்பில் அருள் தரும் வித்யா கணபதிக்கு விநாயக சதுர்த்தி முன்னிட்டு காலையில் சிறப்பு ஓமங்கள் அபிஷேக ஆராதனைகள் நடந்து வெள்ளிக் கவசம் சாற்றப்பட்டது. மதியம் அன்னதானம் நடைபெற்றது. மாலை சந்தனக்காப்பு அலங்காரத்தில்பாடல் பஜனைகள் நடந்து சிறப்பாக விநாயகர் சதுர்த்தி விழா நடைபெற்றது. **தாராமதன்**

# பள்ளி மேலாண்மை குழு கூட்டம்



மதுரை மாவட்டம் மதுரை கிழக்கு ஒன்றியம் எல் கே பி நகர் நடுநிலைப் பள்ளியில் பள்ளி மேலாண்மை குழு கூட்டம் தலைவர் தஸ்லீம் பானு தலைமையில் நடைபெற்றது.

# கால்பந்து போட்டியில் சென்னை அணி வீரர்கள் சாம்பியன் பட்டம் வென்றனர்



திருச்சி புனித வளனார் கல்லூரியில் நடைபெற்ற கால்பந்து போட்டியில் சென்னை அணி வீரர்கள் சாம்பியன் பட்டம் வென்றனர்.

# அலகாபாத் உயர் நீதிமன்ற நீதிபதி சென்னைக்கு பணியிட மாற்றம்!

சென்னை, ஆக.30:

சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி நிஷா பானுவை கேரளா உயர் நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்து உச்ச நீதிமன்ற கொலிஜி யம் பரிந்துரை செய்துள்ளது.



சென்னை உயர் நீதிமன்ற மூத்த நீதிபதி களில் ஒருவர் நீதிபதி நிஷா பானு. சீனியா ரிட்டியில் 4-ஆவது இடத்தில் இருப்பவர். முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி ஜாமீன் தொடர்பான வழக்கு உள்ளிட்ட பல்வேறு வழக்குகளை விசாரித்தவர்.

தற்போது, இவரை கேரள உயர் நீதிமன்றத் திற்கு மாற்றம் செய்து உச்ச நீதிமன்ற கொலிஜியம் ஒன்றிய சட்ட அமைச்ச கத்திற்கு பரிந்துரை செய்துள்ளது. அதேபோல அலகாபாத் உயர் நீதிமன்ற நீதிபதி சஞ்சய் குமார் சிங் சென்னை உயர் நீதிமன்றத்திற்கு மாற்றப்படுகிறார். இதற்கான பரிந்துரையையும் உச்ச நீதி மன்ற கொலிஜியம் ஒன்றிய சட்ட அமைச்ச கத்திற்கு அனுப்பியுள்ளது. உச்ச நீதிமன்ற கொலிஜியம் கூட்டத்தில் மொத்தம் 14 உயர் நீதிமன்ற நீதிபதிகளை இடமாற்றம் செய்ய பரிந்துரைக்கப்பட்டு உள்ளது.

கொலிஜிய கூட்டத்தில் குஜராத் மாநிலத்தை சேர்ந்த நீதிபதி விபுல் மனுபாய் பஞ்சோலியை உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கவும் கொலிஜியம் பரிந்துரை செய்தது. இதற்கு ஜெலிஜியத்தில் உறுப்பினராக இருந்த மூத்த நீதிபதி நாகரத்னா கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். நீதிபதி விபுல் பஞ்சோலி சீனியாரிட்டி பட்டியலில் 57-ஆவது இடத்தில் இருக்கும் நிலையில் அவரை விட தகுதிவாய்ந்த சீனியர் நீதிபதிகளில் ஒருவரை பரிந்துரைக்கலாம் என்று அவர் கருத்து தெரிவித்துள்ளார்.

## நாகரிகமாக பேச வேண்டும்!

சென்னை, ஆக.30:

முன் னாள் முதலமைச்சரும் அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழு ஒருங்கிணைப்பாள ரு மான ஓ. பன்னீர்செல்வம் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது, "அதிமுகவிருந்து பிரிந்து சென்றவர்கள் அனை வரும் ஓரணியில் சேர்ந் தால் மட்டுமே தமிழ கத்தில் அதிமுக வெற்றி பெறும் சூழ்நிலை உருவா கும். அரசியல் கட்சியை நடத்துபவர்கள், தலைமை பொறுப்பில் இருப்பவர்கள் அனை வரும் நாகரிகம் கருதி பேச வேண்டும். அந்த அடிப்படையில், விஜய் யின் பேச்சில் சில கருத் துக்கள் ஏற்புடையதல்ல" என்றார்.

## அட்டவணை வெளியீடு

சென்னை, ஆக.30:

தமிழ் நாட்டில் 6 மற்றும் 10 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு செப்டம் பர் 15 முதல் 26 ஆம் தேதி வரை காலாண்டு தேர்வு நடைபெறுகிறது. இந்நிலையில், 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் காலாண்டு தேர்வு அட்ட வணை வெளியிடப்பட்டு உள்ளது. அதன்படி, செப். 10முதல்25-ஆம்தேதி வரைதேர்வுநடைபெறுகிறது.

## காங்கிரஸ் மாநில மாநாடு

சென்னை, ஆக.30:

வாக்கு திருட்டு குறித்து மக்க ளுக்கு விளக்கும் வகை யில் செப்டம்பர் 7 அன்று திருநெல்வேலியில் மாநில மாநாடு நடைபெ றும் என்றும் இம்மாநா ட்டில் அகில இந்திய தலை வர்கள் உட்பட காங்கிரஸ் கட்சியின் முக்கியநிர்வா கிகள் பங்கேற்க உள்ள தாகவும் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கு. செல்வப்பெருந்தகை எம்எல்ஏ அறிவித்து உள்ளார்.

## தவெக மாநாட்டில் பவுன்சர்களால் இளைஞர் தூக்கி வீசப்பட்ட விவகாரம்: வெளியான புதிய வீடியோ



சென்னை, ஆக.30:

கடந்த 21ஆம் தேதி மதுரையில் மிகவும் பிரம்மாண்டமான முறையில் தவெக மாநாடு நடைபெற்றது. விஜய் உடன் செல்ஃபி எடுக்க, கட்டிப்பிடிக்க, கட்சி துண்டை அணிவிக்க முயன்றனர்.

அப்போது விஜய் உடன் வந்திருந்த பவுன்சர்கள் இளைஞர்களை தடுத்தனர். இந்த நிலையில், பெரம்பலூர் மாவட்டம் குன்னம் அருகே உள்ள பெரியம்மாபாளையத்தை சேர்ந்த சரத்குமார் என்ற இளைஞர், விஜய் மாநாட்டில் பவுன்சர்கள் தூக்கி வீசியது தன்னைத்தான் எனவும், பவுன்சர்கள் வீசியதில் தனக்கு உடல் மற்றும் மனதளவில் காயம் ஏற்பட்டதாகவும் குன்னம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இந்த புகாரின் அடிப்படையில் விஜய் மற்றும் பவுன்சர்கள் 10 பேர்மீது போலீசார் வழக்கு பதிவு செய்தனர். இதற்கிடையே, தவெக மாநாட்டில் ராம்ப் வாக்கில் ஏறியது நான்தான் என்று அஜய் என்ற இளைஞர் இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் வீடியோ வெளியிட்டு வருகிறார். இதனால், உண்மையாகவே மாநாட்டில் பவுன்சர்களால் தூக்கி வீசப்பட்ட இளைஞர் யார் என்ற கேள்வி எழுந்துள்ளது. இந்த நிலையில், பவுன்சர்கள் தூக்கி வீசியது தொடர்பான மற்றொரு வீடியோ காட்சி வெளியாகியுள்ளது. அதில், கீழே வீசப்பட்ட இளைஞரை, பவுன்சர்கள் பத்திரமாக இறக்கிவிடும் காட்சிகள் இடம் பெற்றுள்ளன. இதற்கிடையே, தமிழக வெற்றிக்கழகத்தின் பெரம்பலூர் மாவட்ட செயலாளர் சிவக்குமார் நேற்று நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், மாநாட்டில் பாதுகாவலர்களால் தூக்கி வீசப்பட்டது பெரியம்மாபாளையம் கிராமத்தை சேர்ந்த சரத்குமார் இல்லை. தவறான தகவல் சமூக ஊடகங்கள் மற்றும் ஒரு தொலைக்காட்சியில் பரவி வருகிறது. அதற்றப்பட்ட அந்த தொண்டர் விழுப்புரத்தை சேர்ந்த விஜய் ஆகும்.

அவரே சமூக ஊடகங்களில் தோன்றி தன்னையே பாதுகாவலர்கள் அகற்றினார்கள் என்று கூறியுள்ளார்.

# சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தில் தொழில்நுட்பக் கோளாறு: டிக்கெட் எடுப்பதில் சிக்கல்

சென்னை, ஆக.30:

சென்னைமெட்ரோரெயிலில் நாள்தோறும் பல்லாயிரக் கணக்கானோர் பயணம் செய்து வருகின்றனர். இந்த நிலையில், சென்னை மெட்ரோ ரெயிலுக்கான டிக்கெட்டை வாட்ஸ்அப் மூலம் பெறுவதில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், வாட்ஸ்அப் ஆன்லைன் டிக்கெட்டுகளில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, வாட்ஸ்அப் சாட்பாட் தற்காலிகமாக வேலை செய்யவில்லை. எனவே, அனைத்துபயணிகளும்சென்னை மெட்ரோ மொபைல் செயலி, பேடிஎம், போன்பே, சிங்கார சென்னை அட்டை மற்றும் சென்னை மெட்ரோ பயண அட்டைகள் போன்ற பிற முறைகள்மூலம்டிக்கெட்டுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சிரமத்திற்கு சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன வருந்துகிறது. மேலும் தகவல் வரும் வரை பயணிகள் கவுண்டரிலும்டிக்கெட்டுகளைப் பெறலாம். தகவல்கள் விரைவில் புதுப்பிக்கப்படும்." இவ்வாறு தெரிவிக்கப்பட்டு ள்ளது.

# ரஜினியின் கூலி படத்துக்கு யு/ஏ சான்று கோரிய வழக்கு: ஐகோர்ட் தள்ளுபடி

சென்னை, ஆக.30:



ரஜினிகாந்த் நடிப்பில் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் கடந்த 14 ஆம் தேதி உலகம் முழுவதும் வெளியான 'கூலி' திரைப்படம் 400 கோடி ரூபாய்க்கு மேல் வசூல் செய்து சாதனைப் படைத்துள்ளது. இப்படத்தை சன் பிக்சர்ஸ் தயாரித்துள்ளது. இப்படத்திற்கு 'ஏ' சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. ஏ சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதால், 18 வயதுக்கு கீழானவர்கள், பெண்கள் குழந்தைகளுடன் கூலி படத்தைபார்க்கமுடியவில்லை என்பதால், படத்துக்கு யு/ஏ சான்று வழங்க, சென்சார் போர்டுக்கு உத்தரவிடக் கோரி, சன் பிக்சர்ஸ் நிறுவனம் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்தது.

இந்த வழக்கு விசாரணை, நீதிபதி தமிழ்ச்செல்வி முன் நடைபெற்று வந்தது. சன் பிக்சர்ஸ் தரப்பில், எந்த தமிழ் படங்களிலும் அதிகப்படியான சண்டைக் காட்சிகள் இல்லாத படங்களை பார்க்க முடியாது. மோசமான வார்த்தைகள் நீக்கப்பட்டுள்ளன. மது காட்சிகள் மறைக்கப்பட்டுள்ளன. சென்சார் போர்டு தெரிவித்த திருத்தங்களை கடைபிடிக்கப்பட்டுள்ளன என வாதிடப்பட்டிருந்தது. சென்சார் போர்டு தரப்பில், 'ஏ' சான்றிதழை முதலில் ஏற்றுக் கொண்ட படக்குழு தற்போது யு/ஏ சான்றிதழ் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளது. படத்துக்கு ஏ சான்றிதழ் வழங்குவது தொடர்பாக அனைத்து குழுக்களும் சேர்ந்து ஒரு மனதாக முடிவெடுக்கப்பட்டது. வன்முறைக் காட்சிகளை நீக்கி விட்டு, யு/ஏ சான்று கேட்டு விண்ணப்பிக்க வேண்டும் என வாதிடப்பட்டது. இந்த வழக்கில் அனைத்து தரப்பு வாதங்களும் முடிந்த நிலையில், தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் சென்னை ஐகோர்ட் ஒத்திவைத்திருந்தது.

இந்நிலையில் கூலி திரைப்படத்துக்கு யு/ஏ சான்றிதழ் கோரி சன் பிக்சர்ஸ் தொடர்ந்த வழக்கை சென்னை ஐகோர்ட் தள்ளுபடி செய்துள்ளது. அதிக அளவிலான சண்டைக் காட்சிகள், மது அருந்தும் காட்சிகள் மற்றும் மோசமான வார்த்தைகள் உள்ளதால், குழந்தைகள் அப்படத்தை பார்ப்பதை அனுமதிக்க முடியாது என்று தெரிவித்துள்ளது.


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389




## நலம் தரும் மருத்துவம்

## ஆரோக்கியமாக வாழ ஆசையா? இதை பின்பற்றுங்கள்!



வயிற்றில் இருக்கும் சீரான நுண்ணுயிரிகள் நோய் தடுப்பு இயக்கமாக, சத்துகளை கிரகிக்க உதவுகிறது. அதுவே, சீரற்ற நுண்ணுயிரிகள் வயிற்றிரைச்சல், அஜீரணம் உள்ளிட்டவற்றை ஏற்படுத்தும்.

எனவே, வயிறை ஒருவர் சரியாக பராமரித்தாலே போதும் என்கிறார் சௌரவ் சேதி.

இவர் தன்னுடைய இன்ஸ்டாகிராம் பக்கத்தில், காலையில் எழுந்ததும் கடைப்பிடிக்க வேண்டிய 10 விஷயங்கள் குறித்து விவரித்துள்ளார். இவரது டிப்ஸ் எல்லாமே, அறிவியல்பூர்வமாக பரிசோதிக்கப்பட்டு, உடல்நிலையில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் மிக எளிய வழக்கங்கள் என்கிறார்.

சூடான நீருடன் நாளைத் தொடங்குங்கள் என்கிறார். 7 - 8 மணி நேர உறக்கத்துக்குப் பிறகு நமது உடல் நீர்ச்சத்தை சற்று இழந்திருக்கும். எனவே, காலையில் எழுந்ததும் வெதுவெதுப்பான நீரை அருந்தினால், அது வயிறு தனது வழக்கமான வேலையைச் செய்வதை எளிதாக்கும்.

**கூடுதல் டிப்ஸ்:** இதில் ஒரு சில சொட்டு எலுமிச்சை சாறு பிழிந்தால், குடலில் இருக்கும் கழிவுகளை வெளியேற்ற உதவும். காலையில் வெறும் வயிற்றில் காபி அல்லது தேநீர் அருந்துவதால் ஏற்படும் எரிச்சல் போன்றவை தவிர்க்கப்படும்.

### ரத்த ஓட்டத்தை சீராக்கும்

அடுத்து காலை உணவை ஜீரணம் செய்வதற்கு ஆயத்தமாகும். உடல் பயிற்சி எல்லாம் வேண்டாம். உடலை சற்று அசைத்தால்கூட போதும். கைகளை வீசி நடப்பது, அமர்ந்து எழுவது, தோப்புக்கரணம் போடுவது போன்ற மிக மிக எளிதான அசைவுகளை செய்யலாம். சுமார் 10 - 15 நிமிடங்களாவது கைகால்களை அசைத்துகுனிந்துநிமிர்ந்து உங்களுக்குத் தெரிந்ததை செய்யலாம்.

### நார்ச்சத்து உணவுகளைத் தேடுங்கள்

உலர் பழங்கள், கொட்டை வகைகள் சேர்ந்த ஓட்ஸ் கஞ்சி, பாதாம் பால், வாழைப்பழம் போன்றவை ஏற்றது. ஒரு நாள் காலை உணவில் 5 - 8 கிராம் நார்ச்சத்துள்ள உணவாவது இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

### மதிய உணவில் புரதம்

செரிமானப் பகுதிகளில் ஏற்படும் பாதிப்புகளை சரி செய்ய புரதம்தான் தேவை. எனவே மதிய உணவில் நிச்சயம் புரதம் இருக்க வேண்டும். கூடுதலாக நார்ச்சத்தும் சேர்ந்துகொண்டால் அருமை. தயிர், தேன், பருப்புகள், முட்டை, பன்னீர் போன்றவற்றில் புரதம் உள்ளது.

### சாப்பிடும்போது போன் பார்க்க வேண்டாம்

போனைபார்த்துக் கொண்டே சாப்பிடுவதால் என்ன நேரிடும் என்றால், அதனால் ஏற்படும் அழுத்தத்தை உடல் எதிர்கொள்ளும். ஜீரண சக்தி குறையும். சிலர் அதிகம் சாப்பிடும் அபாயம் உள்ளது. மூளை போனைப் பார்த்துக் கொண்டிருக்கும். போதும் என வயிறு சொன்னதை கவனிக்காமல் விட்டுவிடும் அபாயம் உள்ளது போல.

### இஞ்சி தேநீர் அல்லது எலுமிச்சை சாறு

மாலையில் இஞ்சி தேநீர் அல்லது எலுமிச்சை சாறு அருந்தலாம். எலுமிச்சையில் விட்டமின் சி உள்ளது. பொதுவாக வெதுவெதுப்பாகவே குடிக்கவும்.

### காலையில் இனிப்பு வேண்டாம்

வழக்கமாக காலையிலேயே இனிப்பான உணவுகள் வேண்டாம் என்கிறார். சூரிய வெளிச்சத்தில் குறைந்தது 10 - 15 நிமிடங்களாவது நிற்கலாம். காலையில் சூரிய வெளிச்சத்திலிருந்து விட்டமின் டி கிடைக்கும்.

# பொறியியல் கலந்தாய்வு: கடந்த 10 ஆண்டுகளில் முதல் முறை! 81% மாணவ சேர்க்கை!

ஊட்டி, ஆக.30:

தமிழகத்தில் உள்ள பொறியியல் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டு இடங்களில், இதுவரை இல்லாத அளவுக்கு இந்த ஆண்டு 1.72 லட்சம் பொறியியல் மாணவர் சேர்க்கை இடங்களில் 80.29 சதவீத இடங்கள் அதாவது நிரம்பியிருக்கின்றன.

கடந்தஆண்டைக்காட்டிலும் இந்த ஆண்டு கலந்தாய்வு மூலம் 10 சதவீதம் கூடுதலாக மாணவர் சேர்க்கை நடைபெற்றுள்ளது.



தமிழகத்தில் மொத்தமுள்ள 423 கல்லூரிகளில் 1,72,589 மாணவர் சேர்க்கை இடங்கள் உள்ளன. இதில், கலந்தாய்வு மூலம் 1,38,573 இடங்கள் நிரம்பின. 34,016 இடங்கள் காலியாக உள்ளன. கடந்த ஆண்டு 71 சதவீத இடங்கள் மட்டுமே நிரம்பியிருந்தன.

கடந்த 2015ஆம் ஆண்டில் 1.93 லட்சம் மாணவர் சர்க்கை இடங்களில் 90,000 இடங்கள் காலியாகவே இருந்தன. அது முதலே, ஒவ்வொரு ஆண்டும் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சேர்க்கைஇடங்கள் காலியாகவே விடப்பட்டிருந்தன. ஆனால், இந்த ஆண்டு மாணவர்கள் பொறியியல் படிப்புகளில் ஆர்வத்துடன் சேர்ந்தனர் என்று அண்ணா பல்கலை பேராசிரியர் கூறியிருக்கிறார்.

பல கல்லூரிகளில் வளாகத் தேர்வுகள், புதிய வளர்ந்துவரும் தொழில்நுட்பத்துக்கு ஏற்படி தேவை அதிகரிக்கும் என எதிர்பார்ப்பு போன்றவை, வணிகம் மற்றும் அறிவியல் பாடங்களைத் தாண்டி மாணவர்களை பொறியியல் படிப்புகளில் சேர வைத்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

வழக்கமான நிலையைக் காட்டிலும் இந்த ஆண்டு அடிப்படைப் படிப்புகளான சிவில் மற்றும் மெக்கானிக்கல் பொறியியல் படிப்புகளில் மாணவர்கள் ஆர்வத்துடன் சேர்ந்துள்ளனர். இந்த ஆண்டு 70 சதவீத மாணவர்கள் கோர் படிப்புகளில்தான் சேர்ந்திருக்கிறார்கள். 57 கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை முழுமையாக நிறைவு பெற்றிருக்கிறது. 184 கல்லூரிகளில் 90 சதவீதம் நிரம்பியிருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த ஆண்டு டெக்ஸ்டைல் கெமிஸ்ட்ரி, இன்டஸ்டிரியல் பொறியியல், மரைன் பொறியியல் உள்ளிட்டவற்றில் குறைவான சேர்க்கை நடந்துள்ளது.

# காத்திருப்போர் பட்டியல் அதிகரிப்பு எதிரொலி: முக்கிய ரெயில்களில் கூடுதல் பெட்டிகள் இணைப்பு

**சென்னை, ஆக.30:**

முக்கிய ரெயில்களில் குறிப்பிட்ட நாட்களுக்கு கூடுதல் பெட்டிகள் இணைக்கப்படுவதாக தெற்கு ரெயில்வே அறிவித்துள்ளது.



தமிழகம் மற்றும் கேரள ரெயில்களில் பயணிகள் கூட்டம் நிரம்பி வழிகிறது. முன்பதிவு பெட்டிகளில் இடம் கிடைக்காமல், காத்திருப்போர் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. இதனால், முக்கிய ரெயில்களில் குறிப்பிட்ட நாட்களுக்கு கூடுதல் பெட்டிகள் இணைக்கப்படுவதாக தெற்கு ரெயில்வே அறிவித்துள்ளது. இதனால், காத்திருப்போர் பட்டியலில் இடம்பிடித்தவர்களுக்கு உறுதிப்படுத்தப்பட்ட படுக்கைகள் கிடைக்கும். இது தொடர்பாக, தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தாம்பரம் - செங்கோட்டை இடையே இயக்கப்பட்டு வரும் சிலம்பு எக்ஸ்பிரஸ் ரெயிலில் கூடுதலாக பெட்டிகள் இணைக்கப்பட இருக்கிறது. அந்த வகையில், தாம்பரத்தில் இருந்து வரும் 29 (நாளை), 30, 31 ஆகிய தேதிகளில் புறப்படும் ரெயிலில் 2-ம் வகுப்பு ஏ.சி. பெட்டி ஒன்று, 3-ம் வகுப்பு ஏ.சி. பெட்டி 2, தூங்கும் வசதி பெட்டி 3 ஆகியவை கூடுதலாக இணைக்கப்படுகின்றன.
இதேபோல்,செங்கோட்டையில் இருந்து சென்னை வரும் ரெயிலில் 30, 31, செப்டம்பர் 1 ஆகிய தேதிகளில் இதேபோல் கூடுதல் பெட்டிகள் இணைக்கப்படுகின்றன.

மேலும், தாம்பரம் - நாகர்கோவில் இடையே இயக்கப்படும் அதிவிரைவு ரெயிலில் (வண்டி எண் 22657/22658), தாம்பரத்தில் இருந்து 29, 30, 31 ஆகிய தேதிகளில் ஒரு 2-ம் வகுப்பு ஏ.சி. பெட்டி, 2 மூன்றாம் வகுப்பு ஏ.சி. பெட்டி, 3 தூங்கும் வசதி பெட்டி, ஒரு பொதுப் பெட்டி ஆகியவை இணைக்கப்படுகிறது. மறுமார்க்கத்தில், நாகர்கோவிலில் இருந்து இயக்கப்படும் ரெயிலில் 30, 31, செப்டம்பர் 1 ஆகிய தேதிகளில் இதேபோல் கூடுதல் பெட்டிகள் இணைக்கப்படுகின்றன.

இதேபோல், சென்னை எம்.ஜி.ஆர். சென்டிரல் - திருவனந்தபுரம் இடையே இயக்கப்படும் அதிவிரைவு ரெயிலில் (12695/12696), சென்னை சென்டிரலில் இருந்து 31, செப்டம்பர் 1, 2 ஆகிய தேதிகளில் கூடுதலாக 2-ம் வகுப்பு ஏ.சி. பெட்டி ஒன்று இணைக்கப்படுகிறது. மறுமார்க்கத்தில் திருவனந்தபுரத்தில் இருந்து செப்டம்பர் 1, 2, 3 ஆகிய தேதிகளில் கூடுதல் பெட்டி இணைக்கப்படுகிறது.




## அண்ணா பல்கலைக்கழகத்தில் செயற்கை நுண்ணறிவு பாடம் கட்டாயம்

**சென்னை, ஆக.30:**

சென்னை அண்ணா பல்கலைக்கழக பொறியியல் படிப்புகளில் செயற்கை நுண்ணறிவுப் பாடம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொறியியல் இளங்கலை படிப்புகளில் உள்ள பாடங்களில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. அதன்படி செயற்கை நுண்ணறிவு பாடம் கட்டாயமாக அறிவிக்கப் பட்டு சேர்க்கப்பட்டுள்ளது. மேலும் டேட்டா சயின்ஸ், இயந்திர கற்றல், தயாரிப்பு மேம்பாடு, கண்டுபிடிப்புகள், காலநிலை மாற்றம், வாழ்க்கைத் திறன்கள், உடற்கல்வி பாடங்களும் புதிதாக சேர்க்கப் பட்டுள்ளன. அண்ணா பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரிகளி லும் இந்த புதிய பாடத்திட்டம் கடைப்பிடிக்கப்பட உள்ளது. மாற்றம் செய்யப்பட்ட பாடத்திட்டம் வேலைவாய்ப்பு மற்றும் மேற்படிப்புக்கான வாய்ப்புகளை அதிகரிக்கும் என அண்ணா பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

## டிரம்ப் வரி விதிப்பு தாக்குதல்: இரா. முத்தரசன் கண்டனம்

**சென்னை, ஆக.30:**

அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் இந்தியா உள்ளிட்ட நாடுகள் மீது வரி விதிப்பு தாக்குதல் நடத்தி வருவதாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் இரா. முத்தரசன் குற்றம் சாட்டினார்.

இதுதொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அவர்,

“இரண்டாம் முறையாக பொறுப்பேற்ற பிறகு, டிரம்ப் அமெரிக்காவில் இறக்குமதியாகும் வெளிநாட்டு பொருட்கள் மீதான வரி விகிதங்களை கற்பனை செய்ய முடியாத அளவில் உயர்த்தியுள்ளார். இந்தியாவில் இருந்து அமெரிக்கா இறக்குமதி செய்யும் பொருட்களுக்கு 25 சத விகிதம் கூடுதல் வரியும், அபராதமாக 25 சதவிகிதமும் என மொத்தம் 50 சதவிகித வரி வசூலிக்கப்படுகிறது. இந்த வரிவிதிப்பால் இந்தியா 4 ஆயிரத்து 820 கோடி டாலர் மதிப்புள்ள வணிக வாய்ப்பை இழக்கும் என மதிப் பிடப்பட்டுள்ளது. ஜவுளி, ஆபரணங்கள், இறால், தோல், காலணி, மின்சார சாதனங்கள் போன்ற தொழில்கள் கடுமையாக பாதிக்கும்” என எச்சரித்துள்ளார்.

திருப்பூர், திண்டுக்கல், ஈரோடு, சேலம் உள்பட தமிழ்நாடு முழுவதும் இந்த வரிவிதிப்பால் கடுமையான பாதிப்பு ஏற்படும் என்பதை கருத்தில் கொண்டு, ஒன்றிய அரசு பொருத்தமான மாற்று திட்டங்களையும் வரிச் சலுகைகளையும் உருவாக்க வேண்டும் என இரா. முத்தரசன் வலியுறுத்தியுள்ளார்.

## கனமழை எச்சரிக்கை!

**சென்னை, ஆக.30:**

செப்டம்பர் 2 வரை தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மற்றும் கன மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## வர்த்தகம் ஆயுதமாக்கப்பட்டுவிட்டது; ரிசர்வ் வங்கி முன்னாள் கவர்னர் ரகுராம் ராஜன்

**புதுடெல்லி, ஆக.30:**

ரஷியாவிடமிருந்து கச்சா எண்ணெய் கொள்முதல் செய்வதை நிறுத்துமாறு இந்தியாவுக்கு அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் மிரட்டல் விடுத்து வருகிறார். மேலும், கச்சா எண்ணெய் கொள்முதல் செய்வதால் அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் இந்திய பொருட்களுக்கு 50 சதவீத வரி விதித்துள்ளார். இந்திய பொருட்கள் மீதான அமெரிக்காவின் கூடுதல் இறக்குமதி வரி விதிப்பு நேற்று முதல் அமலுக்கு வந்துள்ளது. இதனால், இந்தியா , அமெரிக்கா இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், வர்த்தகம் ஆயுதமாக்கப்பட்டுவிட்டதாக ரிசர்வ் வங்கி முன்னாள் கவர்னர் ரகுராம் ராஜன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறுகையில், இந்த விவகாரம் இந்தியா விழித்துக்கொள்ள விடுக்கப்பட்ட எச்சரிக்கை. வர்த்தகம் தொடர்பாக ஒரே ஒரு நாட்டை மட்டும் இந்தியா சார்ந்து இருக்கக்கூடாது. ஐரோப்பியா, ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகளில் வர்த்தகத்தை இந்தியா விரிவுபடுத்த வேண்டும். அதேவேளை, நாட்டின் பொருளாதார வளர்ச்சி 8 முதல் 8.5 வரை அதிகரிக்க பொருளாதாரத்தில் சீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

வர்த்தகம், முதலீடு, நிதி என அனைத்தும் ஆயுதமாக்கப்பட்டுவிட்டது. நமது ஏற்றுமதி சந்தைக்கு மாற்று வழிகளை கண்டறிய வேண்டும். சீனா, ஜப்பான், அமெரிக்கா அல்லது எந்த நாட்டிடனும் வர்த்தகம் செய்யலாம். ஆனால், ஒருநாட்டை மட்டும் சார்ந்து இருக்கக்கூடாது. மாற்று சந்தைகளை கண்டுபிடித்து தற்சார்பு நிலையை அடைய வேண்டும். இந்தியா, அமெரிக்கா இடையேயான உறவில் முறிவு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

## 34.5 பில்லியன் டாலர் கொடுத்து கூகுள் குரோம்-ஐ விலைக்கு வாங்க முன்வந்த Perplexity ஏ.ஐ. நிறுவனம்!

உலகின் பிரபலமான தேடல் தலமான கூகுள் குரோமை வாங்க செயற்கை நுண்ணறிவு (AI) ஸ்டார்ட்அப் நிறுவனமான பெர்ப்ளெக்ஸிட்டி (Perplexity) முன்வந்துள்ளது.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அரவிந்த் ஸ்ரீனிவாஸ் தலைமையிலான Perplexity நிறுவனம், குரோமுக்கு 34.5 பில்லியன் டாலர் (தோராயமாக ரூ. 3.02 லட்சம் கோடி) சலுகையை வழங்கியுள்ளது. இது Perplexity நிறுவனத்தின் மதிப்பை விட 2 மடங்கு அதிகம் ஆகும். அமெரிக்க அரசாங்கத்தின், நம்பகத்தன்மை இன்மை குற்றச்சாட்டுகளால் கூகிள் தற்போது கடுமையான அழுத்தத்தை எதிர்கொள்கிறது. தேடுபொறி சந்தையில் ஏகபோகத்தைத் தடுக்க குரோமை விற்க வேண்டும் என்று அமெரிக்க நீதித்துறை பரிந்துரைத்து வரும் நேரத்தில், பெர்ப்ளெக்ஸிட்டி இந்த மிகப்பெரிய சலுகையை வழங்கி உள்ளது.

இந்த ஒப்பந்தத்திற்குத் தேவையான நிதி வெளிப்புற முதலீட்டாளர்கள் மூலம் திரட்டப்படும் என்று பெர்ப்ளெக்ஸிட்டி தலைமை வணிக அதிகாரி டிமிட்ரி ஷெவெலென்கோ தெரிவித்தார்.

ப்ளூம்பெர்க்கின் கூற்றுப்படி, பல முதலீட்டாளர்கள் ஏற்கனவே ஒப்பந்தத்திற்கு முழு நிதி ஆதரவை வழங்க ஒப்புக்கொண்டுள்ளனர்.

சலுகையைஉறுதிப்படுத்தியபெர்ப்ளெக்ஸிட்டி, ஒப்பந்தம் வெற்றியடைந்தால் குரோமில் முக்கிய மாற்றங்கள் எதுவும் செய்யப்படாது என்று விளக்கம் அளித்தது.

# 22,000 விநாயகர் சிலைகள் கண்காட்சி தொடக்கம்

**சென்னை, ஆக.30:**

குரோம்பேட்டையில் 22,000 சிலைகளுடன் கூடிய விநாயகர் சிலை கண்காட்சியை குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் புதன்கிழமை தொடங்கி வைத்தார்.



கட்டடக் கலைஞரும், விநாயகர் பக்தருமான சீனிவாசன்,குரோம்பேட்டை ராதா நகர், அனுமார் கோயில் தெருவில் 18 ஆண்டுகளாக விநாயகர் சிலைகளைக் கொண்ட கண்காட்சியை நடத்தி வருகிறார். நிகழாண்டு கண்காட்சியை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடங்கி வைத்தார்.

கண்காட்சி குறித்து கட்டட கலைஞர் சீனிவாசன் கூறியதாவது: ஒவ்வொரு ஆண்டும் புதிது புதிதாக பல்வேறு தோற்றங்களில் விநாயகர் சிலைகளை இடம் பெறச் செய்து மக்களின் பேராதரவுடன் கண்காட்சியை நடத்தி வருகிறேன். கண்காட்சியில் பசுமை விநாயகர் சிலைகளை இடம் பெறச் செய்து மக்கள் மத்தியில் பக்தியுடன் சுற்றுச்சூழல் விழிப்புணர்வையும் ஏற்படுத்துகிறோம்.

சபரிமலை ஐயப்பன், கள்ளிக்கோட்டை விநாயகர், மலைக்கோட்டை விநாயகர் கோயில்களில் உள்ள மூலவர் சிலைகளைப் போன்ற விநாயகர் சிலைகளும், தேரில் வலம் வரும் விநாயகர், நிலவில் நடந்து வரும் விநாயகர் போன்ற சிலைகளை கண்காட்சியில் இடம் பெறச் செய்துள்ளோம். கண்காட்சியை செப்டம்பர் 7- ஆம் தேதி வரை காலை 9 மணி முதல் இரவு 7 மணி வரை பக்தர்கள் காணலாம் என்றார்.

கண்காட்சியை பல்லாவரம் சட்டப்பேரவை உறுப்பினர் இ.கருணாநிதி, துணை மேயர் காமராஜ், மாநகராட்சி மண்டலத் தலைவர் ஜோசப் அண்ணாத்துரை உள்ளிட்ட பலர் பார்வையிட்டனர்.

# ராஜஸ்தான்: 55வது வயதில் 17வது குழந்தையை பெற்ற பெண்

**ஜெய்ப்பூர், ஆக.30:**

ராஜஸ்தான் மாநிலம் உதம்பூர் மாவட்டம் லிலாவாஸ் கிராமத்தை சேர்ந்தவர் கவர ராம் கல்பெலியா. இவரது மனைவி ரேகா (வயது 55). கவர ராம் பழைய இரும்பு பொருட்களை வாங்கி, விற்கும் தொழில் செய்து வருகிறார்.

கவர ராமின் மனைவி ரேகா ஏற்கனவே 16 குழந்தைகளை பெற்றெடுத்த நிலையில் அவர் மீண்டும் கர்ப்பமடைந்துள்ளார்.

இந்நிலையில், ரேகா நேற்று 17வது குழந்தையை பெற்றெடுத்தார். ஏற்கனவெ பிரசவத்தின் போது ரேகாவிற்கு 6 குழந்தைகள் (ஒரு பெண் குழந்தை உள்பட) உயிரிழந்துவிட்டன. எஞ்சிய 11 பிள்ளைகளுடன் ரேகா , கவர ராம் தம்பதி வாழ்ந்து வந்தனர். தற்போதுரேகாவுக்கு 17வது குழந்தை பிறந்துள்ளது.

இது தனக்கு 4வது குழந்தை என பொய்யாக கூறி ரேகா மருத்துவமனையில் சேர்ந்துள்ளார். அவருக்கு பிரசவம் பார்த்த பின்னரே இது அவரின் 17வது குழந்தை என மருத்துவமனை நிர்வாகத்திற்கு தெரியவந்துள்ளது. தாயும் சேயும் நலமுடன் உள்ளதாகவும் ஆனால் தொடர்ச்சியான கர்ப்பத்தால் ரேகாவின் உயிருக்கே ஆபத்தான சூழ்நிலை ஏற்படலாம் என டாக்டர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். தனக்கு பிறந்த பிள்ளைகள் யாரையும் கவர ராம் கல்வி படிக்க வைக்கவில்லை.

அதேவேளை, ரேகாவின் பிள்ளைகளில் 2 மகன்கள், 3 மகன்களுக்கு ஏற்கனவே திருமணமாகி அவர்களுக்கும் குழந்தை உள்ளது என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது.

# ‘காற்று மாசு காரணமாக இந்தியர்களின் ஆயுட்காலம் குறைகிறது’ - ஆய்வில் அதிர்ச்சி தகவல்

**புதுடெல்லி, ஆக.30:**

இந்தியாவின் காற்று மாசு குறியீடு உலக சுகாதார மையத்தின் தர நிர்ணய அளவை விட 8 மடங்கு அதிகமாக உள்ளது.



உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட நாடுகளின் பட்டியலில், 2025 நிலவரப்படி இந்தியா 146 கோடி மக்கள் தொகையுடன் முதல் இடத்தில் உள்ளது. இந்தியாவிற்கு அடுத்ததாக சீனா, 142 கோடி மக்கள் தொகையுடன் இரண்டாம் இடத்தில் உள்ளது. இந்தியாவின் மக்கள் தொகை தொடர்ந்து அதிகரிக்கும் என்றும், 2060-ம் ஆண்டில் இந்தியாவின் மக்கள் தொகை சுமார் 165 கோடியாக இருக்கும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இத்தனை பெரிய மக்கள் தொகையை கொண்ட இந்திய நாட்டில், சுற்றுச்சூழல் மாசுபாடு என்பது தவிர்க்க முடியாத சவாலாக மாறி வருகிறது. அதிலும் குறிப்பாக இந்திய நகரங்களில் காற்று மாசுபாடு மிக மோசமான நிலைக்கு சென்று கொண்டிருக்கிறது. காற்று மாசு குறித்து உலக சுகாதார மையம் வெளியிட்டுள்ள சராசரி அளவுகளை விட, அதிகமான காற்று மாசு கொண்ட பகுதிகளிலேயே பெரும்பாலான இந்திய மக்கள் வாழ்ந்து வருவதாக புதிய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இந்தியர்களின் சராசரி ஆயுட்காலம் குறைந்து வருவதாக ஆய்வில் அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது. அமெரிக்காவின் சிகாகோ பல்கலைக்கழகத்தில் உள்ள எரிசக்தி கொள்கை நிறுவனம் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் இந்த தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தியாவில் 2022-ம் ஆண்டை விட 2023-ம் ஆண்டில் PM2.5 செறிவு அதிகமாக இருந்ததாக அதில் கூறப்பட்டுள்ளது.

PM2.5 செறிவு என்பது காற்றில் உள்ள நுண்ணிய துகள்களின் அளவைக் குறிக்கிறது. இது காற்று மாசுபாட்டின் முக்கிய குறியீடாகும். இந்தியாவை பொறுத்தவரை இந்த குறியீடு உலக சுகாதார மையத்தின் தர நிர்ணய அளவை விட 8 மடங்கு அதிகமாக உள்ளது. இதனால் சரசரியாக இந்தியர்களின் ஆயுட்காலம் சுமார் 3.5 ஆண்டுகள் குறைகிறது என ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதே சமயம் காற்றின் தரத்தை சர்வதேச அளவீடுகளுக்கு இணையாக உயர்த்தினால் இந்திய மக்கள் தொகையில் சுமார் 46 சதவீதம் பேரின் ஆயுட்காலம் 1.5 ஆண்டுகள் வரை அதிகரிக்கக்கூடும் என மதிப்பிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# தந்தையின் மகள்



பெண் பார்க்க வந்திருந்த மாப்பிள்ளை வீட்டார் வெளியேறியதும் சுகந்தியைச் சுற்றி அமர்ந்தனர் அவளுடைய அம்மா, தங்கை மற்றும் அண்ணன் ரகு.

"த பாரு சுகந்தி... எங்க எல்லோருக்கும் மாப்பிள்ளை லட்சுமணனை ரொம்பப் பிடிச்சிருக்கு!... அதே மாதிரி அவர் வீட்டு சைடிலேயும் எல்லோருக்கும் முழு திருப்தி!... நீ மட்டும் ஓ.கே. சொல்லிட்டேன்னா... அடுத்த முகூர்த்தத்திலேயே "டும்.... டும்"தான்" என்றான் ரகு.

அதேநேரம் உள் அறையில் தனியே அமர்ந்திருந்த சுகந்தியின் தந்தை ராகவன் முகத்தில் இனம் புரியாத இறுக்கம்.

"சொல்லு சுகந்தி... உன் மனசுல இருக்கிறதைச்... சொல்லு!... "யெஸ்.. ஆர்... நோ"... சொல்லு!" சுகந்தியின் தங்கை லலிதா கேட்டாள்.

சுகந்தியிடமிருந்து எந்த பதிலும் வரவில்லை.

"ஏய் என்னடி ஆச்சு உனக்கு?... உன் கூடப் பொறந்த அண்ணனும்... தங்கையும் எவ்வளவு ஆசையா கேக்குறாங்க?... சொல்லுடி... உன்னோட பதிலை!" தாயார் கற்பகமும் கடுப்படித்தாள்.

உள் அறையில் அமர்ந்திருந்த ராகவன் ஒரு நெடிய பெருமூச்சை நிதானமாக வெளியிட்டார்.

"சுகந்தி... நீ அமைதியா இருக்கிறதைப் பார்த்தா எனக்கு வேற மாதிரிச் சந்தேகம் வருது"என்றான் ரகு.

"ஆமாம்டி எனக்கும்தான்... வேற எவனையாச்சும் காதலிச்சு தொலைச்சிட்டியோ?ன்னு சந்தேகமாயிருக்கு" என்றாள் தாயார் கற்பகமும்.

தாயின் அந்த வார்த்தைகள் சுகந்தியின் சுயத்தைச் சுட்டு விட எல்லோரையும் கையமர்த்தியபடி, "எனக்கு இந்த மாப்பிள்ளை வேண்டாம்!" என்றாள்.

"ஏன்... ஏன்... என்ன... என்ன குறைச்சல்?... ஆளும் நன்றாகத்தான் இருக்கிறார்... கவர்மெண்ட் சம்பளக்காரரர் வேற!..." படபடத்தாள் கற்பகம்.

"எந்தக் குறைச்சலும் இல்லை... எல்லாம் ஓ.கே. தான் ஆனா....." சுகந்தி இழுத்தாள்.

"என்னடி?... ஆனா?... ஆவன்னா?".

"மாப்பிள்ளை கவர்மெண்ட் சம்பளக்காரர் மட்டுமில்லை.. சரியான கிம்பளக்காரரும் கூட"

"அது எப்படிடி உனக்குத் தெரியும்?".

"விசாரிச்சிட்டேனே... என்னோட வாழ்க்கையே அவர் கையில் ஒப்படைக்கப் போறேன்... அப்படியிருக்கும்போது அவரைப் பற்றி விசாரிக்காமல் இருப்பேனா?... நல்லாவே விசாரிச்சுட்டு நல்லாவே விசாரிச்சிட்டேன்!... சரியான கிம்பளக்காராம்!... ரெண்டு கையிலும் வாங்குவாராம்"

"சரி... அதிலென்ன தப்பு?... இப்பல்லாம் சம்பளத்தை மட்டும் நம்பிக்கிட்டிருந்தா குடும்ப வண்டி ஓட்ட முடியாதுடி!... கொஞ்சம் கிம்பளமும் வந்தால்தான் குடும்பம் நடத்த சரியா இருக்கும்!" என்றாள் கற்பகம்.

"அதுக்கு பதிலா பிச்சை எடுக்கலாமே?" சுகந்தி "வெடுக்"கென்று சொல்ல.

உள் அறையில் நிமிர்ந்து அமர்ந்தார் ராகவன்.

"அம்மா முப்பத்தியாறு வருஷமாக கவர்மெண்ட் உத்தியோகத்திலிருந்து... பத்து பைசா கூட லஞ்சம் வாங்காம.... ரிடையர்ட் ஆன.... ராகவன் சாரோட மகள் நான்!... உயிரே போனாலும் ஒரு லஞ்சப்பிரபுவுக்கு கழுத்தை நீட்ட மாட்டேன்"

உள் அறையிலிருந்து வேகமாய் வந்த ராகவன், நேரே சுகந்தியிடம் சென்று, அவள் கைகளைப் பற்றிக் கொண்டு தழுதழுத்தார்.

"எனக்கு அவனைப் பற்றி ஏற்கெனவே தெரியும்மா... ஒரு லஞ்சப் பேர்வழிக்கு மகனை கட்டிக் கொடுப்பதில் எனக்குத் துளியும் விருப்பமில்லை!... நான் அதைச் சொன்னால் இந்த குடும்பத்தில் இருக்கிற எல்லோரும் என்னை எதிரி மாதிரி பார்ப்பாங்க!... திட்டித் தீர்ப்பாங்க!...ன்னு பயந்து... தர்மசங்கடத்தில் உட்கார்ந்திருந்தேன்!... என்னை காப்பாத்திட்டியம்மா.... என் மகள்ன்னு நிரூபிச்சிட்டேம்மா"

மற்றவர்கள் முணுமுணுத்துக் கொண்டே அங்கிருந்து நகர, அதைப்பற்றி தந்தையும் மகளும் துளியும் கவலைப்படாமல் நின்றனர்.



-முகில் தினகரன்
கோயம்புத்தூர்.

# கணபதி லீலைகள்



வினு கையில் வைத்திருந்த பர்ஸை நெஞ்சோடு அணைத்தவாறு வீட்டிற்குள் வந்தாள் .முகத்தில் அவளறியாமல் வெட்கமும் அதைத்தொடர்ந்து சிரிப்பும் பொங்குவதை தவிர்க்க முயன்றும் முடியாத நிலையில் , சோஃபாவில் காலேஜ் பேகை சரித்தவள் அப்படியே ஒரு கால் மட்க்கி அமர்ந்து நெஞ்சில் பர்ஸை வைத்து தடவிக்கொடுத்தாள்..

மகள் செப்பல் சத்தம் கேட்டதுமே.
கையில் காஃபியோடு கிச்சனிலிருந்து வெளிவந்த மல்லிகாவுக்கு தன் மகளின் போக்கில் சட்னு மாற்றமிருந்தது புரிந்தது.இல்லனா எப்பவும் செல்லும் கையுமாதானே உக்காந்திப்பாள்..
"என்னாடி வெச்சிருக்க பர்ஸுல"..அவள் சுதாரிக்கும்முன் பர்ஸை திறக்க..ஒரே சந்தன வாசம்..
இதென்ன சோப்பு..
ஒரு மெல்லிய பேப்பரில் சுற்றப்பட்டிருந்த சோப்பை வெளியே எடுத்தவரிடம்..
"ம்மா..என் ஃப்ரெண்டு ஜூலியோட கிஃப்ட் மா..
விநாயக சதுர்த்திக்கு ஆசையா கிராஃப்ட் பண்ணி குடுத்திருக்கா பாருங்க.."எச்சில் முழுங்கியவாறு வந்து, அதனை அவள் பிடுங்காத குறையாக மீண்டும் பர்ஸுக்குள் வைத்து ரூமுக்குள் சென்று விட்டாள்..
பல்லை பல்லை காமிக்கும் மகளை ,தன் மகன் விஜயிடம் போட்டுக்குடுக்க..
அவனும்நோட்டமிட்டு சந்தேகத்தை உறுதி செய்தான்..
விநாயக சதுர்த்தி லீவு நாளென்று சற்று லேட்டாக எழுந்து வந்த வினோ,
காலையிலேயே குளித்து முடித்து அமர்ந்திருந்த விஜயை ஏற்ற இறக்கத்துடன் பார்த்தாள்.
"என்னடா அண்ணா..புச்சா காலையில குளிச்சிருக்க..
அம்மா அர்ச்சனை பண்ணுனாதான குளிக்கவே செய்வ
.இல்லனா டஷர்ட்ல சென்ட் அடிச்சிக்கிட்டு காலேஜ் கிளம்புவ..புள்ளையாரப்பா புத்தி ஏதும் கொடுத்துட்டாரானு தெரியலியே!
இவளுக்கு காஃபி கொடுத்து போன அம்மாவிடமும் நல்ல வாசனை..அதே வாசம் விஜயிடமும் வருவதை பார்த்தவள்..திடுக்கிட்டு பாத்ரூம் ஓடினாள்..
அங்கு அவள் காதல் சின்னம்.. பாதிக்கு மேல் பிள்ளையார் கரைந்து அலங்கோலமாய் சோப்புடப்பாவில் அதுவும் தண்ணீரில் கிடக்க அப்படியே வெறுப்பில் கதவில் முட்டிக்கொண்டாள்.
"என்னாடி..சோப்பு தீந்துட்டு. அதான் உன் பர்ஸ்லேருந்து எடுத்து நான் குளிச்சேன். உன் அண்ணனும் வாசம் நல்லாருக்குனு குளிச்சிருக்கான் போல.."
"பர்ஸ்லேருந்து எடுத்தியா..?", குரலில் எரிச்சல் வழிவதை கட்டுப்படுத்தியவாறு கேட்டவளை..
" ஆமான்டி ..பர்ஸ்லதான வெச்சிருந்த.எப்படிடி உன் தலையனைக்கு அடியில போச்சி..வாசமா புடிச்சினு தூங்குன.."
நங்குனு பாத்ரூம் கதவை தாழிட்டவள்..அந்த சோப்பையே, கண்ணீரில் கரைந்தவாறு அதனையே ஆசையாகவும் வெட்கத்துடனும் மேனியெல்லாம் போட்டு குளித்தாள்..
"வாங்குன தாவணி உள்ள தூங்கிட்டுதான இருக்கு.. எடுத்து கட்டிக்கிட்டு அண்ணங்கூட பைக்குல அந்த பெரிய பிள்ளையார் கோவிலுக்கு போயிட்டு வா..
கேம்பஸ்ல வேலை கிடைச்சா.. சட்டு புட்டுனு மாப்பிள்ளைய பாக்க ஆரம்பிக்கலாம்.உங்க அப்பா ஃபாரின்லேருந்து வந்தவுடனே கல்யாணத்தை முடிக்கனும்.புத்திய அலைய உடாத சொல்லிட்டேன்.",
சூசகமா திட்டியவாறு அம்மா கிச்சனுக்குள் போக..அவள் அப்பா போனமுறை வந்தப்போ இவ்ள கேட்ட வெளிர் நீல பட்டுப்பாவாடை தாவனியை எடுத்து அணிந்து கொண்டாள்..
"வைபவ்க்கு இந்த சோப் மேட்டர் தெரிஞ்சா வருத்தப்படுவான்.கோபத்துல காதலையே தூக்கி போட்டாலும் சொல்றதுக்கில்லை,"
மனசுக்குள் புலம்பியவாறு கோவில் வாசலில் பைக்கிலிருந்து இறங்க..
" சீக்கிரம் வந்துடுறேன். கும்பிட்டு வந்து உக்காந்திரு..
கோவிலுக்குள்ள நான் வரலன்னு போட்டுக்குடுத்துடாத தெரியுதா?"
அண்ணனை மனதுக்குள் கறுவியவாறு ,செருப்பை கழட்டிவிட்டு கோவிலுக்குள் நுழைய..நல்லா இடிச்சிட்டான் ஒருத்தன்..
"டேய்!", என்று விரல் நீட்டியவாறு அவனை முறைக்க..அங்கு நின்னது,வைபவ்..
அப்படியே காணாமல் போனது கோபம்..
"சாரி..பாக்கல..", என்றவன் ஒரு முறை மூச்சை நன்கு இழுத்தான்..

"அந்த சோப்லியா குளிச்ச.. குடுத்து வெச்ச சோப்", என்று கூற வெட்கம் வந்தாலும் " ஷ்..இது கோவில் ..", என்று முனுமுனுக்க..

"நீ பத்ரமா வெச்சிப்பனு நெனச்சிதான் சோப்ல பிள்ளையார கார்வ் பண்ணி கொடுத்தேன்..ஆனா..நீ.. ஐயம் ரியலி ஹாப்பி.
அப்ப மாமா ஊருலேருந்து வந்தவுடனே .என் அம்மாட்ட சொல்லி பொண்ணு கேட்க சொல்லிடுறேன்.."
பல காலமாக ஏதோஉறவுமுறை சண்டையில் பேசாத அத்தை மகனிடம் பூத்த காதலை பிள்ளையாரே அனுமதிச்சதா .
இருவரும் சந்தோஷத்தில் மிதக்க ஆரம்பித்தனர்..

" ஏன்டா! அற்ப பதர்களா! எனக்கு வேற வேலையே இல்லைனு நெனச்சீங்களாடா..", என்று வாய் விட்டு கேட்க முடியாமல் அமைதியாய் பார்த்துக்கொண்டிருந்தார்.
வெளிப்பிரகார பிள்ளையார்..புது அங்கவஸ்த்திரம் வேஷ்டியில் அழகாய் எருக்கம்பூ மாலை அணிந்து....
"என் பாசமலர் தங்கச்சிய சின்ன சண்டையில பிரிஞ்சிட்டேன்.அவளை மீண்டும் இந்த முறை ஊருக்கு போறப்ப சேத்து வைப்பா பிள்ளையாரப்பா!", வெளிநாட்டில் தன் சூட்கேஸில் இருந்த தன் தங்கை சிறு வயதில் தீட்டிய விநாயகர் ஓவியத்தை பார்த்து தலையில் குட்டியவாறு வேண்டிக்கொண்டு தோப்புக்கரணம் போட்டார் வினு அப்பா..

புன்னகைத்தார் விநாயகர்.." ஃபவுண்டேஷன உன் மவளே போட்டாச்சி.வந்தவுடன கட்டடத்தை எழுப்பிடு", வடிவேலு பாணியில் பிள்ளையார் அருள் புரிந்தார்...



-உமாதேவி சேகர்
பியூட்டிஷியன், தஞ்சை

# வாழ்ந்தே தீருவோம் நீர்க்குமிழிப் பேச்சுகள்

அத்தியாயம் -17



■முனைவர்
க. அன்பழகன்
(ஹரணி)
கரந்தை.தஞ்சாவூர்




நீரில் விழுந்தவன் தப்பிக்க முடியாமல் தலைக்குமேல் நீர் போவதைப்போல, எல்லாமும் கைமீறிப்போய்விட்டன. மாதவனால் எதுவும் செய்யமுடியவில்லை. ஆகவே, இனி சரிவராது என்கிற நிலையில்தான் எல்லாவற்றையும் உதறிவிட்டுக் கிளம்பிவிட்டார். மரணம்தான் தீர்வு என்கிற ஒன்றைத் தீர்க்கமாக எடுத்துயோசித்தவர் அந்த நிலையிலிருந்து இல்லை ஏதாவது ஒன்றைப் பிரயோசனமாகச் செய்து சாகலாம் என்கிற நிலைக்கு மாறியது நல்ல விஷயந்தான்.

நினைவு கலைந்து பார்த்தார். பேருந்து போய்க்கொண்டிருந்தது. இன்னும் ஒன்றிரண்டு மணிநேரத்தில் சென்னைப்போய்விடும். அங்கே போய் எங்கே தங்குவது? யாரைப் பார்ப்பது? என்ன கேட்பது? என்கிற கேள்விகள் எல்லாம் அவருள் பூதாகாரம் எடுத்திருந்தன.

சரி இறங்கியதும் யோசிக்கலாம். என்று அப்போதைக்கு அந்த நினைவைத் தள்ளிப்போட்டார்.

என்ன சார்.. அப்பலேர்ந்து ஒரே யோசனையா இருக்கீங்க? ஏதும் பிரச்சினையா? உலகத்துல எல்லாருக்கும் பிரச்சினை இருக்கு.. சார்.. அதுக்காகப் போதும் வாழ்க்கைன்னு செத்துப்போயிடமுடியுமா? செத்துப்போறதுக்கா ஒவ்வொரு உயிரையும் படைசசிருக்கார் கடவுள்.. ஏதோ ஒரு வாழ்க்கை இருக்கு சார்.. நான் கொஞ்சம் அதிகம் பேசறேனா.. என் சுபாவம் இப்படி.. பட்டுன்னு பேசிடுவேன். ஒரு சொந்தக்காரனுக்குக் கூடப் பிடிக்காது. இப்படித் தொணத்தொணன்னு பேசறான்னு.. என் தலையக் கண்டா போதும் ஓடிடுவான். அதுக்காக நான் ஓடிப்போகமுடியுமா? பேசாம இருக்கமுடியுமா? பச்சோந்தி நிறம் மாறாதது அத்தோட பண்பு.. குற்றமில்ல..

எதற்கும் பதில் பேசவில்லை. ஆனால், அவர் பேசுவதைக் கேட்டார் மாதவன். யார் பேசினால் என்ன? சாவதற்காக ஓர் உயிரையும் கடவுள் படைக்கவில்லை. பிறப்புப் போல ,இறப்பும் ஒரு சம்பவம். இயல்பானது. வரும்போது வரட்டும். அதுவரை வாழலாம்.

சன்னலுக்கு வெளியே பார்த்தார் பேருந்து கோயம்பேடு பேருந்து நிலையத்திற்குள் நுழைந்துகொண்டிருந்தது. மாதவன் தன் உடைமைகளைச் சரிபாரத்துக்கொண்டார். இறங்கவேண்டும்.

அட.. அதுக்குள்ள கோயம்பேடு வந்துடுச்சா.. பேசிக்கிட்டே வந்ததுல தெரியல.. நான் வர்றேன் சார்.. ஏதும் தப்பா பேசியிருந்தா மனசுல வச்சுக்காதீங்க..

ஒரு நீர்க்குமிழித் தோன்றி உடைவதுபோல அந்த சகப் பயணி வந்து அமர்ந்து.. பயணித்து.. பேசி.. சட்டென்று இறங்கி மறைந்துபோய்விட்டார். இந்த சென்னையில் ஜனத்திரளில் அவர் ஒரு நினைவாகப் போய்விட்டார்.

பேருந்து நின்றது. இறங்கினார். நடத்துநர் கத்திக்கொண்டிருந்தார்.. இறங்குங்க.. பாத்து இறங்குங்க.. எதையும் விட்டுட்டுப்போயிடாதீங்க.. கவனமா எடுத்துக்கிட்டு இறங்குங்க..

மாதவன் இறங்கிப் பேருந்தை விட்டு சற்று தள்ளிப்போய் பிளாட்பாரத்தில் ஏறி நின்றார். பொருள்களை விட்டுட்டுப்போய்விடலாம். நினைவுகளை விட முடியுமா?

தன்னைத் தேடுவார்களா? என்று ஓர் எதிர்பார்ப்பு ஏக்கமாக அவருள் வந்தது. வா வென்று அழைப்பார்களா? தனக்காக வருத்தப்படுவார்களா? பாசம் இருக்குமா அப்பா என்று?

எல்லாக் கேள்விகளையும் வெயில் சூட்டோடு உள்ளுக்குள் இறுக்கி நடந்தார்.

இப்போது எங்கே போவது? யோசித்தபடி நடந்தார்.

அவருள் லேசாய் மயக்கம் வருவதுபோலத் தோனியது. தலை சுற்றியது. கண்களின் முன் தெரிந்த யாவும் வட்டமாகச் சுழல ஆரம்பித்தன. அப்படியே சரிந்து விழுந்தார்.

அய்யோ.. என்னங்க பெரியவரே என்றபடி யாரோ ஓடிவருவது கிணற்றுக்குள்ளிருந்து கேட்பதுபோலக் கேட்டது. மயங்கிவிட்டார் மாதவன்.

- தொடரும்

# இங்கே நிம்மதி இறைவனை அடையும் 10 வழிகள்...





காக்கும் கடவுளாக இருக்கும் மகாவிஷ்ணுவை வழிபடுபவர்களை, வைணவர்கள் என்று அழைக்கிறோம். பெருமாளை வழிபடும் இந்த வைணவர்கள், இறைவனை அடைவதற்காக மேற்கொள்ளும் வழிமுறை களின் பேரில் 10 விதமாக பிரிக்கப்பட்டுள்ளனர். அத்வேஷி, அனுகூலன், நாமதாரி, சக்ராங்கி, மந்திரபாடி, வைஷ்ணவன், ஸ்ரீவைஷ்ணவன், ப்ரபந்நன், ஏகாந்தி, பரம ஏகாந்தி என்ற அந்த 10 வித வைணவர்களைப் பற்றி இங்கே பார்ப்போம்.

**அத்வேஷி:-**
எந்த ஒரு இக்கட்டான சூழ்நிலையிலும், மகா விஷ்ணுவின் மீதும், அவரது அடியார்களிடத்திலும் வெறுப்பு கொள்ளாமல் இருப்பவன் 'அத்வேஷி.'

**அனுகூலன்:-**
ஒருவர் அத்வேஷியாக இருப்பதோடு, தினமும் பெருமாள் ஆலயங்களுக்குச் செல்வது, கோவில் உற்சவங்களில் பங்கேற்பது, அடியவர்களை போற்றி மரியாதை செய்வது, மற்ற வைணவர்களோடு இணைந்து பணியாற்றுவது என்று இவை அனைத்தையும் விருப்பத்துடன் செய்பவனே 'அனுகூலன்.'

**நாமதாரி:-**
மேலே குறிப்பிட்ட குணங்களோடு, மகா விஷ்ணுவின் ஆயிரம் திருநாமங்களில் ஏதாவது ஒன்றை, தன்னுடைய பெயராக வைத்திருப்பவன் 'நாமதாரி' ஆவான்.

**சக்ராங்கி:-**
மேற்சொன்ன மூன்று குணங்களோடு, வேத சாஸ்திரங்களில் கூறியிருக்கும்படி, மகாவிஷ்ணுவின் திவ்ய ஆயுதங் களான சங்கு, சக்கர சின்னங்களை ஆச்சாரியன் மூலமாக தன் தோள்களில் தரித்தவரும், திருமண் காப்பு அணிந்தவரும் 'சத்ராங்கி' எனப்படுவார்.

**மந்திரபாடி:-**
முன்பு சொன்ன நான்கோடு, சகல ஐஸ்வரியங்களையும் கொடுக்கக்கூடிய அஷ்டகாட்சரமான 'ஓம் நமோ நாராயணாய' என்ற மந்திரத்தை ஆச்சாரியன் மூலமாக உபதேசம் பெற்று, தினமும் ஜெபித்து காரியசித்தி பெறுபவரே, 'மந்திரபாடி.'

**வைஷ்ணவன்:-**
இதற்கு முன்பாக கூறப்பட்ட ஐந்து குணங்களோடு, ஐம்புலன் இன்பங்களையும், இதர தேவதைகளை வழிபடுவதையும் விட்டவன், மோட்சம் அடைவதற்குரிய வழிகளான கர்ம, ஞான அல்லது பக்தி மார்க்கங்களை கடைப்பிடிப்பவனே 'வைஷ்ணவன்.'

**ஸ்ரீவைஷ்ணவன்:-**
மேலே சொன்ன 6 வழிகளையும் கடைப்பிடித்து, வேறு சிந்தனை இல்லாமல், ஸ்ரீமந் நாராயணரை மட்டும் மனதில் நிறுத்தி, தினமும் தியானிப்பவனே 'ஸ்ரீவைஷ்ணவன்.'

**ப்ரபந்நன்:-**
மேலே குறிப்பிட்ட 7 தகுதிகளோடு, இறைவனை அடைவதற்கு சரணாகதியே தகுந்தது என்ற வழியை பின்பற்றுபவனே 'ப்ரபந்நன்.'

**ஏகாந்தி:-**
முன்பு சொன்ன எட்டு தகுதிகளோடு, பெருமாளை அடைவவதற்கு சரணாகதியும் கூட போதுமானதல்ல என்று முடிவு செய்து, அந்த பகவானையே உபாயமாக பற்றிக்கொள்பவன்தான் 'ஏகாந்தி' ஆகிறான்.

**பரம ஏகாந்தி:-**
இதற்கு முன்பு சொல்லப்பட்ட 9 தகுதிகளையும் பெற்றிருந்தாலும், பகவானை சரணடைவதோ, அவனையே உபாயமாக கொள்வதோ கடினம் என்பதை உணர்ந்து, நல்ல வழிகாட்டியாக இருக்கும் நல்லதொரு ஆச்சாரியானை சரணடைந்து, அவர் மூலமாக பெருமாளை அடையலாம் என்று முடிவு செய்பவனே 'பரம ஏகாந்தி.'


**செ.பாலச்சந்தர்**
மண்ணச்சநல்லூர்

---

## தினம் ஒரு தலைவர்கள்

# டி.எஸ்.துரைராஜ் வரலாறு

டி. எஸ். துரைராஜ், 31 திசம்பர் 1910 – 2 சூன் 1986) 1940 – 1960 காலகட்டத்தில் நடித்த ஒரு மேடைநாடக, தமிழ்த் திரைப்பட நகைச்சுவை நடிகராவார். தமிழ்த் திரைப்படங்களில் இயக்குனராகவும், தயாரிப்பாளராகவும் இருந்திருக்கிறார். கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனின் நகைச்சுவைக் கூட்டாளியாக பல படங்களில் நடித்தார்



வாழ்க்கைச் சுருக்கம்

டி. எஸ். துரைராஜ் தஞ்சாவூரில் ராஜா நாயுடு, நாகலட்சுமி ஆகியோருக்கு மூன்றாவது குழந்தையாகப் பிறந்தவர். மூத்தவர்கள் இருவரும் பெண்கள். தந்தை உள்ளூரில் ஒரு எழுத்தராகப் பணியாற்றியவர். மூத்த சகோதரி மதுரையில் திருமணம் புரிந்ததை அடுத்து இவரும் தனது ஏழாவது வயதில் தாயாருடன் மதுரைக்குக் குடிபெயர்ந்தார். நாடகங்களில் மதுரையில் அப்போது சங்கரதாசு சுவாமிகள் தனது நாடகக் கம்பனியை ஆரம்பித்து நடத்தி வந்தார். பள்ளிப் படிப்பில் நாட்டமில்லாமல் இருந்த துரைராஜ் சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகக் கம்பனியில் சேர்ந்தார். இவருக்கு நிறையப் பாடும் சந்தர்ப்பங்கள் கொடுக்கப்பட்டன. கோமாளி, மற்றும் பெண்கள் வேடங்களிலும் நடித்து வந்தார்.

துரைராஜின் இரண்டாவது சகோதரிக்கு இலங்கையில் திருமணம் நடந்தது. சகோதரியுடன் இலங்கை சென்ற துரைராஜ் அங்கு சிங்கள நாடகக் கம்பனி ஒன்றில் சேர்ந்து நாடகங்கள் நடித்தார். இரண்டாண்டுகளுக்குப் பின்னர் மதுரை திரும்பி மீண்டும் சங்கரதாசு சுவாமிகளின் கம்பனியில் இணைந்து நடித்தார். சில ஆண்டுகளில் அவர் அக்கம்பனியில் இருந்து விலகி சொந்தமாக திருப்பூரில் "மதுரை ஒரிஜினல் மணிவாசக பால சபா" என்ற நாடகக் கம்பனியைத் தொடங்கினார். கோவை, திருப்பூர், கேரளம் ஆகிய பகுதிகளில் இக்கம்பனிக்கு நல்ல வரவேற்பிருந்தது. ஆனாலும் நான்கு ஆண்டுகளில் கம்பனி பெரும் நட்டத்துக்குள்ளாகி மூடப்பட்டது. பின்னர் அவர் வேலுக்குட்டி நாயர் என்பவரின் மலையாள நாடகக் கம்பனியில் சேர்ந்து நல்ல புகழ் பெற்றார். இவர் பிற்காலத்தில் சொந்தமாகப் பட நிறுவனம் தொடங்கி பிழைக்கும் வழி, பானை பிடித்தவள் பாக்கியசாலி (1958), ஆயிரங்காலத்துப் பயிர் (1963) போன்ற படங்களைத் தயாரித்தார். இதில் ஆயிரங்காலத்துப் பயிர், பானை பிடித்தவள் பாக்கியசாலி படங்களை இவரே இயக்கினார். பானை பிடித்தவள் பாக்கியசாலி படத்தில் சாவித்திரியின் அண்ணனாக நடித்தார். இப்படத்தில் இவர் மணமாகப்போகும் தன் தங்கை சாவித்திரிக்கு அறிவுரை கூறுவதுபோல் பாடுவது போல் அமைந்த புருசன் வீட்டில் வாழப் போகும் பெண்ணே தங்கச்சிக் கண்ணே சில புத்திமதிகள் சொல்லுறேன் கேளு முன்னே என்ற பாடல் இன்றும் புகழ் பெற்றதாக உள்ளது.





**நடித்த திரைப்படங்கள்**

- திருநீலகண்டர் (1939)
- போலி சாமியார் (1939)
- சகுந்தலை (1940)
- நவீன விக்ரமாதித்தன் (1940)
- சாவித்திரி (1941)
- மதனகாமராஜன் (1941)
- திருவள்ளுவர் (1941)
- சதி சுகன்யா (1942)
- மாயஜோதி (1942)
- கங்காவதார் (1942)
- சிவலிங்க சாட்சி (1942)
- தமிழறியும் பெருமாள் (1942)
- காரைக்கால் அம்மையார் (1943)
- உத்தமி (1943)
- மீரா (1945)
- சகடயோகம் (1946)
- தெய்வ நீதி (1947)
- கடகம் (1947)
- பொன்னருவி (1947)
- துளசி ஜலந்தர் (1947)
- தேவதாசி (1948)
- காமவல்லி (1948)
- பிழைக்கும் வழி (1948)
- மங்கையர்க்கரசி (1949)
- ரத்தினகுமார் (1949)
- ஏழை படும் பாடு (1950)
- கலாவதி (1951)
- மணமகள் (1951)
- காஞ்சனா (1952)
- குமாரி (1952)
- அம்மா (1952)
- ஜெனோவா (1953)
- பணக்காரி (1953)
- திரும்பிப்பார் (1953)
- வள்ளியின் செல்வன் (1955)
- மாமன் மகள் (1955)
- காலம் மாறிப்போச்சு (1956)
- குடும்பவிளக்கு (1956)
- மூன்று பெண்கள் (1956)
- மணாளனே மங்கையின் பாக்கியம் (1957)
- கன்னியின் சபதம் (1958)
- பானை பிடித்தவள் பாக்கியசாலி (1958)
- மரகதம் (1959)
- அருமை மகள் அபிராமி (1959)
- நல்ல தீர்ப்பு (1959)
- நிச்சய தாம்பூலம் (1962)

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

# விஷால் தன்ஷிகா நிச்சயதார்த்தம்



தனக்கும் தன்ஷிகாவுக்கும் திருமண நிச்சயதார்த்தம் நடைபெற்றதாக விஷால் புகைப்படத்துடன் அறிவித்துள்ளார்.

சமீபத்தில் தன்ஷிகாவை காதலித்து வருவதை உறுதிப்படுத்தினார் விஷால். இதனைத் தொடர்ந்து திரையுலக பிரபலங்கள் பலரும் விஷால் தன்ஷிகா இணைக்கு வாழ்த்து தெரிவித்தார்கள். எங்களது திருமணம் நடிகர் சங்கத்தின் புதிய கட்டிடத்தில் முதல் திருமணமாக நடைபெறும் என்று விஷால் பத்திரிகையாளர் சந்திப்பில் அறிவித்திருந்தார்.

நேற்று தனது பிறந்த நாளை முன்னிட்டு மதியம் 12 மணிக்கு முக்கிய அறிவிப்பு ஒன்றை வெளியிடுவதாக விஷால் தெரிவித்திருந்தார். அதன்படி தனது எக்ஸ் தளத்தில் விஷால், "இந்த பிறந்த நாளில் உலகின் அனைத்து மூலைகளில் இருந்தும் எனக்கு வாழ்த்து கூறி ஆசீர்வதித்த அனைவருக்கும் நன்றி.

நேற்று எங்கள் குடும்பங்கள் சூழ எனக்கும் தன்ஷிகாவுக்கும் நிச்சயதார்த்தம் நடைபெற்றது என்ற சந்தோஷமான செய்தியை உங்கள் அனைவருடனும் பகிர்ந்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். நான் உற்சாகத்துடன், நம்பிக்கையுடன், ஆசீர்வதிக்கப்பட்டவனாக உணர்கிறேன்" என்று தெரிவித்துள்ளார் விஷால். இந்த அறிவிப்புக்கு திரையுலக பிரபலங்கள் பலரும் வாழ்த்து தெரிவித்து வருகிறார்கள்.



பாலிவுட்டில் பிரபல நடிகரான சங்கி பாண்டேவின் மகள் என்ற அடையாளத்தோடு கடந்த 2019ம் ஆண்டு வெளியான ஸ்டூடண்ட் ஆப் தி இயர் 2 படத்தின் மூலம் பாலிவுட் சினிமாவில் அறிமுகமானவர் நடிகை அனன்யா பாண்டே.முதல் படத்தின் மூலம் அறிமுக நாயகி என்ற பிலிம்பேர் விருதை பெற்றார். அதன்பின், பதி பத்னி அவுர் வா படத்தில் நடித்த இவர் விஜய் தேவரகொண்டாவுடன் ஜோடி சேர்ந்து லைகர் என்ற படத்தில் நடித்து தெலுங்கில் அறிமுகமானார்.ஆனால் இப்படம் சரியாக டவில்லை. தற்போது, தொடர்ந்து படங்கள் நடித்து வரும் அனன்யா சேலையில் இருக்கும் அழகிய போட்டோஸ்.

# 'மனுஷி' படத்தின் சில காட்சிகளை நீக்கியும், மாற்றி அமைத்தும் சென்சாருக்கு விண்ணப்பிக்க ஐகோர்ட் உத்தரவு



மனுஷி' திரைப்படத்தில் இடம்பெற்றுள்ள சில காட்சிகளை நீக்கியும், மாற்றியமைத்தும், சென்சார் போர்டுக்கு மீண்டும் விண்ணப்பிக்க தயாரிப்பு நிறுவனத்துக்கு உத்தரவிட்ட சென்னை உயர் நீதிமன்றம், விண்ணப்பத்தை பெற்ற இரண்டு வாரங்களில் சான்று வழங்க வேண்டும் என சென்சார் போர்டுக்கு உத்தரவிட்டுள்ளது.

நடிகை ஆன்ட்ரியா நடித்துள்ள மனுஷி திரைப்படத்தை, இயக்குநர் வெற்றிமாறனின் கிராஸ் ரூட் ஃபிலிம் கம்பெனி தயாரித்துள்ளது. படத்தை இயக்குநர் கோபி நயினார் இயக்கியுள்ளார். படத்துக்கு இசையமைப்பாளர் இளையராஜா இசையமைத்துள்ளார். இந்தப் படத்தில் 37 ஆட்சேபகரமான காட்சிகளும், வசனங்களும் இடம்பெற்றுள்ளதாகக் கூறி, சென்சார் போர்டு சான்றிதழ் வழங்க மறுத்தது. இதை எதிர்த்து பட தயாரிப்பாளர் வெற்றிமாறன் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

வழக்கை விசாரித்த நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ், ஆகஸ்ட் 24-ஆம் தேதி மனுஷி திரைப்படத்தை பார்த்தார். இந்த வழக்கில் இன்று உத்தரவு பிறப்பித்த நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ், படத்தில் கடவுள், அறிவியல் நம்பிக்கை, சித்தாந்தம், அடையாளம் ஆகியவை குறித்து வெளிப்படையான உரையாடல்கள் இடம்பெற்றுள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

சென்சார் போர்டு நீக்க வேண்டும் என்று பரிந்துரைத்த சில காட்சிகளை நீக்க வேண்டாம் எனவும், சில காட்சிகளை மாற்றியமைக்க வேண்டும் எனவும் உத்தரவிட்ட நீதிபதி, சில காட்சிகள், வசனங்களை நீக்கி, மாற்றியமைத்து 2 வாரங்களில் சென்சார் போர்டுக்கு மீண்டும் விண்ணப்பிக்க வேண்டும் என்றும், சென்சார் போர்டு இரண்டு வாரங்களில் உரிய சான்றிதழை வழங்க உத்தரவிட்டும் என்றும் உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்தார்.

# தீபாவளி வெளியீட்டில் இணைந்தது 'டீசல்'




ஹரிஷ் கல்யாண் நடித்துள்ள 'டீசல்' திரைப்படம் தீபாவளிக்கு வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சண்முகம் முத்துசுவாமி இயக்கத்தில் ஹரிஷ் கல்யாண் நடிப்பில் உருவாகி வந்த படம் 'டீசல்'. இப்படம் நீண்ட காலமாக தயாரிப்பில் இருக்கிறது. சமீபத்தில் இதன் பாடலொன்று இணையத்தில் பெரும் வைரலானது. இதனைத் தொடர்ந்து இப்படத்தின் மீதான எதிர்பார்ப்பு அதிகமானது.

தற்போது 'டீசல்' தீபாவளிக்கு வெளியாகும் என்று படக்குழுவினர் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளனர். மேலும், படத்தின் டீஸர் ஒன்றையும் வெளியிட்டுள்ளனர். இதற்கு இணையத்தில் நல்ல வரவேற்பு கிடைத்திருக்கிறது. இப்படத்தின் மூலம் ஆக்ஷன் நாயகனாக மாறியிருக்கிறார் ஹரிஷ் கல்யாண்.

தேர்டு ஐ நிறுவனம் மற்றும் எஸ்பி சினிமாஸ் ஆகிய நிறுவனங்கள் இணைந்து தயாரித்துள்ள படம் 'டீசல்'. இதில் அதுல்யா ரவி, வினய் ராய், சாய் குமார், கருணாஸ், ரமேஷ் திலக் உள்ளிட்ட பலர் ஹரிஷ் கல்யாண் உடன் நடித்துள்ளனர். திபு நினன் தாமஸ் இசையமைப்பாளராக பணிபுரிந்துள்ளார்.

# மீண்டும் இணையும் '96' ஜோடி



ஆதித்யா பாஸ்கர் கௌரி கிஷன் இருவரும் புதிய படமொன்றில் இணைந்து நடிக்கவுள்ளனர்.

'96' படத்தில் இளம் வயது விஜய் சேதுபதி மற்றும் த்ரிஷாவாக நடித்தவர்கள் ஆதித்யா பாஸ்கர் கௌரி கிஷன் ஜோடி. இந்த ஜோடிக்கு இணையத்தில் பெரும் வரவேற்பு கிடைத்தது. தற்போது இருவரும் புதியட படமொன்றில் இணைந்து நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார்கள்.

கண்ணதாசன் தயாரிப்பில் உருவாகும் இப்படத்தினை ராஜ்குமார் ரங்கசாமி இயக்கவுள்ளார். ஒளிப்பதிவாளராக எஸ்.ராமச்சந்திரன், இசையமைப்பாளராக ஜோன்ஸ் ரூபர்ட், எடிட்டராக பரத் ஆகியோர் பணிபுரிய இருக்கிறார்கள். இப்படம் குறித்து ராஜ்குமார் ரங்கசாமி, "அலட்டிக் கொள்ளாத, உறவுகள் இன்றி வாழும் ஒருவன், குடும்பம், பெற்றோர் என்று சார்ந்திருக்கும் ஒரு இளம் பெண் இவர்கள் இருவருக்கும் இடையே மலரும் உறவு எப்படி செல்கிறது என்பதே இப்படத்தின் கதை" என்று தெரிவித்துள்ளார்.

இதன் படப்பிடிப்பு சென்னை, புதுச்சேரி, பொள்ளாச்சி, நாமக்கல் மற்றும் கோவா போன்ற இடங்களில் நடந்திருக்கிறது. இதன் படப்பிடிப்பு இறுதி கட்டத்தை எட்டி இருக்கிறது. இந்த ஆண்டு படம் திரைக்கு வர உள்ளது.

# "என்னை மாதம்பட்டி ரங்கராஜ் ஏமாற்றிவிட்டார், துன்புறுத்தினார்..." ஜாய் கிரிசில்டா பரபரப்பு புகார்



"என் வயிற்றில் வளரும் கருவை கலைக்கச் சொல்லி, நடிகரும் பிரபல சமையல் கலைஞருமான மாதம்பட்டி ரங்கராஜ் என்னை அடித்துத் துன்புறுத்தினார்" என்று ஆடை வடிவமைப்பாளர் ஜாய் கிரிசில்டா புகார் தெரிவித்துள்ளார். சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் அளித்த அந்தப் புகாரில், "என்னை மாதம்பட்டி ரங்கராஜ் ஏமாற்றிவிட்டார். அவர்தான் என் குழந்தையின் அப்பா" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சமீபத்தில் மாதம்பட்டி ரங்கராஜுக்கும் தனக்கும் திருமணம் நடைபெற்றதாக புகைப்படத்துடன் அறிவித்தார் ஆடை வடிவமைப்பாளர் ஜாய் கிரிசில்டா. மேலும் தான் 6 மாதம் கர்ப்பமாக இருப்பதாகவும் அறிவித்தார் ஜாய் கிரிசில்டா. இந்த விவகாரம் தொடர்பாக மாதம்பட்டி ரங்கராஜ் எந்தவொரு பதிவையும் இதுவரை வெளியிடவில்லை. அவர் ஏற்கெனவே திருமணம் ஆனவர். அவருக்கு இரு மகன்கள் உள்ளனர்.

இந்த நிலையில், மாதம்பட்டி ரங்கராஜ் தன்னுடன் வாழ மறுப்பதாகவும், தன்னை தாக்கியதாகவும் கூறி ஜாய் கிரிசில்டா, சென்னை காவல் ஆணையரகத்தில் இன்று புகார் அளித்துள்ளார். புகார் அளித்தபின்னர் செய்தியாளர்களை சந்தித்த ஜாய் கிரிசில்டா, "நான் ஜாய் கிரிசில்டா. மாதம்பட்டி ரங்கராஜின் மனைவி. நான் இப்போது காவல் ஆணையரிடம் புகார் அளித்துள்ளேன். எனது கணவர் மாதம்பட்டி ரங்கராஜ் இப்போது என்னோடு தொடர்பில் இல்லை. அவர் என்னை ஏமாற்றிவிட்டார். அவர்தான் என் குழந்தையின் அப்பா. அவர் இதற்கு ஒரு பதில் சொல்ல வேண்டும்.

நானும் மாதம்பட்டி ரங்கராஜும் சில ஆண்டுகளாக ஒன்றாக வாழ்ந்து வந்தோம். அவர் மனைவியை பிரிந்து வாழ்வதாக சொன்னார். அதனை நம்பிதான் திருமணத்துக்கு ஒப்புக்கொண்டேன். அதன்பிறகு இரு ஆண்டுகளுக்கு முன்பு எம்.ஆர்.சி. நகர் திருவேதி அம்மன் கோயிலில் திருமணம் செய்து கொண்டார். ஆனால், எங்களது திருமணத்தை பதிவு செய்யவில்லை.

நான் இப்போது 7 மாதம் கர்ப்பமாக இருக்கிறேன். இப்போது ஒன்றரை மாதங்களாக அவர் என்னோடு தொடர்பில் இல்லை. நான் அவரை தொடர்புகொள்ள முயற்சி செய்தேன். அவரை என்னிடம் பேச விடாமல் பலரும் தடை போட்டு வைத்துள்ளனர். அது அவரது நண்பர்களாகவோ, தம்பியாகவோ இருக்கலாம். நான் அவரோடு வாழ வேண்டும், அதற்காகவே புகார் அளித்துள்ளேன்.

நான் எங்கள் திருமணம், குழந்தை உருவாகியிருப்பது குறித்து வெளியே சொன்னதற்கு பிறகு மாதம்பட்டி ரங்கராஜ் என்னை சந்தித்தார். கருவைக் கலைக்கச் சொல்லி என்னை அடித்து துன்புறுத்தினார். ஒரு வாரத்துக்கு முன்பு அவரிடம் பேச முயன்றபோது என்னை பலர் முன்னிலையில் தாக்கினார்" என்று ஜாய் கிரிஸில்டா தெரிவித்தார்.

# இணையத்தில் வைரலான புதிய வீட்டின் வீடியோ: அலியா பட் காட்டம்



தனது புதிய வீட்டின் வீடியோ பதிவொன்று இணையத்தில் வைரலானதால் அலியா பட் காட்டமாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

மும்பையில் ரன்பீர் கபூர் அலியா பட் இணை பிரம்மாண்டமான அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றை கட்டியிருக்கிறார்கள். விரைவில் இதில் குடும்பத்துடன் குடியேற இருக்கிறார்கள். இதன் இறுதிகட்ட பணிகள் நடைபெற்று வரும் சமயத்தில், இந்த குடியிருப்பின் வீடியோ பதிவுகள் இணையத்தில் வைரலாகி வருகின்றன.

பல்வேறு வழிகளில் இருந்து அடுக்குமாடி குடியிருப்பின் வீடியோக்கள் இணையத்தில் உலா வருகின்றன. இது தொடர்பாக காட்டமாக அறிக்கை ஒன்றை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டுள்ளார் அலியா பட். அதில், "மும்பை போன்ற ஒரு நகரத்தில் இடம் குறைவானது என்பதை நான் புரிந்துக் கொள்கிறேன். சில நேரங்களில் உங்கள் ஜன்னலின் பார்வை அடுத்தவர் வீடாக இருக்கலாம். ஆனால் அதற்காக எவருக்கும் தனிப்பட்ட வீடுகளை படம் பிடித்து ஆன்லைனில் வெளியிடும் உரிமை இல்லை.

எங்கள் வீடு இன்னும் கட்டுமானத்தில் தான் உள்ளது. அதற்குள் எங்கள் அனுமதி இல்லாமல் படமெடுக்கப்பட்டு பல்வேறு ஊடகங்களால் பகிரப்பட்டுள்ளது. இது தனியுரிமை மீறலும், பாதுகாப்பு சிக்கலுமாகும். இது மிகவும் கண்டிக்கத்தக்கது. ஒருவரது தனிப்பட்ட இடத்தை அவர்களின் அனுமதி இல்லாமல் படம் எடுப்பதும் அல்லது புகைப்படம் எடுப்பதும் அத்துமீறலாகும்.

இதனை சாதாரணமாக ஏற்றுக்கொள்ளக்கூடாது. அதனை பகிரும் முன் சற்று யோசிக்கவும். உங்கள் வீட்டின் உள்ளே எடுக்கப்பட்ட வீடியோ பதிவொன்றை ஒருவர் தெரியாமல் பொது இடத்தில் பகிரப்பட்டால் நீங்கள் ஒப்புக் கொள்வீர்களா? யாருமே ஒப்புக் கொள்ளமாட்டோம். ஆகையால் ஒரு வேண்டுகோள். மற்றவர்களின் வீடியோ பதிவுகளை நீங்கள் இணையத்தில் பார்த்தால், தயவுசெய்து அதை பகிர வேண்டாம் அல்லது மற்றவர்களுக்கு அனுப்ப வேண்டாம்.

எங்களது வீட்டின் புகைப்படங்களையும் வீடியோக்களையும் பகிர்ந்த ஊடக நண்பர்கள், தயவுசெய்து அவற்றை உடனடியாக நீக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார் அலியா பட்.
















நமது சேனலில் உங்கள் ரியல் எஸ்டேட் விளம்பரம்!









### சூயன்

கடலைப்பருப்பு முக்கால் கப்
தேங்காய் ஒரு மூடி
ஒரு கப் பொடித்த வெல்லம்
ஏலக்காய்

பச்சரிசி ஒரு கப்
உளுந்து அரைகப்
ஒரு சிட்டிகை ஆப்ப சோடா
இரண்டு டேபிள் ஸ்பூன் நெய்
பொரிக்கத் தேவையான
அளவு எண்ணெய்

முதலில் அரிசி உளுந்தை
இரண்டு மணி நேரம்
ஊறவைக்கவும்.
கடலைப்பருப்பை
களைந்து குக்கரில்
நன்கு வேகவைக்கவும்.
வெல்லத்துடன் சிறிது நீர்
சேர்த்து ஒரு கொதி விட்டு
வடிகட்டிக் கொள்ளவும்.
பாகுபோல் ஆக வேண்டாம்.

வெந்த கடலைப் பருப்பையும்
தேங்காயும் சேர்த்து
அரைக்கவும். அரைக்கும்
போது வடிகட்டி
வைத்த வெல்லக்
கரைசலையும் சேர்த்து
அரைத்து வைத்துக்
கொள்ளவும். ஒரு
பாணலியில் ஒரு
டேபிள் ஸ்பூன்
நெய் விட்டு இந்த அரைத்த
மாவை சேர்த்து கெட்டியாக
கிளறவும். கையில் ஒட்டாமல்
வரவேண்டும். பிறகு இறக்கி
வைத்து கைப்பொறுத்த
சூடு வந்ததும் சிறு
உருண்டைகளாக உருட்டி
வைக்கவும். நெல்லிக்காய்
அளவு உருட்டிக்
கொள்ளலாம்.

அரிசி உளுந்தை நன்கு
நைசாக தோசை மாவு
பதத்திற்கு அரைத்துக்
கொள்ளவும். ரொம்ப
கெட்டியாகவோ,
தண்ணியாகவோ
இருக்கக்கூடாது.
ஆப்பசோடாவை சேர்த்து
நன்கு கலந்து ஒரு அகலமான
பாத்திரத்தில் வைத்துக்
கொள்ளவும்.

பூர்ண உருண்டைகளை
இந்த மாவில் போட்டு ஒரு
நீண்ட ஸ்பூன் உதவியுடன்
மாவிலிருந்து எடுத்து
எண்ணெயில்
பொரித்தெடுத்து ஒரு
பேசினில் அடுக்கி
நைவேத்தியம்
செய்யலாம். நன்றி



**வி.பிரபாவதி**
மடிப்பாக்கம்

(அழகிய சிங்கரின்
என்பாவாக, இன்று என் பா)
விண்ணகத்தான்

மண்மீது புண்ணாய்
நானிருந்தேன்

விண்ணகர கோமான்
ஒருவன் தன்



என்னைத்
தன் மலர்
கண்ணால்
கண்டு
அருளும்
வரை.

**சசிகலா விஸ்வநாதன்**



### அகநானூறு புறநானூறு

ஆண்டாளின் நாச்சியார்
திருமொழி இன்னா நாற்பது
இனியவை நாற்பது
ஈடிலா இதிகாசங்கள்
உள்ளம் உருக தேவாரம்
ஊனில் கலந்த திருவாசகம்
எண்டிசை மணக்க
அருணகிரி திருப்புகழ்
வாழ்வில் ஏற்றம் பெற்றிட
நாளுமொரு திருக்குறள்
ஐயம் அகல ஒரு ஆத்திச்சூடி
ஓங்கி ஒலிக்கும் பாரதி
பாட்டு(வீழ்வேனென்று
நினைத்தாயோ?)
இவை எல்லாம் நமக்கு
கிடைத்த ஔடதமன்றோ
கவிதை உலகில்.....

**ஸ்ரீகாந்த்** , திருச்சி

### 'கடி' கவிதை!

கடைத் தெருவிலிருந்து
கைவீசி நடந்து வந்தபோது
என் ஐபோன்
சட்டென்று ஒளிர்ந்து
அணைந்தது
அப்போது தெரிந்தது
அதில் கடிக்கப்பட்ட ஆப்பிள்
'அட வரும்போது
ஆப்பிள் வாங்கிவரச்
சொன்னாளே'யென்று



கடையை
நோக்கி
திரும்பவும்
ஓடினேன்!

**சின்னஞ்சிறு கோபு,**
சிகாகோ.

### கருப்பொருள் ஒன்று தான்

" உருவத்தோடு மனிதன்
ஆயிரம் உணர்த்துகிறான் ..."

உருவமில்லாத
ஆத்மா பலாயிரம்
உணர்த்துகிறது..."

உருவம் பெற்று
வாழ்ந்து சுமந்து இனித்து
கசந்து இறுதியில்
உருவத்தை அழித்துக்
கொள்கிறது ..."

உருவம் இல்லாத
ஆத்மா மீண்டும்
உருவத்தில் புகுந்து உடலின்
உயிராகிரது....."

உருவமும் அருபமும்
ஒன்று என்கிறது த்வைதம்
உருவம் வேறு ஆத்மா வேறு
என்கிறது அத்வைதம் ..."

அழிவில்லாதது
ஆத்மா எங்கும்
வியாபித்து உருவம்
காட்டாமல் பயணிக்கிறது
ஆத்மா ..."

என்று உருவம் இடம்
தருகிறதோ அன்றே தன்னை
புகுத்தி அடையாளம்
காட்டிவிடுகிறது ஆத்மா .... "

ஆன்மா தான் கர்மாவை
தாங்கி பூமியில் மீண்டும்



உருவம்
பெற்று கர்மா
படி
காலத்தை
கழிக்கிறது ..."

**ஆர். சீதாராமன்**
சீர்காழி

### அந்தப்பூ..

உனக்கு எந்த மலர்
பிடிக்கும்? கேட்டாள் காதலி.
மல்லிகையைச் சொன்னேன்,
ரோஜாப்பூவைச் சொன்னேன்,
பவளமல்லியைக்கூடச்
சொன்னேன். கடைசி வரை
சொல்லவில்லை
அவள் எதிர்பார்த்த பதிலை:



'உன்
தலையில்
சூடியிருக்கும்
பூவை!'

**கே. பி. ஜனார்த்தனன்**

### மூளை சலவை.

மனம் சொல்லும்
வார்த்தைகள் கண்ணாடி
போல, மயக்கும் எண்ண
ஓசைகள் தினம் தினம் ஓட,
உண்மை மறைக்கும்
பிம்பங்கள் பரிதியைக் கண்ட
பனி போல, கரைந்து ஓட
தேவை உங்களை சலவை.

வார்த்தைகளில் சிக்கிய
பறவையாய், விடுதலை
கேட்கும் சிந்தனை
கருவியாய், மயக்கத்தில்
வார்த்தைகள் மனதை
விழுங்க, விழிப்புணர்வு
மட்டுமே நமக்குத் தேவை..

மூளை சலவையை என்ற



ஆயுதம், சுய
சிந்தனை தான்
மனிதனின்
சிறப்பு என்பது
உணர்வோம்.

**உஷா முத்துராமன்**




பூமியைப் படைத்தவன்
இறைவன். வேலியை
எடுத்தவன் மனிதன்.

உயிர்களைப் படைத்தவன்
இறைவன் உணர்ந்திட
மறந்தவன் மனிதன் !

இயற்கையைப் படைத்தவன்
இறைவன் இசைந்து
வாழ்ந்தானா மனிதன்?

கருணையில் பிறந்தது
உலகம்.. காண்பதெல்லாமோ
கலகம்..

பொருள்வழி செல்வதே
உலகம்.. பொருள்பட
வாழுமோ மனிதம்!

கல்லெனப் பார்த்திடில்
கல்லே.. கடந்தவன்
புகுந்தனன் உள்ளே..



பயனுறப்
பிறப்பது
சொல்லே..
பதர்களின்
இடையில் பார்
நெல்லை.!

**வே.கல்யாண்குமார்.**

### எண்ணுவது என்னவோ?

மாலைக் கதிரவன்
மறையும் நேரமோ
காலைக் கதிரவன்
உதிக்கும் நேரமோ
நண்பனாம் துணைவன்
நாயுடன் வந்து
விண்ணை அவனும்



விருப்புடன்
நோக்கி
எண்ணுவது
என்னவோ
எப்படி அறிய?

**வைரமணி ,**
சென்னை

### ஆபத்துக் குதவாப் பிள்ளை!

எண்சீர் மண்டிலம்.

பெற்றோரைக் காத்திடவும்
பிள்ளை வேண்டும்
பொலிவோடு வாழ்ந்திடவும்
பிள்ளை வேண்டும்!
மற்றோர்க்கு உதவிடவும்
பிள்ளை வேண்டும்
மாண்பான கல்விக்கும்
பிள்ளை வேண்டும்!
உற்றாரைச் சேர்ந்திடவும்
பிள்ளை வேண்டும்
உண்மைக்குச் சின்னமாக
பிள்ளை வேண்டும்!
பற்றுதனை வைத்திடவும்
பிள்ளை வேண்டும்
பாசத்தை உச்சமாக்க
பிள்ளை வேண்டும்!

சந்ததியை உருவாக்க
பிள்ளை வேண்டும்
சந்தனமாய் வாழ்ந்திடவும்
பிள்ளை வேண்டும்!
விந்தையான செயல்புரிய
பிள்ளை வேண்டும்
வீறுகொண்டு எழுவதற்கும்
பிள்ளை வேண்டும்!
சொந்தமென்று கொண்டாட
பிள்ளை வேண்டும்
சுற்றத்தை அரவணைக்க
பிள்ளை வேண்டும்!
வந்துநிற்கும் ஆபத்தில்



பிள்ளை
வேண்டும்
வந்தநோயைப்
போக்குதற்கும்
பிள்ளை
வேண்டும்!

**முனைவர் இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.



உன் ரகசியம் புன்னகை
ஏற்படுத்திய கிளர்ச்சியில்
என் வார்த்தைகள்
அத்தனையும் அரிதாரம்
பூசிக்கொண்டன. வெக்கம்
மட்டுமே ஆடையாய்
கிடக்க முத்தங்கள்
மட்டுமே போர்வையாகி
போகின்றன! புள்ளி



வைத்தாய்
பூ கோலம்
இட்டேன்
விளக்கு
அணைத்தாய்
விருந்து
வைத்தேன்

**எஸ் .சந்திரசேகரன் அமுதா**
செஞ்சி



பாலை நிலத்தில்
பூவுக்கு ஆசைப்படாதே
சோலை வனத்தில்
சேலை நிலவுக்கு
ஆசைப்படாதே

அமாவாசை பௌர்ணமி
இரவிலும் வானத்தை
பார்த்து விடாதே
சூரியப் பூ பூத்து விடப்
போகிறது!

கனவுகளில் மட்டுமல்ல
உறக்கம் வராத
இரவுகளிலும் இம்சிக்கும்
நிழல் நீ!

ரஷ்யா உக்ரைனில் உள்ள வசிப்படங்கள், மருத்துவமனையில்
சின்னஞ்சிறுசுகள், அப்பாவி மக்கள் மீது ஏவுகணை வீசி
கொலை பாதகம் செய்கிறது. ஐயோ பாவம் என்கிறோம்.
தெரு நாய் சிறுமியை கடித்துக் குதறுவதை தொலைக்காட்சி
வாயிலாக பார்த்து பாவம் என்கிறோம்.
மழை வெள்ளத்தில் பல பேர் அடித்துச் செல்லப்படுகிறார்கள்.
பார்த்து பாவம் என்கிறோம்.
தொடர்வண்டி முன் பாய்ந்து தற்கொலை செய்து செய்து
கொள்கின்றனர். பாவம் என்கிறோம்.
வன்கொடுமைக்கு ஆளாகி ஒரு இளம் பெண் படுகொலை
செய்யப்படுகிறாள் பரிதாபப்படுகிறோம்.
பிரசவ அறைக்குள் கர்ப்பிணிப் பெண் வலி தாங்காமல் கதறி



அழுவதை கேட்கும்போது பாவம் என்று கண்
கலங்குகிறோம் சிறிது நேரத்தில் அறைக்குள்
பச்சிளம் குழந்தை அழுகிறது.
ஆனால், நாம் வெளியே சிரித்து மகிழ்கிறோம்.

**உ.மு.ந.ராசன் கலாமணி**
கோபிச்செட்டிப்பாளையம்

ஒரு முத்தத்தில்
முற்றுப் பெறுவதா காதல்?
இல்லை மூச்சு நின்ற
போதிலும் ஆன்மாவில்
நிலைத்து நிற்பது



அந்த காமம்
கடந்த
தூய ஆவி
காதல்!

**லி.நௌஷாத் கான்**

### சித்திரமே....

தூரிகைகளுக்குள்
அடங்காத...அழகே...

வண்ணங்களில் சிக்காத...
சித்திரமே...

ஆயிரம் கதைகள் பேசும்..
உன் விழிகள்...

பலவண்ண மலர்கள்
மலரும்.. பூங்கா... உன்
பார்வை...

தினந்தோறும்இளைப்பாறிட...
முனைகிறது... மனம்..

பரவசநிலை அளிக்கும்
அற்புத கணம்..

அபாயகரமான
வளைவுகளில்...
விபத்துகள் தினந்தோறும்...

புகார் அளிக்கத் தான்
தோன்றுவதில்லை...




எனக்கு....

மாலையும்...
இல்லறச்
சோலையும்
தான்...
கணக்கு...

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

## நூல் விமர்சனம்

முரண் !
நூல் ஆசிரியர் : அருட்தந்தை கவிஞர் லொயோலா !
நூல் விமர்சனம் : கவிஞர் இரா. இரவி !
வெளியீடு : பாலா & மாலா பதிப்பகம், 1/2, புதிய காலனி, குரோம்பேட்டை, சென்னை– 600 044. 70 பக்கங்கள்
விலை : ரூ. 50



அட்டைப்பட வடிவமைப்பு, உள்அச்சு பொருத்தமான படங்கள் என அச்சிட்டு பதிப்பித்த பாலா & மாலா பதிப்பகத்திற்கு பாராட்டுகள். நூல் ஆசிரியர் கவிஞர் லொயோலா அவர்கள் சகலகலா வல்லவராக உள்ளார். அவரது 'திசையாகும் திருப்பங்கள்' நூலிற்கு அணிந்துரை எழுதி இருந்தேன். அந்த நூல், தன்னம்பிக்கை விதைக்கும் கட்டுரை நூல். இந்த நூல் முரண் கவிதை. இறைப்பணியோடு இலக்கியப் பணியும் செய்து வரும் பண்பிற்கு முதல் பாராட்டு.

இனிய நண்பர் வித்தகக் கவிஞர் பா. விஜய் அவர்களின் வாழ்த்துரை, தஞ்சைப் பல்கலைக்கழக எழுத்தாளர் இரா. காமராசு அணிந்துரை நூலின் வரவேற்பு தோரண வாயில்களாக வரவேற்கின்றன. ஆசிரியர் என்னுரையில் அம்மா திருமதி குழந்தை தெரஸ் அவர்களுக்கும், இனிய நண்பர் முனைவர் முதுநிலைத் தமிழாசிரியர் ஞா. சந்திரன் உள்ளிட்ட பலருக்கும் நன்றியினைப் பதிவு செய்திருப்பது சிறப்பு.

சிவகாசிச் சிறுவர்களின் சிதைந்து போன கல்வி பற்றிய நிகழ்வை கவிதையால் காட்சிப்படுத்தி வெற்றி பெறுகின்றார்.

சிதைந்த கனவுகள்!

வானத்திலே வான வேடிக்கை / பூமியிலே புஸ்வானம் / சாலையில் சரவெடி / சங்கு சக்கரமாய்/ சுழற்சிகள் மனத்தினுள் / சிதைந்த கதவுகள் மலருமா? / என் போன்ற / பிஞ்சுக் குழந்தைகளுக்கு ! இக்கவிதை யினைப் படித்த போது, இதே கருப்பொருளில் நான் எழுதிய் ஹைக்கூ கவிதை நினைவிற்கு வந்தது.

வெடித்துச் சிதறியது சிவகாசிச் சிறுவர்களின் வாழ்க்கையும் தான்! நூலாசிரியர் அவர்களுக்கு இயற்கையின் மீது, சுற்றுச்சூழல் மீது மிகுந்த அக்கறை உள்ளது. சுற்றுச் சூழலை அதிக மாசுபடுத்துவதன் காரணமாகவே ஓசோன் படலத்தில் ஓட்டை விழுந்து வெப்பமயம் அதிகரித்து வருகின்றது. அவற்றை உணர்த்தும் வண்ணம் வடித்த கவிதை நன்று.

ஓசோன் படலம் / ஓட்டை !! / நவ நாகரீக மனிதனின் கைவண்ணம் !

இறைப்பணி செய்யும் அருட்தந்தையாக இருப்பதால் இறைவன் பற்றிய கவிதைகளும் நூலில் இடம் பெற்றுள்ளன. எனக்கு இறைநம்பிக்கை இல்லாததால் அவற்றை மேற்கோள் காட்டவில்லை. மழை, இடி, மின்னல், கடல் அலை இவைகள் மக்களுக்காக குமுறுவதாகக் கற்பனை செய்து வடித்த கவிதை நன்று.

இயற்கை குமுறுகிறது ! வானமே / ஏன் அழுகிறாய் / சமுதாய வன்கொடுமைக்கு இரையாகும் / அப்பாவி/ அடித்தட்டு மக்களின் / அவல நிலையையும் / சுருங்கிப் போன / வயிற்றையும்/ சுருக்கில் தொங்கும் விவசாயியையும் கண்டா? விவசாயிகளின் தற்கொலைக்கு ஆட்சியாளர்கள் வருந்தா விட்டாலும், வானம் வருந்து கண்ணீர் வடிக்கின்றது என்றா கற்பனை நன்று. இயற்கைக்கு இருக்கும் இரக்கம் கூட மனிதர்களுக்கு இல்லை என்பதை நன்கு உணர்த்தி உள்ளார். பாராட்டுகள்.

இன்றைய இளைஞர்களுக்கு தன்னம்பிக்கை விதைக்கும் விதமாக பல கவிதைகள் உள்ளன. அவற்றில் பதச்சோறாக உங்கள் பார்வைக்கு.

மனதை விசாலமாக்கு! தோழனே தோழியே ! / இறுக்கமான வாழ்க்கை / இறுகிப் போன மனது / சுருங்கிப் போன இதயம் / தெளிவற்ற சிந்தனை / வாழ்க்கையில் விரக்தி / வெறுப்புகள் பல / நாள்தோறும் ! மனதை விசாலமாக்கு / இதயத்தை மென்மையாக்கு / உள்ளத்தைத் தாராளமாக்கு / பிறக்கும் மகிழ்ச்சி / உன் வாழ்க்கையில் ! கவலைகளை மறந்து குறுகிய சிந்தனைகளை விடுத்து விசாலமாக சிந்தித்தால் வாழ்க்கை வளமாகவும் நலமாகவும் அமையும் என்பதை கவிதையில் நன்கு உணர்த்தி உள்ளார் பாராட்டுகள்.

தமிழகத்திற்கு அண்டை மாநிலங்கள் செய்து வரும் வஞ்சகம் கண்டு நெஞ்சகம் பொறுக்காமல் கவிதை வடித்துள்ளார். அருட்தந்தை என்பதையும் தாண்டி தமிழர்களின் உரிமைக்காக உரக்கக் குரல் தந்துள்ளார். மகாகவி பாரதியார் போல ரௌத்திரம் பழகி வடித்த கவிதை நன்று. பாராட்டுகள். தமிழா தலை நிமிர்வது எப்போது? குடிக்கத் தண்ணீருக்காக / ஆந்திரா, கேரளா, கர்நாடகா நோக்கி கூக்குரலிடுகிறாய்? தண்ணீர் தண்ணீர் என்று/ அவர்களோ உன்னை உயிரோடு உறிஞ்சுவதிலே / குறிக்கோளாய் இருக்கிறார்கள்.

தரத்தோடு வாழும் தமிழா! நீ தலை நிமிர்வது எப்போது? / நீ குட்டக் குட்டக் குனிவதால் உன்னைக் குட்டிக் கொண்டு இருக்கிறார்கள் / அரசியல் பகடைக் காய்களாக / உன்னை ஆட்டுவிக்கிறார்கள் நீ விழித்தெழுவது எப்போது? இப்பாரினில் மானம் உள்ள தமிழனாய் தலை நிமிர்ந்து வாழ்வது எப்போது?

உலகில் பிறந்த மனிதர்கள் எல்லோரும் மாற்றம் வேண்டும் என்கிறோம். ஆனால் பிறரிடம் மாற்றம் எதிர்நோக்கும் நம்மிடம் மாற்றம் வர சம்மதிப்பதே இல்லை. அதற்கு விடை சொல்லும் விதமாக வடித்த கவிதை நன்று. மாற்றம்! மாற்றம் ! மாற்றம் ! மாற்றம் ! மாற்றத்திற்காக ஏங்கும் அன்பே மாற்றத்தை உன்னிலிருந்து முதலில் தொடங்கு / இல்லையேல் / உன்னில் எழுவது ஏமாற்றமே !

இறுதி மூச்சு வரை தமிழ் சமுதாயத்தின் எழுச்சிக்காக உழைத்த மாமனிதர் தந்தை பெரியார் சொன்ன வைர வரிகள் நினைவிற்கு வந்தன. "உன்னை பிறர் எப்படி மரியாதையாக நடத்த வேண்டுமென்று எதிர்பார்க்கின்றாயோ? அது போலவே நீ பிறரை மரியாதையாக நடத்து". இயேசுவின் வாசகத்தில் சொல்வதென்றால் உன்னைப் போலவே பிறரையும் நேசி. நூல் முழுவதும் மனிதநேயம் விதைக்கும் விதமாக பல கவிதைகள் உள்ளன.

பொதுநலம் பேண வேண்டுமென்ற கருத்தையும் கவிதைகளில் வடித்து உள்ளார். எல்லாம் கடந்து ! சுயநலம் கடந்து / தன்னழிளித்து/ பிறர் வாழ வாழ்வதும்/ வீழ்வதுமே / சிறப்பு. ஆம் பிறருக்காக வாழ்ந்த மாமனிதர்கள் காமராசர், கக்கன், அப்துல்கலாம் போன்றவர்கள் இறந்து பல வருடங்கள் ஆன போதும் இன்றும் மக்கள் நினைந்து பாராட்டுகின்றனர்.

தன்னலமறந்து பிறர் நலம் பேணியவர்கள் இறந்தபின்னும் வாழ்கிறார்கள் என்பது முற்றிலும் உண்மை. இதுபோன்ற பல சிந்தனைகளை மலர்வித்தது கவிதை. மதம், மனிதனை நெறிப்படுத்த படைத்ததாகச் சொன்னார்கள். ஆனால் இன்று மதம் மனிதனை வெறிப்படுத்தவே பயன்படுகிறது. உலகம் முழுவதும் நடக்கும் வன்முறைக்கும், படுகொலைகளுக்கும் காரணம் மதவெறி.

பண்படுத்தப் படைக்கப்பட்ட மதம் இன்று புண்படுத்தும் வேலையை செய்து கொண்டு இருக்கின்றது. மதம் ஒரு அபின் என்றார் லெனின். அவர் கூற்றை இன்றைக்கும் மெய்ப்பிக்கும் மனிதர்களைக் காண்கிறோம். மதம் பற்றிய கவிதை சிந்திக்க வைத்தது. மதம்! பூசாரிகளின் வயிற்றுப் பிழைப்பு / அரசியல்வாதிகளின் பகடைக்காய்கள் / வியாபாரிகளின் முதலீடு / அன்றாடங்காய்ச்சிகளை ஏமாற்றும் போதைப் பொருள் / வன்முறைகள் / பகையுணர்வு / ஒற்றுமையின்மை/ தலைவிரித்தாடுகிறது / மதத்தின் பெயரால் / மதம் பிடித்த யானையை அடக்கலாம்/ மதம் பிடித்த மனிதனை அடக்குவது கடினம் மதப்பற்று வேண்டும்/ மதவேறி வேண்டாமே! மதத்தின் பெயரால் மோதல்கள் வேண்டாம்.

மதத்தை விட மனிதமே பெரிது என்பதை கவிதையால் உணர்த்தியது சிறப்பு. நூல் ஆசிரியர் அருட்தந்தை ஆ.லொயோலா அவர்கள் ஒரு மத போதகர் என்ற போதிலும் மனிதனுக்கு மதப்பற்று இருக்கலாம். ஆனால் மதவெறி இருக்கவே கூடாது என்று எல்லா மனிதர்களுக்கும் அறிவுறுத்தியது சிறப்பு. பாராட்டுகள். தொடர்ந்து எழுதுங்கள்.




## ( ஆ ) சாமி !

'நான் எட்டாம் வகுப்பு தோற்றுப் போனவன்...
வறுமை காரணம் இளம் வயதிலேயே வேலை தேடி
அலைந்தேன்....

கார் துடைக்கும் வேலை,லேத் வொர்க் ஷாப்பில் ஹெல்பர்
வேலை, மார்க்கெட்டில் மூட்டை தூக்கும் மேடை...,கட்டிடத்தில்
சித்தாள் வேலை....என நான் பார்க்காத வேலை இல்லை...

ஒன்றும் சரிப்பட்டு வருவதாய் தெரியவில்லை... உடம்பு தான்
இளைத்தது தவிர அரைவயிறு கூட நிரம்பாத நிலை...

என்னுடன் படித்தவர்கள் எல்லாம் பணம், பதவி, கார்,
பங்களா என வாழ என் நிலைமை இப்படி ஆயிற்றே...
என்று எண்ணி யாரோ கொடுத்த பழைய காவி வேட்டியுடன்
அந்த மரத்தடியில் அமர்ந்தேன்....

'சாமி என் நிலைமை ரொம்ப கஷ்டமா இருக்கு கொஞ்சம்
அருள் வாக்கு சொல்லுங்க !"
என்று என்னிடம் வந்து ஒருவன் கையை நீட்ட....

'ஏண்டா நானே பிச்சைக்காரன் நிலைமையில இருக்கேன் !'
என்று சொல்ல வந்த நாக்கை அடக்கி கொண்டேன் ....

'இன்று எண்ணி பத்தாவது நாள் உன் வாழ்க்கை மாறும்
மாறினால் எனக்கு சிறு தொகையை தர வேண்டும் என்றேன் !'

ஏதோ குருட்டாம்போக்கில் நான் சொன்னது அவன்
வாழ்க்கையை மாற்றி விட்டிருக்கிறது...
ஒரு லட்சம் பணத்துடன் அடங்கிய பையை என்னிடம் தந்து
'சாமி உங்களுக்கு என்னிடத்திலேயே ஒரு ஆசிரமும் கட்டி
தரேன் நீங்க என் கூடவே இருந்து அருள் வாக்கு தரணும் !'
என்றான் அவன்...

யாரோ செய்த புண்ணியத்தில் அவன் வாழ்க்கையை மாற்றி
இருக்க... 'அவன் வாழ்க்கை மாற நான் தான் காரணம் என்று
நினைத்து என்னை தெய்வமாக்கி அவன் சகல வசதியுடன்
ஆசிரமம் கட்டியும் தற. !" இன்று நான்...



'நாடறியும் 'கசக்கானந்தா ' சாமிகளாக
அருள்வாக்கு சொல்லிக் கொண்டிருக்கிறேன் !

இன்று என்னை சுற்றி 50 சீடர்கள்....
மூன்று உள்நாட்டு கார், இரண்டு வெளிநாட்டு
கார்...ஆசிரமம் மற்றும் இத்யாதிகள் வேறு.... !

**எம்.பி.தினேஷ்,** கோவை

## அங்கீகாரம்

முரட்டுப் பெண் நீ
என்ற முத்திரை
விழுந்திருக்கிறது
உன் மீது!
இதை விடக்கா த லி க் க
என்ன அங்கீகாரம்
வேண்டும்? எனக்கு!

## தீ

உன் கண்களில்
சிக்கி முக்கிக் கல்லை
ஒளித்து வைத்திருக்கிறாயா
என்ன?!
உன் பார்வை உரசும்
போதெல்லாம் தீப்பற்றிக்
கொள்கிறதே என் கா த ல்!

## தடை

உன் பார்வையில் ஏன்
இப்படி ஒரு தயக்கம்?
கா த லு க் கு ம்
புரட்டாசி மாதம்
ஒரு தடையா என்ன?!

## தலை தீபாவளி

நமக்குத்தலை தீபாவளி
என்பதாலோ என்னவோ
உடல் முழுவதும்
எனக்குப்பட்டாசாய்ப்
பரவுகிறது
இந்தக் கா த ல்!

## வெடி

சத்தமில்லாத
வெடி இருக்கிறதா?
என்று கேட்கிறாய்!
எனக்குச்சத்தமில்லாத
வெடி என்பது உன்
மு த் த ம் தானே அன்பே!

**முத்து ஆனந்த்**
வேலூர்



## பட்டாம்பூச்சி

எத்தனை எத்தனை விதமாய்
எண்ணற்ற நிறங்களில் நீ

தோட்டத்தைச் சுற்றிச் சுற்றித்
பறந்து திரிந்து வந்தேதான்

என கண்களை கவருகிறாய்
கருத்தெல்லாம் நிறைகிறாய்

தேன் குடிக்க நீ செல்லும்
பாங்கின் அழகே தனி
என்பேன்

சுற்றி வந்து மெல்ல நுகர்ந்து
அமர்ந்த வண்ணம் தேன்
பருகும்

அந்த அமைதியான
அழகில்தான்
அடிமையாகிப்
போகிறேன் நான்

உன்னைப் பிடித்து விளையாடி
என் அம்மாவிடம் வாங்கிய
அடி உதை

அநேகம் எனலாம்
ஐயோ பாவம் நீயும்
உன்னை நிறங்களில்
தோய்த்து அனுப்பிய

அந்த ஆண்டவனுக்கு
நன்றி சொல்வேன்
கண்ணுக்குத் தான்
எத்தனை அழகாய்

தெரிகிறாய் கருத்தில்
முழுதும் நிற்கிறாய்
வண்ணத்துப் பூச்சி என்பர்

பறந்து திரிவதால்
பட்டாம் பூச்சி என்பர் என்
மனத்தில் நீ

அழகின் அழகாய்
நிறங்களின் வடிவாய் நிதமும்
வந்து நிலையாய் அமர்ந்தாய்

பூக்களுக்கும் உனக்குமான
உறவில் உவகை கொண்டு
உலா வருகிறேன்



அழகே உன்னை
ஆராதித்து
மகிழ்கிறேன்
ஆனந்தம்
கொள்கிறேன்

**வி.பிரபாவதி**
மடிப்பாக்கம்

## ஒட்டாமை !

ஒட்டாது தண்ணீர்
தாமரை இலையில்
ஒட்டாது துன்பம்
இன்பத்தோடு ஒட்டாது தீயது
நல்லதோடு ஒட்டாது தீய நட்பு
நல்ல நட்போடு ஒட்டாது
மௌனம் ஓசையோடு
ஒட்டாது இரவு பகலோடு
ஒட்டாது கசப்பு
இனிப்போடு!



இப்படி
எல்லாவற்றிலும்
ஒட்டாமை
இருக்கிறது
ஒட்டுதல்
இருக்கும்
பொழுது!

**வி.கே. லக்ஷ்மிநாராயணன்**
சென்னை



## அவள்

என் முகம் உன் ஜன்னல்.
என்ன பார்வை அது!

எனது மனம் ரசிக்கிறது.
இடையிடையே சிரிக்கிறது.
உன்னைக் காணாதபோதும்!



பயணத்தை
விட
துணையையே
வாழ்ந்தேன்
அதிகமாக.

**கே. பி. ஜனார்த்தனன்**

## பௌர்ணமி இரவு

முகில் சூழ்ந்த வானில்
தெளிந்த வெள்ளி துளியாக
பரந்த வெண்நிலவு

மரக் கிளைகளின் இடையில்
பால்வெளி தூவிய
முத்துகளாய்
பாடிய இளந்தென்றல்

மெல்லிசையாக பொழியும்
ஒளியில் இருள் இன்னிசை
பாட நடனமாடும்
நட்சத்திரங்கள்

காதலின் ரகசியம் சொல்ல
ஆர்ப்பரித்து மணற்பரப்பை
தொட்டுத்தொடரும்
கடலலைகள்

மனிதனின் சுமைகள்
பௌர்ணமி நிலவின்
ஒளியில் கரைந்து சுத்தமான
கண்ணாடியாய் அமைதியை
பிரதிபலிக்கும் மனம்

**நா.பத்மாவதி**
கொரட்டூர்

## திருநங்கை

ஆணல்ல பெண்ணல்ல மற்று மிலாதொன்று
ஆனவனைக் கும்பிடுவோம் ஆண்டவன் என்றே
காணலுமாகாத கடவுளின் படைப்பாலே
பேணவும் ஆளின்றி புறந்தள்ளப் படுகின்றார் /



சொல்லத் தவிக்குது சூழ்ந்திடும் துன்பங்கலந்த
அல்லற் பிழைப்பு அவனியில் இவர் வாழ்வே
பள்ளிக்குச் செல்லவும் பார்ப்பவர் நகையாட
உள்ளம் நொந்திட உருவாவதும் இயலுமோ?/

திட்டும் கேலியும் தினமுமானா லுமவர்
எட்டும் அறிவினால் யார்க்குமிளைத் தவரில்லை
விட்டு விடாதிவர் உழைத்து முயன்றிட
எட்டிய உயரம் இமயத்தின் சிகரம் /

காட்சியாய்க் கண்முன் 'கௌரிசாவந்த்' திருநங்கை
சாட்சியாய் நிற்கின்றார் சாதித்துச் சகத்தில்
ஆட்சிசெயு பதவியாம் இயக்குனராய் இன்று
மாட்சியை உணர்த்தி மதித்துப் போற்றுவோம் /
( எச். ஐ . வி./எய்ட்ஸ் உள்ளவர்களுக்கு உதவும் சுகி சார்
சௌகியின் நிறுவனர் – 'கௌரிசாவந்த்' திருநங்கை)

**Dr. விஜயலக்ஷ்மி குமரகுரு**

## பெண்ணின் குரல் !

பெண்ணை ஒரு புறம் தெய்வம் என்கிறாய் !
பெண்ணை மறுபுறம் காயப்படுத்துகிறாய் ரணப்படுத்துகிறாய் !
மேடையில் ஆண் பெண் சமமென்று முழக்கமிடுகிறாய் !
இல்லத்தில் பெண்ணை மதிக்காமல் ஆட்டிப்படைக்கிறாய் !
அவள் உள்ளத்து உணர்வுகளுக்கு மதிப்பளிக்க மறுக்கிறாய் !

**கவிஞர் இரா .இரவி !**

## கவனம்

நமத்துப்போன
தீக்குச்சியாய்
கண்களில் சோர்வு
சுரக்கையில்
கவனக்கண்ணாடி
உடைந்து சிதறுகின்றது!

அகக்கண்களும்
புறக்கண்களும்
கவனக்கவசத்தை
அணியாவிட்டால்
இழப்புகள் ஏராளம்!

உறக்கத்திலும்
கவனமாயிருக்கும்
காலச்சூழலில்தான்
காலச்சக்கரம்
சுழல்கிறது!

கவனம் குளத்தில்
கல் எறிந்தால்
உண்டாகும்
அதிர்வலைகளாய்க்
கலைந்து போகும்
தவமாகும்!


இங்கே நிதானமாய்ச்
செய்திடும் தியானமாம்
கவனத்தை கையாள
மறந்தால் கல்வியில்
இருள் சூழும்!

கவனமே ஏமாப்புதரும்
ஆயுதங்கள் அல்ல
இருளில் ஒளிந்திருக்கும்
கள்வர்களின் சதிராட்டம்
நச்சுப்பாம்புகளின் உலா
பகைமை சதுரங்கம்
வாகனப்பயணத்தில்
கடிவாளம் என



இன்னுயிரையும்
உடைமையினையும்
காக்கும் கவனமே
மனதை இயக்கும்
கலங்கரை விளக்கம்!

**கவிஞர் த.அனந்தராமன்**
துறையூர்



## ஆரோக்கிய யோகா

உடலுக்கு உற்சாகம் தரும் ஓர் அற்புதப் பயிற்சி,
உள்ளத்துக்கு அமைதி தரும் நல்ல பயிற்சி.
காலை பொழுதில் ஆதவனை பார்த்து, அந்தரத்தில் எழும்பி
காற்றை சுவாசித்து மனதைத் தூய்மை
செய்யும் ஒரு அற்புத பயிற்சி ஆசனங்கள் பல உற்சாகம் தர ,
பிராணாயாமம் உயிருக்கு சக்தி ஊட்ட,



தியானம் மனதில் சாந்தி கொடுக்க, அறிவு
தெளிவு பெற,
யோகா சிறந்த செல்வம் என உணர்வோம். இது
நம்ம உற்சாகத்துடன் வாழ்வைக்கும் ஆரோக்கிய
வாழ்வை
தரும் ஓர் அற்புதப் பயிற்சி .

**உஷா முத்துராமன்**

## வான் மழை

வான் மழையே.....
நீ மும்மாரி பொழிந்து
நில அரசனைக்
குளிர்வித்தாய்

உழவன் விதைத்த
வித்துக்களை விளைவித்தாய்

துடவையும் மின்னியது
பசுமையாய்

மாந்தர்தம் வயிற்றுப் பசி
போக்கினாய்

அறங்குன்றாமல் உன்
தடத்தில் பயணிக்கிறாய்

உன் கடமையில் கில்லியாய்
களமாடுகிறாய்

உனை நான்
என்னென்று போற்றுவேன்

என்னென்று பாடுவேன்

கிடைத்தபாடில்லை
வார்த்தைகள் – எனக்கு

கிடைத்தபாடில்லை
வார்த்தைகள்

பாரதியிடம் கடன் பெற்றுப்
போற்றவா–!
இல்லை கவியரசிடம் பெற்றுப்
பாடவா!!

நீ இல்லையேல்
இப் பூமிக்கு ஏது ஓசை

மாந்தர்க்கு தான் ஏது
வாழ்க்கை

வாழ்வளிக்கும் வான்
மழையே....

ஒவ்வொரு முறையும் நீ
பிறப்பெடுக்கிறாய்

குழந்தையாய் பூமியில்
தவழ்கிறாய்

பல் வடிவம் எடுக்கிறாய்

நெளிவு சுழிவு அறிந்த
உன்னை

வாழ்த்துகிறேன்
போற்றுகிறேன்

வானவில்லில்
ஆடை தைத்து
பரிசாக அளிக்கிறேன்!

வான் மழையே...
அறம் குன்றாமல்
வலம் வந்த உன்னை
சீண்டிப் பார்க்கின்றனரே
இம் மானிடர்கள்

அற மற்ற செயலை அரங்
கேற்றுவதில் கில்லாடிகள்

பொய்த்துப் போனாய் நீயும்
அதனால்

நில அரசனும் மாறுபட்டான்
தரிசாய்!

வான் மழையே அவனை
மன்னித்திடு

அறம் என்றால் என்னென்று
போதித்திடு

அவனுக்கு போதித்திடு

நீ மும்மாரி பொழிந்திடு!

பூமி செழித்திட பெய்திடு

நான் பாமாலை சூட்டுவேன் –

உனை பாக்களால்
தொடுப்பேன் – உன்



துளி கொண்டே உனை
பாடுவேன்!!!

**ஜெயா வேதாசலம்**
புதுக்கோட்டை

## மரபுக்கவிதைளும் புதுக்கவிதைகளும்:

வகுத்து வைத்த
இலக்கணத்தில்
வகையாகக் கவி வடித்து
கற்றோர் அறிவில்
களம் அமைத்து ஏற்ற
சொல்லால் ஏற்றம் காணும்

அறிஞர்களின் புலமையாலே
அடுக்கடுக்காய் கவிதை
வரும் யாப்பும் அணியும்
அணிவகுத்து
தப்பாது நடை பயிலும்

தளையும் சீரும் தடம் மாறாது
களைகாணாப் பயிராக
கட்டாகும் கவியாக

சீரான சொல் கோர்த்து
சிந்தை நிறை பாக்களே
செந்தமிழின் இலக்கணத்தை
சீலத்திற்குச் சொல்லி நிற்கும்

மரபுப் பாவாலே
மனம் நிறையும் ஐயமில்லை
புரியாத பொருளாலே
பொழுதோடும் சில
நேரம்

சிந்தனையில்
விழுந்த
கருத்தெல்லாம்
சீர்மிகு சொல்லாகி
கற்பனைக்குக்களம்
அமைத்து
களிப்புடனே உலா வரும்

வார்த்தைகளின்விடுதலையில்
வாகாகக் கவி பெருகும்

சிந்தனைக்குச் சிறையில்லை
எழுத்துக்கு எல்லையில்லை

கற்றவர்க்குக் கவியாகும்
மற்றவர்க்கு எளிதாகும்
உற்றோரின் உரையாடலாய்
உள்ளத்தில் நிறைந்திருக்கும்

புத்தம் புது மலராக
புலர் காலைப் பொழுதாக
பார்க்கின்ற பொருளெல்லாம்
பரவசமாய்க் கவியாகும்

மரபுக் கவிதையும்
புதுக்கவிதையும்
இணை சேராத்
தண்டவாளங்கள்
பாதை மாறிப் போனாலும்
பயணத்தில் என்றும்
மாற்றமில்லை



சேர்க்கும் இடம்
சுகமாகும்
செந்தமிழும் நாளும்
வசமாகும்.

**தமிழ்நிலா**

## மனிதரில் எத்தனை குணங்கள்?

மலரென மலரும் மனங்களில்
மாறுபடும் பல குணங்கள்...

பிறர் கண்ணீர்
துடைக்கும் கருணை

எல்லையில்லாது பொழியும்
மழையாக அன்பு

தீப்பொறி மின்னலாய்
சுடும் கோபம்

நிலையான மலையைப்
போல பொறுமை

அடங்காத ஆசை
கொள்ளும் பேராசை

அருவியாக கொட்டும்
வெள்ளமாக தாராளம்

நிஜத்தைத் தொடரும்
நிழலாய் பொய்
ஆதவனாய் எப்போதும்
பிரகாசிக்கும் உண்மை

காற்று நிறைந்த
பந்தாக அகந்தை

ஆழ வேரூன்றிய
மரமாக தாழ்மை

நான்கு திசைகள்,
ஐவகை நிலங்கள்,
ஆறுவகை சுவைகள்,
ஏழு ஸ்வரங்கள் போல
மனிதரில் எண்ணிலடங்கா
குணங்கள்

நல்லவற்றின் ஒளியும்



கெட்டவைகளின்
இருளும்
சேர்ந்த கலவையான
குணங்களின்புனைவே
மனித வாழ்வு

**நா.பத்மாவதி**
கொரட்டூர்

## என்னென்னவோ...

என்னென்னவோ
நினைத்துத்தான்
பார்க்கிறேன்...

என்னென்னவோ
சொல்லித்தான் பார்க்கிறேன்...

என்னென்னவோ
எழுதித்தான்
பார்க்கிறேன்...

என்னென்னவோ
விளக்கித்தான்
பார்க்கிறேன்...

என்னென்னவோ
செய்துதான்
பார்க்கிறேன்...
என்னென்னவோ
பண்ணித்தான்
பார்க்கிறேன்...

என்னவோ போ...



உன்னைத்தான்
முழுசாகத்தான்
வடித்திடத்தான்

முடியவில்லை போ...

**ஆறுமுகம் நாகப்பன்**

## இறைவி.

நரையழகி உனைப் பார்த்துத்
தரைவழுக்கிப்போனதடி.

உன் கரம்பிடித்த நாள்
முதலாய் மனம் பைத்தியமாய்
ஆனதடி.

உன் கன்னக்குழியினிலே
என்னுயிரைப்
புதைத்துவிட்டேன்.

உதட்டுச்சாலைவழி
இதயத்துக்குள்
இறங்கிவிட்டேன்.

பருவங்கள் நடந்து சென்ற
பால் முகத்தின் சுருக்கத்தில்
தமிழெழுதிப் பழகுகின்றேன்
கவிதையைத்
தழுவுகின்றேன்.

வசந்தங்கள் வாழ்ந்திருந்த
உயிர் தின்னும் உதட்டோரம்
செந்தேனின் ஒத்தடங்கள்
சிந்தி விழச் சேமிக்கிறேன்.

வெள்ளி விழா
காணுகின்ற
வெள்ளருவிக்
கார்கூந்தல்.

ஒளிச்சேர்க்கை
நடத்தி எனை ஒளித்து
வைக்கும் நாடகங்கள்.

மின்னொளியைத் தின்கின்ற
மின்னல் நிலாத் துண்டுகள்.

கண்ணென்று நடமாடும்
காந்தத்தின் அழைப்புகள்.

உன் நடுங்கும் கரம்பிடித்தே
நம்பிக்கை நான் வளர்ப்பேன்.

மடியில் உனைக்கிடத்தித்
தலைவிரித்துப்
பேன்பார்ப்பேன்.

பொசுக்கென நீ சிணுங்க
பொய் சொல்லி
நானணைப் பேன்.

போதுமென நீ அழவே
இன்னும் வேண்டுமென
அடம்பிடிப்பேன்.

வற்றிவிடும் வாழ்க்கையிலே
பற்றி வரும் காதல் தீ.

சுற்றிவரும் உலகமாய்
எனக்கான நீ ஒருத்தி.

செத்துவிழும் வரையினிலும்



ஜீவனுக்குள்
குடியிருக்கும்

தத்தி நடைபோட்டு
வரும் கிழவியே நீ
உலகழகி
என் இறைவி'

**நறுமுகை.**

தமிழ்நாடு இ-பேப்பர்.காம்

# வாசகர் கடிதம்

மசோதாக்களை
ஆளுநர்கள் நிலுவையில்
வைப்பதை நியாயப்படுத்த
முடியாது என்கிறது
உச்சநீதிமன்றம்.
ஆளுநர்களிடம் உச்ச
நீதிமன்றம் கேள்விகள்
கேட்பதில் எந்த தவறும்
இல்லை. நியமிக்கப்பட்ட
ஆளுநர்களை
விட மக்களால்
தேர்ந்தெடுக்கப்பட்ட
உறுப்பினர்களைக்
கொண்ட சட்டமன்றம்,
மேலானது என்ற
கருத்தை உச்சநீதிமன்றம்
வலியுறுத்தியுள்ளது.
சத்தீஸ்கர் வெள்ளத்தில்
திருப்பத்தூரைச் சேர்ந்த
ஒரே குடும்பத்தினர் நாலு
பேர் பலி. சோகத்தை
ஏற்படுத்திய செய்தி.
ஊற வைக்காமல்
சாப்பிடக்கூடாத உணவுகள்
என குயினோவா
மற்றும் தானியங்கள்,
அரிசி, நட்ஸ்
மற்றும் விதைகள்,
கொட்டைகள், பருப்பு
வகைகள் மற்றும்
உலர் பழங்கள் என
நலம் தரும் மருத்துவம்
பட்டியலிட்டுள்ளது. உடல்
ஆரோக்கியத்திற்கு
தடையாக இருக்கும்
சோம்பேறித்தனம்
குறித்தும் தைரியத்தின்
அவசியத்தையும்
பல்சுவை களஞ்சியம்
குறிப்பிடுகிறது. கருப்பு
பணத்தை வெள்ளையாக்க
அரசியல் கட்சி: ரூபாய் 271
கோடி பரிவர்த்தனை செய்த
ராஜஸ்தான் தொழிலதிபர்.
இந்தியா பாகிஸ்தான்
உட்பட ஏழு போர்களை
நிறுத்தியுள்ளேன்:
அமெரிக்க அதிபர்
ட்ரம்ப் கருத்து. ட்ரம்ப்
தொடர்ந்து இதையே கூறிக்
கொண்டுள்ளார்.



**-எஸ்.அப்துல் ரஷீத்**
**தஞ்சாவூர்**

---

ஜவுளி ஏற்றுமதிக்கு நாற்பது
நாடுகளில் வாய்ப்பு#வர்த்தக
அமைச்சகம்
வர்த்தக ஆலோசகர் பீட்டர்
நவரோ கூறியதாவது:
இந்தியா ரஷியாவிடமிருந்து
கச்சா எண்ணெய்
வாங்காமலிருந்தால்
விதிக்கப்பட்ட 50%
பாதியாகக் குறைக்க
நடவடிக்கை
மேற்கொள்ளப்படும்
மசோதாக்களை
ஆளுநர்கள் நிலுவையில்
வைப்பதை நியாயப் படுத்த
முடியாது#உச்ச நீதி மன்றம்
திருவானைக் கோவிலில்
நயினார் நாகேந்திரன்
தியானம்#வழக்கமாக
அதிமுகவின் முக்கிய
கொள்கை
விநாயகர் சதுர்த்திக்காக
3 லட்சம் பேர் சொந்த
ஊர் பயணம்#விற்பனை
அமோகம்
கோடநாடு பங்களாவை
ஆய்வு செய்ய அனுமதி
கிடையாது#நீதி மன்றம்
உத்தரவு
இஸ்ரேலின் அயர்ன் டோம்
போல இந்தியாவின் வான்
வெளியை சுதர்ஸன சக்கரம்
காக்கும்#முப்படை தளபதி
தகவல்
புதுக் கவிதைகள் அபாரம்
வாசகர் கடிதங்கள்
அட்டகாசம்
நூல் விமர்சனம் அருமை
வங்கிக் கடன் மோசடி#ஜிவி
பிலிம்ஸ் நிறுவனத்திற்கு
ஐம்பதாயிரம் அபராதம்
டிரம்ப நான்கு முறை
அழைத்தும் பேச மறுத்த
பிரதமர் மோடி#ஜெர்மனி
செய்தித் தாள் தகவல்
விரைவு ரயிலில்
கேட்பாரற்றுக் கிடந்த 21
கிலோ கஞ்சா#ஆர்பிஎஃப்
போலீசார் விசாரணை
கோவை வழியாக
கேரளாவுக்கு கடத்த
முயன்ற 1875 கிலோ
ஜெலட்டின் குச்சிகள்
பறிமுதல்
மதுரையில் ஏழு
மாதங்களில் 90க்கும்
மேற்பட்ட போக்சோ
வழக்குகள் பதிவு
கேரளாவில் பதினெட்டு
பேருக்கு மூளை-
அமீபா பாதிப்பு#தடுப்பு
நடவடிக்கையில் அரசு
தீவிரம்
கருப்பு பணத்தை
வெள்ளையாக்க அரசியல்
கட்சி#ரூ 271 கோடி
பரிவர்த்தனை செய்த
ராஜஸ்தான் தொழிலதிபர்
2030 காமன்வெல்த்
போட்டிகளை நடத்த
ஏலத்தில் பங்கேற்கிறது
இந்தியா
ரஷ்யா யுத்தம் செய்ய
இந்தியா நிதியுதவி#50%
வரிவிதிப்பு பற்றி டிரம்பின்
வர்த்தக ஆலோசகர் சூசகம்
பிரிட்டனில் பாலியல்
குற்றங்களுக்காக தண்டனை
பெற்றோரில் இந்தியர்கள்
அதிகம்=72 பேர் சிக்கினர்
அமெரிக்க பள்ளியில்
துப்பாக்கிச் சூடு# இரு
குழந்தைகள் உயிரிழப்பு
அமெரிக்க ரிசர்வ் வங்கி
ஆளுநர் லிசா குக் திடீர்
பணி நீக்கம்
இந்தியா-பாகிஸ்தான்
உட்பட ஏழு போர்களை
நிறுத்தியுள்ளேன்#டிரம்ப்
கருத்து
இம்ரான் கானின் கட்சி
இடைத்தேர்தலை
புறக்கணிக்க திட்டம்
தீட்டியிருக்கிறது
வடகொரிய ஜனாதிபதியை
சந்திக்க விரும்பும்
அமெரிக்க அதிபர் டிரம்ப்



**-பி. சுரேகா**
**சென்னை**

---

எனது இன்றைய
கடிதத்தின் விசேஷம்
- செய்திகள் அல்ல,
நமது படைப்பாளர்களின்
கவர்ச்சிகரமான படைப்புத்
திறன் பற்றியே!

முதலில் திருமிகு.
மீனா சேகர் அவர்களின்
"நிலாவே வா" சிறுகதை.
கதைமாந்தர்களின் காதல்
வயப்பட்ட மனோநிலைகள்
அருமையாக
சித்தரிக்கப்பட்டுள்ளது.
"கல்லதர் அற்றம்
கடக்க யாவதும் வல்லுந
கொல்லோ மடந்தை
மெல்லடி" எனக் கேட்ட
கோவலனை இந்தக்
கதையின் அரவிந்த்
நினைவூட்டுகிறான்.
அதுபோல் "நின்
பிரிவினும் சுடுமோ இப்
பெருங்காடு" எனக்
கேட்ட முல்லைத்திணை
தலைவியை சுவாதியும்
நினைவூட்டுகிறாள்.
உண்மைக் காதலின்
உயரிய சித்திரம். சபாஷ்!

சிவ. முத்து லட்சுமணன்
அவர்களின் நமி
நந்தியடிகள் நாயனார்
வரலாறு மனிதருக்குள்
பேதமில்லை எனும்
கருத்தை முன்னிறுத்தும்
பான்மை கவனம்
ஈர்க்கிறது. இளைய
சமுதாயத்தின் ஆன்மிக
அஸ்திவாரத்திற்கு மற்றும்
ஒரு கடைகல் கட்டுரை.
வார்த்தை வளம் மிக்க
அவரின் தமிழ் லாவகம்
ஒரு தனி பாணியுடனான
லாவணி. நாயனார்கள் பற்றி
நல்லதையே வழங்கும்
நாயகருக்கு நன்றிகள்.

"தோல்வி வந்தால் அதை
மிதித்துச் செல்.
சோகம் வந்தால் அதை
உடைத்துப் போடு. உயர்வு
உன்னிடம் ஓடோடி வரும்"
என்ற உற்சாக வரிகளில்
தாமரைத் தமிழ் நிலவு
அவர்கள் "உயர்வு" என்ற
தன் கவிதையில் பீனிக்ஸ்
பறவையின் தத்துவத்தை
ஒலிக்கச் செய்துள்ளார்.
அருமையான டானிக்
கவிதை.

வரைமுறைச்
சட்டகங்களுக்குள் வெண்பா
கவிதைகளைப் பொதிந்து
வழங்குவது முன்னைவர்.
வேதநாயகம் அவர்கள்
பெரு விருப்பம். மாறாக
"தத்துவ வித்தகனே"
என்று கணபதி
கவிதையை சரளமான
தளத்தில் செதுக்கியுள்ளார்.
எதுகையும், மோனையும்,
இணைந்த பக்திக்
கீர்த்தனையாக மிளிர்கிறது
இந்தப் படைப்பு. மிக நன்று
சார்.

திரு. ஆறுமுக நாகப்பன்
அவர்களின் அன்னைக்கான
அஞ்சலிக் கவிதை
தாயை இழந்த மகன்கள்
அனைவரின் ஆன்மாவின்
எதிரொலியே அன்றி
வேறல்ல. " மனம் ஆறாது
துடிக்கின்றேன், ஆறுதல்
தேடித் தவிக்கின்றேன்"
என்ற சொற்கள் துயரத்தின்
துளிகள். என் கண்ணிலும்
நீர் துளிர்த்தது. A significant emotional elegy.
பாசத்தின் பரிதவிப்பு
கொடுமைதான் சார்.

"சங்கல்பம் எடுப்போம்,
சாதிப்போம்" என்று
சொல்லும் கவிதையில்
வழக்கம்போல் "நேர்மறை
சிந்தனைக்கு நான் இங்கே"
என்று நவில்கிறார் திரு.
நெல்லை குரலோன்
அவர்கள். ரஷ்ய -
உக்ரைன் போரை நிறுத்தும்
வல்லமை யாருக்கும்
இல்லையோ என்பதில்
அவரது ஆதங்கம்
தெரிகிறது. பண்புக்கும்,
அன்புக்கும் அடையாள
தேசம் பாரதம் என்பதில்
ஒரு பெருமிதமும்,
ஓருலகம், ஒரே தேசம்
அமைய வேண்டும் என்ற
உத்வேகமும் ஒளிர்கிறது.
கருத்துச் செறிவும், கவிதை
நடையும் களிநடம் புரியும்
கற்கண்டுப் படைப்பு.
பாராட்டுக்கள்.

இவை தவிர அற்புதமான
படைப்புகள் ஏராளம்
மிகுந்துள்ளன. ஒரு
பானை சோற்றுக்கு ஒரு
சோறு பதம் என்பதாக
சிலவற்றை மட்டும்
சுட்டியுள்ளேன். விரித்துச்
சொல்ல இடமில்லை.
மற்றபடி எல்லாமே அல்வா
சுவைதான்.

இத்தனைப் படையலையும்
பந்தி வைத்த தமிழ்நாடு
இ இதழ் குழுமத்தார்க்கு
நன்றிகள் பல.
மீண்டும் நாளை
சந்திப்போம்.



**-P.கணபதி**
**பாளையங்கோட்டை**

---

23 ஆண்டுகளுக்கு பிறகு
மாதவன் மீரா ஜாஸ்மின்
நடித்த "ரன்" பட மறு
வெளியீடு

விக்ரம் பிரபு நடித்த "லவ்
மேரேஜ்" அமேசான் ஓடிடி
தளத்தில் வரும் 29ம் தேதி
வெளியாகும் செய்திகளை
நம் நாளிதழ் மூலம்
அறிந்தேன்.

சத்யராஜ் " சிவாஜி"
படத்தில் நடிக்க மறுத்ததற்கு
அவரது மார்க்கெட் சரிவில்
இருந்ததாகவும், ஒரு
படமேனும் தன்னைக்
கதாநாயகனாக தூக்கி
நிறுத்தாதா? எனக்
காத்திருந்ததாகச்
சொன்னாலும், கமல்-
ரஜினி படங்களில் மீண்டும்
வில்லனாக நடிப்பது
எனில், அவர்கள் இவர்
கதாநாயகனாக நடிக்கும்
படத்தில்" வில்லனாக"
நடிக்க வேண்டும்
என ஒரு நிபந்தனை
வைத்திருந்ததாகப் படித்த
செய்தி என் நினைவில்
வந்து போனது.



**-ஸ்ரீகாந்த்**
**திருச்சி**

---

நேற்றைய வாசகர் கடிதம்
பகுதியில் தென்காசி
வாசகர்
வெங்கடாசலபதி அவர்கள்
தெய்வம் இதழ் குறித்து
அன்பான அக்கறையில்
எழுதி யிருந்தது என்
நெஞ்சம் தொட்டது நிஜம்.

வாசிக்கின்ற பத்திரிகைக்கு
உண்மை, நேர்மை,
விசுவாச உணர்வுடன்
இருப்பது என்பது விசேஷ
குணம். பாராட்டுக்குரிய
பண்பாடு.

இன்னொன்று...
தமிழ் நாடு இ
பேப்பர் என்னைப்
பொறுத்தவரையில்
டிஜிட்டல் உலகில்
ஒரு புரட்சி என்பதில்
சந்தேகமே இல்லை. அச்சு
நாளிதழ்கள் கமர்ஷியல்
கண்ணோட்டத்தில் பிடிஎப்
வடிவத்தில்
வெளியிட்டு வருகின்றன.
அது வேறு...இது வேறு.
இரண்டு ஆண்டுகளைத்
தாண்டி, சந்தா கட்டணம்
எதுவும் இல்லாமல் தினசரி
20 பிளஸ் பக்கங்களில்
செழிக்க செழிக்க
செய்திகளையும் நல்ல
நல்ல தகவல்களையும்
சிறந்த முறையில்
வடிவமைத்து வாசகருக்கு
வளமார்ந்த நேசத்துடன்
அள்ளி அள்ளி வழங்கி
வரும்
தமிழ் நாடு இ பேப்பரின்
உன்னதம் உணர்ந்து
தென்காசி வாசக நண்பர்
வெங்கடாசலபதி அவர்கள்
உள்ளன்புடன் பதிவு
செய்தமைக்கு நமது
வாசக உறவுகள் சார்பில்
நன்றிகளை தெரிவித்துக்
கொள்கிறேன்.
( யாருக்கு யார் நன்றி
சொல்வது என்ற மரபைத்
தாண்டி அன்பின் வழி
நின்று
சொல்கிறேன்)

ஆகவே நண்பர்
குறிப்பிட்டது போல்
தமிழ் நாடு இ பேப்பர்
குழுமத்தின் சார்பாக
வெளிவரும் அருள் தரும்
தெய்வம் இதழுக்கு,
ஆத்மார்த்தமாக
அனைவரும் தங்கு
தடையின்றி -- கிஞ்சிற்றும்
தயக்கமின்றி --
தாமதமின்றி சந்தாதாரர்
ஆகி பூரண ஆதரவு
கொடுத்து
மாபெரும் பணியை
நிறைவேற்றி வைக்கும்
வேள்வியில் சங்கமித்து
சரித்திரம் படைப்போம்.
We Can because We think
We Can...

ஜவுளி ஏற்றுமதிக்கு
40 நாடுகளில் வாய்ப்பு
வர்த்தக அமைச்சகம்
தீவிரம்.

ஒரு கதவு அடைபட்டால்
நாலு கதவுகள் திறக்கும்
என்பது தானே நான்மறை
தீர்ப்பு!
அமெரிக்காவின்
மிரட்டலுக்கு அடங்கிப்
போகும் நிலையில்
இந்தியா இல்லை என்பது
தான் நிதர்சனம்.

ரஷ்யாவில் இருந்து கச்சா
எண்ணெய் வாங்காமல்
இருந்தால் இந்தியாவுக்கு
25%வரியாக குறைப்பு
டிரம்ப் வாய்ஸாக மீண்டும்
சொல்கிறார்
அதிபரின் வர்த்தக
ஆலோசகர் பீட்டர் நவரோ!
காலம் பதில் சொல்லும்.
அதுவரை பொறுமை
காப்போம்!

நலம் தரும் மருத்துவம்
பகுதியில் ஊற
வைக்காமல் சாப்பிடக்
கூடாத உணவுகள் பற்றி
தெளிவான தகவல்கள்...
வாசகர் நலன் கருதி
சிந்தித்து செயல் படுவதில்
தமிழ் நாடு இ பேப்பர்
குழுமத்தின் நிறுவனர்
ரொம்ப ரொம்ப சமத்து
என்பதை அறிகிற
போது சந்தோஷம்
ஊற்றெடுக்கிறது.
சபாஷ் சபாஷ் என்று
சொல்லத் தோன்றுகிறது.

கேரள பல்கலைக்கழகத்தில்
திருநங்கைகளுக்கான
விடுதி... மாநிலத்தில் முதல்
முயற்சியாம்.
பாராட்டுக்கள்!
கேரளம் எப்போதும்
இந்த மாதிரியான
ஆக்கப்பூர்வமான
விஷயங்களில் துணிந்து
முன் மாதிரியாக இருப்பது
பெருமைப்படத் தக்கது.

நமிநந்தி யழகன் நாயனார்
வரலாறு
அருமையான சித்தரிப்பு...

தினம் ஒரு தலைவர்கள்
பகுதி
வழக்கம் போல் வாசகருக்கு
வரப் பிரசாதம்....
தீனதயாள் குப்தா வரலாறு
படிக்கும் போது பரவசம்
அள்ளியது.
பல்சுவை களஞ்சியம்
அபாரம் அபாரம்!
தெய்வீக அருள் தரும்
ஆன்மிகம் அற்புதம்
அற்புதம்!
விதம் விதமாக வாசகர்
கடிதங்கள்... ஜோர் ஜோர்...
கவிதைகள் அனைத்தும்
வாசித்து முடித்ததும்
எனக்குள்
ஒளிர்ந்த வெளிச்சம்...
அடடா ஆனந்தம்!
தமிழ் நாடு இ பேப்பரின்
புகழ் ஓங்கி
ஒலிக்கட்டும்!



**-பி.சிவசங்கர்**
**கோவை**

---

ஜவுளி ஏற்றுமதிக்கு 40
நாடுகளுக்கு
வாய்ப்பு. மசோதாக்களை
முதல்வர்கள்
கட்டுப்படுத்த இயலாது.
ஆன்மீக செய்திகள்
அனைத்தும்
சூப்பர் ரகம். விநாயகர்
சதுர்த்தி
கொண்டாட்டம்
முடிந்தவுடன்
ஓணம் பண்டிகை
கொண்டாடப்பட்டது
கொடநாடுபங்களாவை
ஆய்வு செய்ய
அனுமதி கிடையாது.
சென்னை
வாக்காளர் பட்டியலில்
புகார்.
இஸ்ரேல் அயன் டோம்
போல
இந்தியாவின் சுதர்சன
சக்கரம்
செயல்படும். தீவனூர்
விநாயகர்
கட்டுரை புதுமையாக
இருந்தது.
சின்னஞ்சிறு கோபு
நெல்லை
குரலோன் முத்து ஆனந்த்
ஆகியோர் எழுதிய
கவிதைகள்
அனைத்தும் சூப்பர் ரகமாக
இருந்தது. மூவருக்கும்
பாராட்டுக்கள்
விநாயகர் அகவல் பற்றிய
கட்டுரை
நல்ல பயனுள்ளதாக
அமைந்தது
பரந்தூர் விமான
நிலையத்திற்கு
இடம் அளிக்க மறுப்பு.
டிரம்ப் பலமுறை
அழைத்தும்
மோடி நிராகரித்து விட்டார்.
ஜம்மு காஷ்மீரில் கன மழை
பெய்து வருகிறது.
கேரளாவில்
18 பேருக்கு அமீபா
தொற்றுநோய்
பரவி உள்ளது. காசா மீது
இஸ்ரேல் தாக்குதல்
நடத்தியுளளது.
2030 காமன்வெல்த்
விளையாட்டுப்
போட்டிகளில் கலந்து
கொள்ள
இந்தியா ஆர்வம். ரஷ்யா
யுத்தம்
செய்ய இந்தியா நிதி உதவி
அளித்துள்ளது என
அமெரிக்கா
புகார் வாசித்துள்ளது.
அமெரிக்க பள்ளிகளில்
துப்பாக்கி
சூடு நடைபெற்றுள்ளது.
இந்தியா பாகிஸ்தான்
போர் உட்பட
ஏழு போர்களை நான்
நிறுத்தி
உள்ளேன் என டிரம்ப்
தம்பட்டம்
அடித்து வருகிறார்.
நான் இதுவரை தெய்வம்
இதழுக்கு எட்டு நபர்களை
சந்தாதாரராக சேர்த்து
இருக்கிறேன்.
இதைப் போன்று
ஒவ்வொருவரும்
ஊக்கமாக செயல்பட்டால்
ஆன்மீகம் வளர்ச்சி
அடையும்.
உலகில் உள்ள எந்த
பிரச்சனைகளையும்
ஆன்மீகம்
மூலம் மட்டுமே சரி செய்ய
முடியும்.
எனவே தமிழ்நாடு இ
பேப்பர்
நடத்தும் தெய்வம் இதழுக்கு
நாம் உறுதுணையாக
இருந்து
ஆதரவு அளிக்க
கேட்டுக்கொள்கிறேன்
மீண்டும் நாளை
சந்திப்போம்



**-நடேஷ் கன்னா**
**கல்லிடைக்குறிச்சி**

# வாசகர் கடிதம்

வணக்கம் 29.8.25 அன்றைய தமிழ்நாடு இ பேப்பர் முதல் பக்கத்தில் ஜவுளி ஏற்றுமதிக்கு 40 நாடுகளில் வாய்ப்பு என்ற செய்தி மகிழ்ச்சியாக இருந்தது இன்றைய பஞ்சாங்கம் மிக அற்புதமாக அமைய எனக்கு உதவியது மனம் நிறைந்த பாராட்டுக்கள். இன்றைய திருக்குறளை பொருளுடன் படித்து மகிழ்ச்சி அடைந்தேன். கலைத் திருவிழா போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவர்களுக்கு பரிசளித்தது பாராட்டுக்குரியது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலை உணவு வழங்கும் திட்டத்தின் துவக்க நிகழ்ச்சி படங்களுடன் பார்க்கும்போது மகிழ்ச்சியாக இருந்தது. நலம் தரும் மருத்துவம் பகுதி ஒரு அற்புதமான பகுதி. நாம் ஆரோக்கியமாக வாழ பலவித தகவல்களை சொல்லும் இந்த பகுதியை ஆர்வமுடன் படிக்கத் தோன்றுவது உண்மை. இன்று ஊற வைக்காமல் சாப்பிடக் கூடாத உணவுகள் என்ற செய்தியை படித்ததும் மிக அருமையான தகவல் என்று ஆவலுடன் தெரிந்து கொண்டேன். கேரள மாநிலத்தில் அந்த பல்கலைக்கழகத்தில் திருநங்கை திருநங்கைகளுக்கான விடுதி திறந்தது மிக அருமையான தகவல். பாராட்டுக்கள். திருப்பதி தேவஸ்தானத்தில் நான்கு வேற்று மத ஊழியர்கள் சஸ்பண்ட் என்ற செய்தி திருப்பதியில் நடப்பது மிக தெளிவாக காட்டியது. தினம் ஒரு தலைவர்கள் பகுதியில் தீன் தயாள் குப்தா அவர்களின் வரலாறும் புகைப்படமும் மிகவும் அற்புதம். நல்ல அருமையான வரலாற்றுச் செய்தி மன மகிழ்ச்சியுடன் படித்து மகிழ்ந்தேன். பல்சுவைக் களஞ்சியம் பகுதி மிகவும் அருமை சோம்பேறித்தனம் பற்றி படித்ததும் இது உண்மைதான் என்று உணர்ந்தேன். ஜோக்ஸ் படிக்க படிக்க சிரிப்பில் மகிழ்ந்தேன். தெய்வீக அருள் தரும் ஆன்மீகத்தில் வந்த அனைத்து தகவல்களும் மிகவும் அருமை. படிக்கும்போதே ஒரு ஆன்மீக உணர்வு வந்து உடல் புல்லரிப்பது உண்மை.

42 அடியில் தாம்பூல தட்டு விநாயகர் சிலை என்று செய்தி ஆர்வமாக பார்க்க வைத்தது. பஜனை விநாயகர் சிலை மிகவும் அற்புதம். எல்லா தகவல்களிலும் நல்ல நல்ல செய்திகளை கொடுக்கும் இந்த பக்கம் உண்மையிலேயே அற்புதமான பக்கம் என்று சொன்னால் அது மிகையாகாது. சுற்றுலா பக்கத்தில் வந்த நீண்ட தூர சாலை பயணங்களை எளிதாக்க உதவும் சூப்பர் டிப்ஸ் உண்மையிலேயே பயனுள்ள தகவல் இதனால் சுகமான பயணமாக அமைவது உறுதி அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அவர்கள் நான்கு முறை அழைத்தும் பேச மறுத்த பிரதமர் மோடி அவர்கள் பற்றி படித்ததும் அரசியலை நன்றாக புரிந்து கொள்ள முடிந்தது. ஜம்மு-காஷ்மீரில் கனமழை என்ற செய்தி நல்ல தகவலாக இருந்தாலும் அங்கு வெள்ளத்தால் சூழாமல் இருக்க வேண்டுமே என்று தோன்றியது. கருப்பு பணத்தை வெள்ளையாக்க அரசியல் கட்சிகள் செய்யும் அந்த முயற்சிகளைப் படித்ததும் அதிர்ச்சியாக இருந்தது. புரையோடி போன ஊழலை எதிர்த்து இந்தோனேஷியாவில் மாணவர்கள் போராட்டம் செய்தது .அங்கு நடக்கும் அரசிலை மிக அருமையாக படம் பிடித்துக் காட்டியது. அமெரிக்காவில் ரிசர்வ் வங்கி ஆளுநர் லிசா குக் திடீர் பணி நீக்கம் செய்தது அதிர்ச்சியான தகவல். வெள்ளிக்கிழமை விடியலை வெள்ளந்தியாக சிரிப்புடன் தொடங்க நல்ல தகவல்களை அழகாக கொடுத்த தமிழ்நாடு இ பேப்பரின் ஆசிரியர் குழுமத்திற்கு மனமார்ந்த பாராட்டுக்கள்



-உஷா முத்துராமன்

ரஷ்யாவிடம் இருந்து இந்தியா கச்சா எண்ணெய் வாங்குவதன் மூலம் " ரஷ்யா உக்ரைன் உடன் போர் புரிவதற்கு நிதியுதவி அளிக்கிறது " என்று அமெரிக்க அதிபரின் ஆலோசகர் பீட்டர் நவரோ கூறியுள்ளார்.

வரிகளை உயர்த்துவதன் மூலம் இந்தியாவை பயமுறுத்தி பணிய வைக்கலாம் என்று அமெரிக்கா நினைக்கிறது. இந்தியாவோ பதட்டப்படாமல் இருக்கிறது. இந்தியாவின் இந்த நிதானம் அமெரிக்காவை அச்சம் கொள்ள வைக்கிறது.

" இந்தியா பாகிஸ்தான் போரை நான்தான் நிறுத்தினேன் " என்று நாற்பதாவது முறையாக பீற்றிக் கொள்கிறார் ட்ரம்ப். அவரது பிதற்றலுக்கு நமது பிரதமர் தனது வாயால் பதில் அளிக்க வேண்டும்.

ஆனால் தேசிய முக்கியத்துவம் பெற்ற நிகழ்வுகளில் நமது பிரதமர் தனது கருத்தை தெரிவிப்பதே கிடையாது. மௌனமாகவே இருந்து விடுகிறார். அவரது அமைச்சர்கள்தான் பதில் கூறுகின்றனர்.

கேரளாவில் மூளையை தின்னும் அமீபா நோய் 18 பேரிடம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. புதிய நோய்களின் அரங்கேற்றம் பெரும்பாலும் கேரளாவில் தான் நடைபெறுகிறது.

இந்த நோய்க்கு நீர்மூலம் பரவும் கிருமிகளை காரணம் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட நாளில் கிருமிகள் இருக்கும் குடிநீர் ஆதாரங்களில் கிருமி நாசினி தெளிக்கப்படுவதை ஒரு இயக்கமாக நடத்த கேரள மாநில அரசு முடிவு செய்திருக்கிறது.

பொதுவாக உள்ளாட்சி அமைப்புகள் தங்கள் பொறுப்பில் இருக்கும் குடிநீர் மேல்நிலைத் தொட்டிகளை மாதாமாதம் சுத்தம் செய்வதாக கணக்கு எழுதி விட்டு அந்த தொட்டிகளில் இருந்து அசுத்த நீரை குழாய்களின் மூலம் வீடுகளுக்கு வினியோகம் செய்கின்றனர்.

தண்ணீர் தொட்டி சுத்தம் செய்யப் பட்டதாக கணக்கு எழுதுவதில் நிலையான லஞ்சம் சம்பந்தப்பட்டவர்களுக்கு கிடைக்கிறது.

தமிழக முழுவதும் இந்த ஊழல் நடைபெறுகிறது. அரசியல் கட்சிகள் சம்பந்தப்பட்டிருப்பதால் இந்த ஊழல் அடக்கி வாசிக்கப்படுகிறது.

கேரளாவை போல ஏதாவது புது நோய் தமிழகத்திலும் பரவினால் மட்டுமே இதற்கு தீர்வு கிடைக்கும்.



-வெ.ஆசைத்தம்பி
தஞ்சாவூர்

WANTED
SALES EXECUTIVES
Salary Upto 25,000
COLLECTION EXECUTIVES
Salary Upto 25,000
FIELD SALES MANAGER
Salary Upto 35,000
Attractive Monthly Incentive & Allowances.Loacation-All Areas in & Around Chennai
9438610756







VACANT LAND FOR RENT
1 ACRE in SURAPET (Nr PUZHAL)
2 ACRES in KOVUR (Nr PORUR)
2 ACRES in KOLAPAKAM
(Nr VANDALUR)
Can Be Given On Long Lease
For Schools and College
Strictly No Broker.
Ct : 96003 34968

அவசர விற்பனை
CMDA APPROVED
PLOT மீஞ்சூர்
(நந்தியம்பாக்கம்)
சதுரடி ~~1199~~/-
Sq.ft. 999/- ரூபாய் மட்டும்
95144 75275



## சென்னை பப்ளிக் ஸ்கூல்
அண்ணாநகர்
**பஸ் டிரைவர்**
குறைந்தபட்சம் 2 வருட அனுபவம்
Call: 9840083977

## Dr. M.G.R.
EDUCATIONAL AND RESEARCH INSTITUTE
DEEMED TO BE UNIVERSITY
University with Graded Autonomy Status
(An ISO 21001 : 2018 Certified Institution)
Periyar E.V.R. High Road, Maduravoyal, Chennai-95, Tamilnadu, India.
Requires the following
**Ladies Hostel Wardens**
Only Lady Individuals to Apply within 3 days
Candidates with significant experience & Fluency in Hindi. will have added advantage
Salary is not a constraint for deserving candidates
hostels@drmgrdu.ac.in
Mobile: 9884595999

## WANTED CAR DRIVER
10 வருட HIGHWAYS ல் அனுபவமுள்ள
**கார் டிரைவர்**
உடனடியாக தேவை.
வயது 35 க்குள். நல்ல சம்பளம்.
கொளத்தூர், சென்னை-82
88387 42895




## WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349

- Residential Manager Salary - 25000, for an Old Age Home
- Accountant with Experience - Salary - 19000.
- Supervisor - Salary - 17000.
- Housekeeping - Salary - 15000.

Free Food & Accommodation
The Chennai Homes
Lacha Iyanar street, Thirukazhukundram, Kadambadi- 603104
9176677770 / 9841077770




## WANTED
- Marketing Manager
- Marketing Executive
- Sales Manager
- Sales Executive

SWASTIK REFRIGERATION TRADERSS
Airconditioner Spare Parts Distributors
Chennai, Coimbatore, Madurai, Trichy, Vellore, Pondy, Salem, Erode
93634 12002

## TVS 2 Wheeler Showroom @ Chennai
Req. Exp.
- Sales Manager
- Sales Executives (Male / Female)
- Service Advisors
- Technicians
- PDI Technicians
- Floor In-Charge
- Spare Parts In-Charge

Free Accommodation*/Attractive Salary ESI/PF/Incentives/Annual Bonus
Ct: 73051 87222

## டிரான்ஸ்பார்மர் உற்பத்தி நிறுவனத்திற்கு
தொழிற்சாலை மேலாளர் மற்றும் மேற்பார்வையாளர்கள் தேவை
டிரான்ஸ்பார்மர் தயாரிப்பில் நல்ல திறமையும் அனுபவமும் உள்ள நபர்கள் தொடர்பு கொள்ளவும்
vj1995712@gmail.com
73974 93911

## அஜந்தா டெக்ஸ்டைல்ஸ்
பாண்டி பஜார்
அனுபவமுள்ள
**சேல்ஸ் பெண்கள்**
தேவை
சம்பளம்: 15,000 + 4000 Inc.
96000 84918 / 99620 74422

## SUKDHA INDUSTRIES PVT LTD
Auto Corrugated Box Manufacturing Unit Located Near "CHENGALPET" Requires
- ADMIN. MANAGER
- ACCOUNTANT
- CLERK & TYPIST
- SUPERVISOR

THIRUPORUR-CHENGALPET ROAD
Mullipakkam Junction,Periya Irumbedu Village Chengalpet district-603 105.
9840 44 5294
Apply Immediately to :
sukdhaindustries@gmail.com

## ஆட்கள் தேவை
- ஹாஸ்டல் வார்டன்
- எலெக்ட்ரிசியன்
- சமையல் (ஆண்/பெண்)

உடனடியாக தேவை
8778399976 / 9789974898




## Required
COMMERCIAL ASSISTANT / ACCOUNTS ASSISTANT
DEGREE / DIPLOMA
Proficiency in Excel, Vlookup, Pivot Table
in and around POONAMALLEE
Shall apply @
insulationsindiafin@gmail.com
Contact: 72990 12003


## தாம்பரம் மாநகராட்சிக்கு
வார்டு சூப்பர்வைசர் மற்றும் டிரைவர்கள் தேவை.
(Badge & Heavy License must)
+91 91502 90742
+91 97899 28036
+91 75399 61333

## WANTED
SALES OFFICERS
TSI-Territory Sales Incharge
with minimum 2 yrs. exp.
சென்னையில் Reputed Leading FMCG Products தயாரிக்கும் கம்பெனிக்கு தேவை.
உடனடியாக அணுகவும்:
9361212739

## சென்னையில் உள்ள எங்களது பிரபல மினரல் வாட்டர் கம்பெனிக்கு
Fresher / Experienced
**SALES EXECUTIVE**
தேவை. நல்ல சம்பளம் வழங்கப்படும்
தொடர்புக்கு :
8667092636 / 9443262859

## TVSSCS நிறுவனத்திற்கு
கீழ்க்காணும் பணிகளுக்கு அனுபவமுள்ள ஆட்கள் தேவை:
1. Forklift Operator
2. Tow Truck Operator
3. Welder (Arc Welder)

வயது: 18 முதல் 32 வரை (ஆண்கள் மட்டும்)
கல்வித்தகுதி: SSLC / HSC / Any Degree / Diploma (Pass & Fail)
சம்பளம் ரூ.16000 to 21600 /-
பணியிடம்: ஸ்ரீபெரும்புதூர் / இருங்காட்டுக்கோட்டை / திருவள்ளூர்
விருப்பமுள்ள நபர்கள் உடனடியாக கீழ்கண்ட எண்களில் தொடர்பு கொள்ளவும்.
9677798818 / 9500602535





# பல்சுவை களஞ்சியம்




## புதினா கீரையின் அற்புதங்கள்!



(புதினா ) ஒரு மருத்துவ மூலிகையாகும். ஆனால் நாம் உணவின் வாசனைக்காக மட்டும் சேர்த்து வருகிறோம். இதன் அற்புதமான மருத்துவ பயன்களை தெரிந்துகொண்டால் தொடர்ந்து பயன்படுத்தலாம்.

புதினா கீரையில் நீர்ச்சத்து, புரதம், கொழுப்பு, கார்போஹைடிரேட், நார்ப்பொருள் உலோகச்சத்துக்கள், பாஸ்பரஸ், கால்சியம், இரும்புச்சத்து, வைட்டமின் ஏ, நிக்கோட்டினிக் ஆசிட், ரிபோ மினேவின், தயாமின் ஆகிய சத்துக்களும் அடங்கியுள்ளன. சட்னி, ஜூஸ் எந்த விதத்தில் இதை பயன்படுத்தினாலும் இதன் பொது குணங்கள் மாறுவதில்லை என்பது இதன் முக்கிய அம்சம்.

அசைவ உணவு மற்றும் கொழுப்பு பொருட்களை எளிதில் ஜீரணமாக்குகிறது. இரத்தம் சுத்தமாகும். வாய் நாற்றம் அகலும். பசியை தூண்டும். மலச்சிக்கல் நீங்கும். பெண்களின் மாதவிலக்குப் பிரச்னைகள் தீர புதினாக்கீரை உதவுகின்றது.

ஆண்மைக் குறைவை நீக்கி முழுமையான இல்லற இன்பத்தை அனுபவிக்கவும் புதினாக் கீரை உதவுகின்றது. வயிற்றுப் புழுக்களை அழிக்க இது உதவுகின்றது. வாய்வுத் தொல்லையை அகற்றுகின்றது.

புதினாவை நீர் விடாமல் அரைத்து வெளி உபயோகமாகப் பற்றுப் போட்டால், தசைவலி, நரம்புவலி, தலைவலி, கீல்வாத வலிகளின் வேதனை குறையும். ஆஸ்துமாவையும் புதினாக் கீரை கட்டுப்படுத்துகின்றது.

மஞ்சள் காமாலை, வாதம், வறட்டு இருமல், சோகை, நரம்புத் தளர்ச்சி ஆகியவற்றுக்கும் புதினாக் கீரை சிறந்த மருந்தாகப் பயன்படுகிறது. முகப்பரு உள்ளவர்களும், வறண்ட சருமம் உள்ளவர்களும் இதன் சாரை முகத்தில் தடவி வர பலன் கிடைக்கும்.

புதினாவை நிழலில் காயவைத்து பாலில் சேர்த்து கொதிக்கவைத்து டீக்குப் பதிலாக அருந்தி வந்தால். உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும்.

## பீட்ரூட் ஒரு சர்வ நிவாரணி!



பீட்ரூட் காய், கீரை, ஜூஸ் என பீட்ரூடின் அனைத்து பாகங்களும் உடலுக்கு நன்மை பயக்கக் கூடியவை. பீட்ரூட் என்ற ஒற்றை உணவுப்பொருள் உடலின் பல்வேறு சிக்கல்களைத் தீர்க்க வல்லது ஆகும்.

பீட்ரூட்டை பிழிந்து சாறு எடுத்து தேனுடன் கலந்து சாப்பிட்டு வர அல்சர் குணமாகும்.

பீட்ரூட் சாறுடன் வெள்ளரிச்சாறு கலந்து சாப்பிட்டு வர சிறுநீரகங்களும் பித்தப்பையும் சுத்திகரிக்கப்படும்.

பீட்ரூட்டை நறுக்கி பச்சையாக எலுமிச்சை சாற்றில் தோய்த்து உண்டுவர இரத்தத்தில் சிவப்பணுக்கள் உற்பத்தியாகும்.

கல்லீரல் கோளாறுகளுக்கும் பீட்ரூட் ஒரு சிறந்த டானிக். பித்தம் அதிகமாகி அடிக்கடி பித்த வாந்தி எடுப்பவர்களுக்கு பீட்ரூட் ஒரு சிறந்த டானிக்.
பீட்ரூட் சாறு அஜீரணத்தை நீக்கி செரிமானத்தைக் கூட்டும்.

தலையில் ஏற்படும் வெள்ளை நிற பொடுகுகளைக் களைய பீட்ரூட் ஜூஸை பொடுகு இருக்கும் இடங்களில் மசாஜ் செய்து இரண்டு மணிநேரம் கழித்து சீயக்காய் பவுடர் கொண்டு தலை குளித்தால் நாளடைவில் பொடுகுகள் சரியாகும்.

புற்றுநோயினால் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் நோயாளிகள், ஊட்டி பீட்ரூட் ஜூஸ் தினமும் 1 டம்ளர் பருகி வந்தால் புற்றுநோய் பரவுவது தடுக்கப்படும். ஆரம்ப நிலையிலுள்ள புற்றுநோயை குணமாக்கும் வல்லமை படைத்தது பீட்ரூட்.

பீட்ரூட் கீரையையும் மற்ற கீரைகள் போல் சமையல் செய்து சாப்பிட அல்சர், மஞ்சள் காமாலை போன்ற நோய்கள் சரியாகும்.

புதியதாக இரத்த அணுக்கள் உருவாக துணை புரிகிறது. பச்சைக் காய்கறிகள், கீரைகள், பழங்கள், பேரீச்சம் பழம், அத்திப்பழம் ஆகியவற்றை அதிக அளவு உண்டும், இரத்தத்தின் அளவு அதிகரிக்காமல் இருக்கும் பட்சத்தில் பீட்ரூட்டை வாரத்திற்கு நான்கு நாட்கள் உண்டால் நல்ல பலன் கிடைக்கும்.

## மீம்ஸ்













| | |
|---|---|
| 100க்கும் 105க்கும் நடுவுல என்ன இருக்கு? | 0 தான் இருக்கு. |
| ஒருத்தன் பொண்டாட்டி சமையல வாயில வைக்க முடியலன்னு பேங்க் மேனேஜர் கிட்ட போய் சொன்னாலும் ஏன்? | ஏன்னா நம்ம கஷ்டத்தை சொன்னாதான் லோன் கிடைக்கும்னு சொன்னாங்களாம். |
| ஒரு அம்மா எப்போதும் தூங்கும் போது கண்ணாடி போட்டுக்கிட்டு தான் தூங்குமாம் ஏன்? | என அப்பதான் தூக்கத்தில் வரும் கனவு தெளிவா தெரியுமாம். |
| ஒருத்தன் விநாயகர் படத்தின் மேல நடிகர் ராதிகா போட்டோ ஒட்டிட்டு போனானாம் ஏன்? | ஏன்னா அது சித்தி விநாயகர் ஆம். |
| ஒருத்தன் துணி கடைல போய் சேலை கேட்டான் அதுக்கு அவன் கோயில்ல போய் வாங்க என்று சொன்னாலும் ஏன்? | ஏன்னா அவங்க பூ சேரி கேட்டாங்களாம். |



## ஜோக்ஸ்

குருவே! நாணயத்தை சுண்டி விடறேன். பூ விழுந்தா நீங்க நினைச்சது நடக்கும்.
ஓ! தல விழுந்தா?
அப்டி நடக்க வாய்ப்பே இல்ல தலை ரசிகன்கிட்டேயே தலை விழுவார்ங்கறியா?
==================
டாக்டர், கர்ப்பிணிப்பெண் காலைல எந்திரிச்சதும் யார் முகத்துல விழிக்கறாங்களோ அவன் சாயல்ல பேபி பிறக்குமா?
அப்டி பார்த்தா பால்காரன் சாயல்ல தான் எல்லா குழந்தையும் இருக்கும்
============




மிஸ்! உங்க கல்யாண ஆல்பத்துல 1000 க்கும் மேல செல்ஃபி ஃபோட்டோஸ் இருக்கே?
அவங்க எல்லாம் என் முன்னாள் பாய் ஃபிரண்ட்ஸ்,
=================
அத்தான்! 9000 ரூபா குடுங்க. ஹேர் ஸ்ட்ரெய்ட்டனிங் பண்ணனும்.
போன மாசம் தானே கர்லிங் ஹேர் க்கு 15,000 வாங்குனே?பேசாம 2 சவுரி வாங்கிக்க
==================
டாக்டர்!டென்சன் ஆகாம இருக்கனும்னா என்ன பண்ணனும்?
9 வது சன் பிறந்ததும் கு க பண்ணிடனும்
=============
பார்டர்ல ஏதாவது பிரச்சனைன்னா உதவி செய்வீங்களா?
அந்த 100 சேலையை பிரிக்கக்கூட மாட்டோம். பார்டர் எப்டி இருந்தா என்ன?
==================
சாமியார்க்கு ஆங்கிலத்தில் என்ன?
GOD WHO
==============
மாப்ளை! அத்தையும் ,2 பொண்ணுங்களும் பஸ் ஸ்டாப் ல நிக்கறாங்க்ளாம். நீங்க பிக்கப் பண்ணி கூட்டிட்டு வர்றீங்களா?
ம்.கூட்டிட்டு வந்து பிக்கப் பண்ணிக்கறேன்
=============
டியர், எங்க வீட்ல ரொம்ப ஸ்ட்ரிக்ட்டு , வெளீல எல்லாம் அனுப்ப மாட்டாங்க
அப்டியா? எங்க வீட்ல விடுவாங்க. நான் உங்க வீட்டுக்கு வந்துடவா?
================
சமையல் குறிப்பாளினி சமந்தா = பலாப்பழத்தை காயா இருக்கும்போதே எடுத்து......
ஏம்மா சுத்தி வளைக்கறீங்க? பலாக்காய்னு சொன்னா புரியாதா?
===============
எதுக்கு சார் அடிக்கடி “ 1000 RT " னு ட்வீட்டறீங்க?
1000 RT ட்வீட் நிறைய போட்டிருக்கேன், இதெல்லாம் நமக்கு சர்வசாதாரணம்னு சொல்ல
==============
முதல்வர் ,மக்கள் முதல்வர் என்ன வித்யாசம்?
முதல்வர் னா டம்மியா இருக்கனும். மக்கள் முதல்வர்னா ஜெயிலுக்குப்போய்ட்டு வந்த மம்மியா இருக்கனும்
====================
குருவே! ஐம்புலன்களையும் அடக்க என்ன வழி?
சொல்றேன். குருதட்சணையா ஸ்ரீ திவ்யா ,தீப்தி பிட்டை வாட்சப்பில் அனுப்பு!
====================
இதோ அதோ னு பாக்கப் போக படம் வர்றத்துக்குள்ள பலபேர் செத்திடுவாங்க போல?
படம் வந்ததும் நீங்க!

# வாழ்வு தரும் ஆரோக்கியம்



## நள்ளிரவில் அதிக பசியா? இதை செய்யுங்கள்



நீரிழிவு நோயாளிகள் ரத்த சர்க்கரை அளவை கட்டுக்குள் வைத்துக்கொள்வதற்காக பெரும்பாலும் இரவில் குறைவாகத்தான் சாப்பிடுவார்கள். அப்படி குறைவாக சாப்பிடுவதால் இரவு 2 மணியளவில் கண்டிப்பாக பசி எடுத்துவிடும். ஆனால் பசியில் அதிகமாக சாப்பிட்டு விட்டாலும் சரி, தவறான உணவைத் தேர்ந்தெடுத்து சாப்பிட்டாலும் சரி ரத்த சர்க்கரை அளவு அதிகரிக்கும் அபாயம் உள்ளது.

உண்மையைச் சொன்னால் ரத்த சர்க்கரை அளவு அதிகரிக்கக் கூடாது ஆனால் அதே சமயம் பசியும் அடங்க வேண்டும், அதற்கான உணவைக் கண்டுபிடிக்க வேண்டும் என்பதே சாதனையாகத்தான் கருதப்படுகிறது.

இரவு நேரத்தில் ஏற்படும் பசியைப் போக்க வேண்டும். ஆனால், ரத்த சர்க்கரை அளவை பாதிக்கக் கூடாது. இந்தவகை உணவுகளைப் பற்றிதான் இப்போது பார்க்கப் போகிறோம்...

முதலில் பிளைன் க்ரீக் யோகர்ட் அதாவது கிரேக்க தயிர். இதில் புரதமும் மிகக்குறைந்த அளவிலான இயற்கை சர்க்கரையும் உள்ளது. இதில் உள்ள புரதம் உங்கள் பசியை போக்குவதோடு இல்லாமல் செரிமானத்தையும் சீராக்கும். அத்துடன் ரத்த சர்க்கரை அதிகரிப்பைத் தடுக்கவும் உதவி செய்யும். 2019 –யில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வில், கிரேக்க தயிர் ரத்த சர்க்கரை அளவை அதிகரிக்காது என்று கண்டறியப்பட்டுள்ளது.

எனவே, நீங்கள் இரவு நேர பசியின் போது பயப்படாமல் கிரேக்க தயிரை சாப்பிடலாம்.

அடுத்ததாக பாதாம் பருப்பு. பாதாம் பருப்பில் குறைந்த கார்போஹைட்ரேட், அதிக நார்ச்சத்துகள் நிறைந்துள்ளதாகவும் இது ரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவை பராமரிக்க உதவுவதாக 2002 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வு முடிவு தெரிவித்துள்ளது. எனவே நீங்கள் தூங்க செல்வதற்கு முன் ஒரு கைப்பிடி பாதாம் பருப்பை தாராளமாக சாப்பிடலாம். வயிறு முழுமையாக உள்ளது போன்ற உணர்வையும் தரும். அதேசமயம் உங்கள் தூக்கத்தை சீர்குலைக்காமல் பார்த்துக்கொள்ளும்.

தினமும் நள்ளிரவில் பசிக்கிறது என்றால், தூங்க செல்வதற்கு முன் நீங்கள் தாராளமாக வேக வைத்த முட்டையை சாப்பிடலாம். 2023-இல் நடத்தப்பட்ட ஆய்வின்படி முட்டையில் கார்போஹைட்ரேட் குறைவாக இருந்தாலும் நல்ல கொழுப்புகள் மற்றும் புரதம் அதிகமாக இருப்பதால் ரத்த சர்க்கரை அளவை கட்டுக்குள் வைத்திருக்க உதவுகிறது. அதுமட்டுமின்றி, மெலடோனின் உற்பத்தியை அதிகரிக்க செய்து தூங்குவதற்கும் உதவி செய்கிறது.

கடைசியாக பாசிப்பருப்பு சூப் மற்றும் பனீர் முதலானவற்றை எடுத்துக்கொள்ளலாம். பாசிப்பருப்பு சூப் செய்யும் போது அதில் செரிமானத்திற்காக சிறிதளவு நெய், சீரகம், பெருங்காயம் முதலானவற்றை சேர்த்துக்கொள்ள வேண்டும். சூப்பை வெதுவெதுப்பான சூட்டில் குடிக்க வேண்டும். பாசிப்பருப்பு சூப்பும் ரத்த சர்க்கரை அளவை கட்டுக்குள் வைத்திருக்க உதவுகிறது.



பனீர் எடுத்துக்கொள்ளும் போது அதனுடன் கருப்பு மிளகு சேர்த்துக்கொள்ளலாம். 2019 ஆய்வு முடிவின் படி பனீரில் கார்போஹைட்ரேட் குறைவாகவும், கேசீன் புரதம் அதிகமாகவும் உள்ளதாகவும் இதனால் பசியைக் கட்டுப்படுத்தி முழுமையாக சாப்பிட்ட உணர்வையும் வழங்குவதாக கூறுகிறது.

உங்கள் நள்ளிரவு நேர பசியை போக்கிக்கொள்ளவும் ரத்த சர்க்கரை அளவைக் கட்டுக்குள் வைத்திருப்பதற்கும் மேற்கண்ட உணவுகளை நீங்கள் தாராளமாக எடுத்துக் கொள்ளலாம்.

## சர்க்கரைக்கு பதில் வெல்லம் பயன்படுத்தினால் கிடைக்கும் நன்மைகள்



சர்க்கரை அதிகமாக எடுத்துக்கொள்பவரா நீங்கள். அப்படியென்றால் இந்த பதிவு உங்களுக்காகத்தான். ஒரு நாளில் நீங்கள் எடுத்துக்கொள்ளும் சர்க்கரைக்கு பதிலாக வெல்லம் எடுத்துக்கொண்டால் உங்கள் உடலுக்கு அவ்வளவு நன்மை கிடைக்கபெறும்.

வெல்லத்தில் ஆன்டி ஆக்சிடன்டுகள், இரும்புச்சத்து, செலினியம், மக்னீசியம் முதலான சத்துகள் அதிகமாக உள்ளது. அதனால் தான் சித்த மருத்துவத்தில் கூட வெல்லம் சேர்க்கப்படுகிறது.

வெல்லத்தில் இரும்புச் சத்து அதிகமாக உள்ளதால், இரத்தத்தை சுத்திகரிக்க உதவுகிறது. இதன்மூலம் சருமத்தை மேம்படுத்தி உடலையும் ஆரோக்கியமாக வைத்திருக்க உதவுகிறது.

நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து, வளர்சிதை மாற்றத்தை மேம்படுத்துகிறது. ஒவ்வாமையால் ஏற்படும் ஆஸ்துமா பிரச்சனைகளுக்கு உகந்ததாகவும், தொண்டை புண் மற்றும் இருமலை போக்கவும் சளிக்கு அருமருந்தாகவும் செயல்படுகிறது.

வெல்லத்தில் பொட்டாசியம் சத்து அதிகளவில் உள்ளதால் இதய செயல்பாட்டை சீராக்கவும், ரத்த அழுத்தத்தை குறைக்கவும் உதவுகிறது.


வயிறு, உணவுக்குழாய், நுரையீரல் போன்ற உடல் உறுப்புகளை உறுதியாகவும், சுத்தமாகவும் வைத்திருக்க உதவுகிறது. மேலும், மலச்சிக்கலைத் தடுத்து செரிமானத்தை மேம்படுத்தவும் உதவுகிறது. முக்கியமாக வெல்லத்தில் உள்ள நீர் உடல் எடையைக் குறைக்க உதவுகிறது.

நீங்கள் உணவு அருந்தியபிறகு வெல்லம் சாப்பிடுவது மிகவும் நல்லது. ஏனென்றால், வெல்லம் செரிமான நொதிகளை சீராக செயல்படுத்துகிறது. இதனால் உணவானது எளிதில் உடைந்து ஜீரணமாக உதவி புரிகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக வெல்லம் மிகச்சிறந்த நச்சு நீக்கி என்றே சொல்லலாம். இயற்கையாகவே வெல்லத்தில் நச்சுகளை நீக்கும் தன்மை உள்ளது. இது நம்முடைய உடலில் உள்ள நச்சுகளை வெளியேற்றி கல்லீரலையும் சுத்தப்படுத்துகிறது.

இத்தனை சிறப்பம்சங்களைக் கொண்ட வெல்லத்தை சர்க்கரைக்கு மாற்றாக தாராளமாக பயன்படுத்தலாம். இருப்பினும் சர்க்கரையோ வெல்லமோ எதுவாக இருந்தாலும் அளவோடு எடுத்துக்கொள்வது நல்லது.

## தலையில் எண்ணெய் தேய்ப்பது சரியா...?



தலைமுடி அடர்த்தியாகவும் கருகருவென்றும் பளபளப்பாகவும் இருக்க எண்ணெய் மிகமிக உதவியாய் இருக்கும்.

தலையில் எண்ணெய் தேய்க்காமல் இருப்பதை விட தினமும் எண்ணெய் தேய்ப்பதினால் உடலுக்கு நிறைய நன்மைகள் இருக்கின்றன. காய்ந்து போன, கரடுமுரடான, சரிவர பராமரிக்காமல் பாதிக்கப்பட்ட, அடைபட்ட மயிர்க்கால்களின் நுண்துளைகள் எரிச்சலூட்டும் தலைப்பொடுகு உள்ள தலைமுடி மற்றும் முடி கொட்டுதல் போன்ற பிரச்சனைகள் தீர வாரத்துக்கு இருமுறை தலையில் எண்ணெய் தேய்ப்பது நல்ல பலன்களைத் தரும்.

ஒருநாள் விட்டு ஒருநாள் அல்லது வாரத்தில் இரண்டு நாட்கள் தலையில் எண்ணெய் தேய்ப்பது என்பது உலர்ந்த காய்ந்துபோன தலைமுடிக்கு மிகவும் நல்லது. தலையில் ஏற்படும் சில சரும நோய்களுக்கு தினமும் மருந்து கலந்த எண்ணெய் தேய்ப்பது நல்லது என்று சருமநோய் சிறப்பு சிகிச்சை நிபுணர்கள் பரிந்துரை செய்வதுண்டு.

தலையிலுள்ள மயிர்க்கால்கள் பாதிக்கப்படாமல் இருக்க எண்ணெய் மிகவும் உதவியாய் இருக்கும். தலையில் எண்ணெய் தினமும் தேய்ப்பதால் தலைமுடிக்கு மட்டுமல்ல, உங்கள் உடம்பையே புத்துணர்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் குளிர்ச்சியாகவும் வைத்திருக்கும். உங்கள் தலைமுடி அடர்த்தியாகவும் கருகருவென்றும் பளபளப்பாகவும் இருக்க எண்ணெய் மிகமிக உதவியாய் இருக்கும்.

தலைக்கும் தலையிலுள்ள மயிர்க்கால்களுக்கும் தேவைப்படும் சத்துப்பொருட்களுக்கும் வைட்டமின்களுக்கும், மயிர்க்கால்கள் உறுதியாக இருக்கவும் தலைமுடி நன்கு வளரவும் எண்ணெய் மிகவும் உதவுகிறது.

தலைமுடியில் இருக்கும் சுருள்முடிகளை நேராக்க எண்ணெய் உதவுகிறது. தலையில் பொடுகு வராமல் தடுக்க, இளநரை வராமலிருக்க, மன அழுத்தத்தைப் போக்க, பேன் தொந்தரவு இல்லாமலிருக்க, தலைமுடி கொட்டுவதைத் தடுக்க எண்ணெய் மிகவும் உதவுகிறது.

## காடை இறைச்சியில் இத்தனை சத்துக்களா?



கோழி இறைச்சியைவிட மிகவும் சுவையும், சத்தும் கொண்டது காடை இறைச்சி. 'கட்டில் கிடப்பார்க்கு காட்டில் படும் காடை' என்கிறது, சித்த மருத்துவ பாடல் ஒன்று. நோய்களால் உடல் இளைத்த ஒருவன் காடை இறைச்சியுடன் சோறு சாப்பிட்டால், கட்டழகன் ஆவான் என்கிறது தமிழ் நூல் ஒன்று.

கோழி இறைச்சியை ஒப்பிடும்போது மிகக் குறைவான கொழுப்பு, ஏராளமான உயிர்ச்சத்துகள் காடை இறைச்சியில் உள்ளன. மூளைக்கு முக்கியமான கோலின் சத்து, வைட்டமின்கள் ஏ, பி-1, பி, டி, கே மற்றும் புரதம், கால்சியம், இரும்பு, துத்தநாகம் உள்பட பல சத்துக்கள் இவற்றின் மூலம் கிடைக்கின்றன. காடை இறைச்சியில் அதிக ஒலிக் அமிலம் இருப்பதால், இதய நோய் அபாயத்தை குறைக்கிறது என்று ஆய்வுகள் கூறுகின்றன.

நீரிழிவு நோயாளிகள், காடை இறைச்சியை உணவில் எடுத்துக்கொண்டால் ரத்த சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்தலாம். மேலும் கண்பார்வை பாதிப்புகளை தடுத்து விழித்திரைகளை மேம்படுத்துகிறது. காடை இறைச்சியில் உள்ள பாஸ்பரஸ், கால்சியம் சத்துக்கள் மூட்டு தேய்மானத்தை தடுப்பதில் முக்கிய பங்காற்றுகிறது.

இதே போல், காடை முட்டைகள் நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்தி, மூளையின் செயல்பாட்டை அதிகரிப்பதுடன், நரம்பு மண்டலத்தை உறுதிப்படுத்துகின்றன. உடலில் ஹீமோகுளோபின் அளவை அதிகரிப்பதன் மூலம் ரத்த சோகையை தடுக்கிறது. காசநோய், ஆஸ்துமா மற்றும் நீரிழிவு நோய்க்கான சிகிச்சையில் காடை முட்டையை சிறந்த மருந்தாக சீனர்கள் பயன்படுத்துகின்றனர். சிறுநீரகம், கல்லீரல், பித்தப்பை போன்றவற்றில் கற்கள் உருவாவதை காடை முட்டைகள் தடுக்கும் என்று கூறப்படுகிறது.

இத்தாலி, மெக்சிகோ, ஜப்பான், போலந்து, பிரெஞ்சு போன்ற நாடுகளில் காடை, மிகவும் விரும்பி உண்ணப்படும் இறைச்சியாக உள்ளது.

## செல்போனால் இளைஞர்களுக்கு பக்கவாதம் ஏற்படும் அபாயம்



இளைஞர்களில் பலர் எல்லாவற்றிலிருந்தும் அழுத்தத்திற்கு ஆளாகிறார்கள். கல்வி, வேலை, நிதி சிக்கல்கள், அதிகரித்த செல்போன் பயன்பாடு, போட்டித்தன்மை போன்ற பல காரணங்களால் மன அழுத்தம் ஏற்படுகிறது.

கடுமையான மன அழுத்தத்தில் இருப்பவர்களிடையே பக்கவாதம் ஏற்படும் அபாயம் அதிகரித்து வருவதாக அமெரிக்க நரம்பியல் அகாடமி எச்சரித்துள்ளது.

வாழ்க்கை முறை மாற்றங்கள் காரணமாக அதிகரித்து வரும் மன அழுத்தம் பல பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று அது விளக்கம் அளித்துள்ளது.

இதனால் பாதிக்கப்படுபவர்களுக்கு மூளையின் ஒரு பகுதிக்கு ரத்த விநியோகம் துண்டிக்கப்படுகிறது. அவர்கள் சோம்பேறியாக மாறுகிறார்கள், பேச முடியாத நிலை ஏற்படும். அவர்கள் பார்வையை இழக்கிறார்கள். சில சந்தர்ப்பங்களில் மரணம் ஏற்படுகிறது.

பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டவர்கள் ஒரு மாதத்திற்கு முன்பு கடுமையான மன அழுத்தத்தை அனுபவித்ததாக இந்த ஆய்வு கண்டறிந்துள்ளது.

பின்லாந்தில் உள்ள ஹெல்சின்கி பல்கலைக்கழக மருத்துவமனை உட்பட பல்வேறு மருத்துவ நிறுவனங்கள் இந்த ஆய்வில் பங்கேற்றன. மன அழுத்தத்தில் இருக்கும்போது. கார்டிசோல் அட்ரினலின் மற்றும் நோராட்ரெனலின் போன்ற ஹார்மோன்கள் வெளியிடப்படுகின்றன.

சிறிது மன அழுத்தத்துடன் இந்த ஹார்மோன்கள் உடலுக்கு அவசியமானவை. ஆனால் அவை அதிகமாக வெளியிடப்பட்டால் ஆரோக்கியத்தில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும். இதயத்துடிப்பு அதிகரிக்கிறது. உயர் ரத்த அழுத்தம் ஏற்படுகிறது.

இதையும் படியுங்கள்: நள்ளிரவில் அதிக பசியா?- நீரிழிவு நோயாளிகளுக்கு குட் நியூஸ்

இது உறுப்புகளை சேதப்படுத்தும் மன அழுத்தம் மூளை மற்றும் இதயம் உட்பட அனைத்து உறுப்புகளிலும் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

தொடர்ச்சியான மன அழுத்தம் நினைவாற்றலைக் குறைக்கிறது. படிக்கும் திறன் குறைகிறது. முடிவுகளை சரியாக எடுக்க முடியாது. கவனம் குறைகிறது. உணர்ச்சிகளில் அதன் தாக்கத்தால் பயம் மற்றும் பதட்டம் அதிகரிக்கும் அபாயம் உள்ளது. நீரிழிவு நோயாளிகளுக்கு இது மிகவும் ஆபத்தானது. சிலர் எடை கூடுகிறார்கள். சிலர் எடை குறைகிறார்கள். பெண்களுக்கு மாதவிடாய் பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. நோய் எதிர்ப்பு சக்தி பாதிக்கப்படும் அபாயம் உள்ளது. பாலியல் திறன் குறைகிறது. மனச்சோர்வு அதிகரிக்கும் அபாயம் உள்ளது.



மன அழுத்தத்தை உணரும்போது அதற்கான காரணங்களை அடையாளம் காண வேண்டும். எந்தெந்த காரணிகள் நமக்கு பிரச்சனையை ஏற்படுத்துகின்றன என்பதை பகுப்பாய்வு செய்ய வேண்டும்.

நீண்ட நேர செல்போன் பயன்பாடுகளை தவிர்க்க வேண்டும். எதிர்மறை எண்ணங்களை விட்டுவிட்டு நேர்மறை சிந்தனையை ஏற்றுக்கொள்ள வேண்டும். மன அழுத்தத்தைக் குறைப்பது நம் கையில்தான் உள்ளது. நமது வாழ்க்கை முறையிலும் உணவு முறையிலும் மாற்றங்களைச் செய்ய வேண்டும்.

சர்க்கரை மற்றும் கொழுப்பு நிறைந்த உணவுகளைக் குறைத்து புரதம் அதிகம் உள்ள உணவுகளை உண்ணுங்கள். தேவைப்பட்டால் ஒரு உணவியல் நிபுணரின் ஆலோசனையுடன் சீரான உணவை உண்ணுங்கள். தினமும் அரை மணி நேரம் வாரத்தில் குறைந்தது 5 நாட்களாவது உடற்பயிற்சி செய்யுங்கள்.

எல்லாவற்றிலும் மன அழுத்தத்தில் இருப்பவர்கள் அறிவாற்றல் நடத்தை சிகிச்சையைப் பரிசீலிக்க வேண்டும் என வலியுறுத்தி உள்ளனர்.

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்
whatsapp No
8122664699

## உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்



திருச்சிராப்பள்ளி மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள வெஸ்ட்ரி மேல்நிலைப்பள்ளியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை அமைச்சர் நேரு நேற்று நேரில் ஆய்வு செய்து, பல்வேறு துறைகளின் சார்பில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். கலெக்டர் சரவணன், வட்டாட்சியர் (மேற்கு) பிரகாஷ், மற்றும் பலர் பங்கேற்றனர்.

## தார் சாலை அமைக்கும் பணி



நாகர்கோவில் மாநகராட்சி 1-வது வார்டு பகுதியில் ரூ 50 லட்சம் மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கும் பணியை மேயர் மகேஷ் நேற்று துவக்கி வைத்தார்.

## வணிகர்களை பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் சந்திப்பு



நெல்லையில் நேற்று வணிகர்களை பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் சந்தித்து குறைகளை கேட்டறிந்தார்.

## அன்னம் தரும் அமுதக்கரங்கள்



முதலமைச்சர் ஸ்டாலின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், தினமும் 1000 நபர்களுக்கு மேல் காலை உணவு வழங்கும் "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" திட்டத்தின் கீழ் நேற்று 191வது நாளாக அமைச்சர் சேகர்பாபு உணவு வழங்கினார்.

## விநாயகர் சிலைகள் சதுப்பேரி ஏரியில் கரைப்பதற்காக ஊர்வலம்



வேலூரில் பல்வேறு இடங்களில் வைக்கப்பட்டிருந்த விநாயகர் சிலைகள் சதுப்பேரி ஏரியில் கரைப்பதற்காக ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன.

## விநாயகர் திருவீதி உலா



திருவண்ணாமலை மாவட்டம் போளூர் வட்டம் பெலாசூர் கிராமத்தில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு விநாயகர் வீணையுடன் அமர்ந்திருக்கும் காட்சி மற்றும் திருவீதி உலாவும், மேளதாளத்துடன், வானவேடிக்கையுடன் வெகு சிறப்பாக நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டார்கள். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## ஸ்ரீகன்யகா பரமேஸ்வரி அம்மன் அலங்காரத்தில் சிறப்பு வழிபாடு



பொள்ளாச்சி ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் வெட்டி வேர் மாலையுடன், வண்ணமலர் மாலையுடன், மஞ்சள் சேலையில் அலங்காரத்துடன் நம் வாசவி அம்மன் அருள் பாலிக்கும் காட்சி. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## தேசிய விளையாட்டு நாள் மனித சங்கிலி





திருச்சி காவிரி பாலத்தில் நேற்று நடந்த தேசிய விளையாட்டு நாள் மனித சங்கிலியை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பார்வையிட்டார்.

## முப்பெரும் விழா



கும்பகோணம் நகர மேல்நிலைப்பள்ளி யில் முப்பெரும் விழா நேற்று நடந்தது.

## திருப்புல்லணி சேர்த்தி சேவா



திருப்புல்லணி சேர்த்தி சேவா

## மாரியம்மன் கோவிலில் உண்டியல் காணிக்கை



சாத்தூர் இருக்கன்குடி மாரியம்மன் கோவிலில் உண்டியல் காணிக்கை எண்ணப்பட்டதில், மொத்தம் ரூ.70.14 லட்சம் காணிக்கையாக கிடைத்துள்ளது. 164 கிராம் தங்கம் மற்றும் 845 கிராம் வெள்ளியும் கிடைத்தன.

## ராமநாதசுவாமி அம்பாள் சன்னதியில் புதுப் பள்ளியறை பூஜை



ராமேசுவரம் ராமநாதசுவாமி அம்பாள் சன்னதியில் புதுப் பள்ளியறை பூஜை நடந்தது.

## கண்தானம் குறித்து விழிப்புணர்வு



**வேலூர், ஆக.30:**

40வது தேசியக் கண்தான இருவார விழாவையொட்டி கண்தானம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், வேலூர் அண்ணா கலையரங்கம் அருகே மனிதச் சங்கிலி விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று நடந்தது. கலெக்டர் சுப்புலட்சுமி, வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் ரோகிணி தேவி உட்பட மருத்துவக் கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர்.

## குமாரசுவாமி திருக்கோவிலின் குடமுழுக்கு திருவிழா





திருநெல்வேலி ரயில் நிலையம் அருகில் அமைந்துள்ள அருள்மிகு பாளையஞ் சாலைக் குமாரசுவாமி திருக்கோவிலின் குடமுழுக்கு திருவிழாவில் மாநில பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் கலந்து கொண்டார்.

## ரவுசு மணி

நான் சபித்தேன்
நடந்து விட்டது
என்று சொல்ல
இங்கு பலர் உண்டு
'நான்
வாழ்த்தினேன்
நன்றாக
வாழ்கிறார்'
என்று
கூறிடத்தான்
ஆள் இல்லை

**வெ. நாராயணன்**
லால்குடி



## பள்ளி மேலாண்மை கூட்டம்



**தேவீரஅள்ளி, ஆக.30:**

தேவீரஅள்ளி அரசு உயர்நிலைப் பள்ளியில் பள்ளிமேலாண்மைகூட்டம் நடந்தது.

தேவீரஅள்ளி அரசு உயர்நிலைப் பள்ளியில் மாதாந்திர பள்ளி மேலாண்மை குழு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு பள்ளி மேலாண்மை குழு தலைவி சூரியகாந்தி தலைமை தாங்கினார். பள்ளி தலைமை ஆசிரியர் முத்துலட்சுமணன் அனைவரையும் வரவேற்று தமிழ்நாடு அரசின் திறன் பயிற்சி பற்றியும், போதை தடுப்பு விழிப்புணர்வு பற்றியும், பெண் பிள்ளைகளுக்கு தற்காப்பு பயிற்சி பள்ளியில் வழங்கப்படுவதைப் பற்றியும் எடுத்துரைத்தார். பள்ளி மேலாண்மை குழு பொறுப்பாசிரியை கவிதா நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

## பள்ளி மேலாண்மை குழுக் கூட்டம்




**பென்னாகரம், ஆக.30:**


பென்னாகரம் ஒன்றியம் சின்னப்பள்ளத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் பள்ளி மேலாண்மை குழுக் கூட்டம் - SMC தலைவி கங்கா தலைமையில் நடைபெற்றது.

பள்ளியின் தலைமை ஆசிரியர் மா. பழனி அனைவரையும் வரவேற்று கூட்டத்தின் நோக்கம் பற்றிய விளக்கினார். பள்ளியில் நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் திறன் திட்டம், பள்ளி சுகாதாரம், புதிய பாரத எழுத்தறிவு திட்டம், பள்ளிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள் பற்றி பேசினார்.

கூட்டத்தில் துணைத் தலைவி ராஜேஸ்வரி, அஜய், மணி, சாலம்மாள், அம்பிகா, வளர்மதி உள்ளிட்டோர் கலந்துக்கொண்டார்கள்.

# சுற்றுலா: அமைதியும், ஆன்மீகமும் நிறைந்த அதிசய நாடு பூட்டான்!

தென்கிழக்கு ஆசியாவில் இமயமலையை அடுத்துள்ள நிலப்பரப்பில் அமைந்துள்ள சிறிய நாடுதான் பூட்டான். தேசிய பொக்கிஷங்களைக் கொண்ட தனித்துவமான நாடாகும். உலகில் எங்கு சென்றாலும் காணமுடியாத அரியபொக்கிஷங்கள் அமைதியான சூழ்நிலை. ஆன்மீக பூமி பாசமுள்ள மனிதர்கள் இவை அனைத்தையும் கொண்ட நாடு பூட்டான் என்று சொன்னால் மிகையாகாது.



டேக் இன் என்ற குனு ஆடு தேசிய விலங்காக கருதப்படுகிறது. இந்த ஆடு குட்டையான கால்கள் விசித்திரமான மூக்கு கொண்டது. பூட்டான் தலைநகர் திம்புவிலும் மற்ற நகரங்களிலும்

போக்குவரத்து சிக்னல்களை பார்க்க முடியாது. போக்குவரத்து காவலர்கள்தான் வாகனங்களை ஒழுங்குபடுத்துகிறார்கள். இதுவரை ஒரு சிறிய விபத்து கூட நடந்ததில்லை. அந்த அளவுக்கு அங்குள்ள மக்கள் ஒழுக்கத்துடனும் கண்ணியத்துடனும் நடந்து கொள்வார்கள்.

டா என்ற வில்வித்தை தேசிய விளையாட்டாக உள்ளது. பூட்டான் மக்கள் ஆண்களும் பெண்களும் கலர் கலராக உடை அணிகிறார்கள். பெண்கள் அணியும் ஆடைக்கு இரா என்று பெயர். ஆண்கள் அணியும் ஆடைக்கு கோ என்று பெயர். சுற்றுலாவுக்கு ஏற்ற இடம் ஆகும்.

உலகின் மிகப்பெரிய சந்திர சூரிய நாட்காட்டி இங்கு உள்ளது. மகிழ்ச்சிக்கும் உடல் ஆரோக்கியத்திற்கும் இங்குள்ள மக்கள் முன்னுரிமை அளிக்கிறார்கள். இதை குறிக்கும் வகையில் ஜி என் எச் குறியீடு உள்ளது. தலைநகர் திம்புவில் தினசரி 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாகனங்கள் சென்றாலும் ஒரு சிறு விபத்து கூட நடந்தது இல்லை.

வில் வித்தையின்போது இவர்கள் வண்ண உடைகளை அணிகிறார்கள். பிரபலமான உணவு ஏமா தட்சி என்ற உணவாகும். காரமான மிளகாய் காரமான குழம்பு காரமான சீஸ் வெங்காயம் காளான் சேர்த்து செய்யப்படும் வித்தியாசமான உணவு. இதை இங்கு உள்ள மக்கள் விரும்பி சாப்பிடுகிறார்கள்.

புலி காட்டுகோவில் மற்றும் குகை இங்கு பிரபலமானது. கட்டிடக்கலைக்கு எடுத்துக்காட்டாக உள்ளது. 3500 மீட்டர் உயரம் உள்ள மலை மது அமைந்துள்ளது இந்த மடாலயம். இரண்டாவது புத்தர் என்று அழைக்கப்படும் குருவின் போச் என்பவர் புலியின் முதுகு மீது அமர்ந்து இங்க மடாலயத்திற்கு வந்தார் என்று சொல்லப்படுகிறது.

சுற்றுலா கட்டணமாக 100 டாலர் வசூலிக்கப்படுகிறது. லிங்க சிவன் கோவில் மிகவும் பிரபலமானது. பெண்கள் கர்ப்பம் தரிக்க இந்த லிங்கம் கோயிலை நாடி வருகிறார்கள். 1499 ஆம் ஆண்டு இந்த கோவிலை ஒரு புத்த துறவி கட்டினார். பூட்டான் கட்டிடக்கலைக்கும் நினைவுச் சின்னங்களுக்கும் சிற்பக் கலைகளுக்கும் பேர் போனது ஆயிரக்கணக்கான நினைவுச் சின்னங்கள் கோவில்கள் உள்ளது. டிராகன் உருவம் அலங்கார சின்னமாகவும் மங்களகரமாகவும் கருதப்படுகிறது. இங்குள்ள மக்கள் ஆண்டுதோறும் சுமார் 25 பண்டிகைகளை கொண்டாடு கிறார்கள். சந்திர சூரியன நாட்காட்டி புத்தா லோசர் எனஅழைக்கப்படுகிறது இங்குள்ள பரோசர்வதேசவிமானநிலையத்தில் எட்டு விமானங்கள் மட்டுமே நிறுத்த முடியும். இந்த விமான தளத்தில் விமானங்களை இறக்குவது என்பது சாகச செயலாக கருதப்படுகிறது. வீணை பிடில்போன்ற கருவிகளை இசைக்காக பயன்படுத்தி வருகின்றனர். பச்சை பசேல் என்று பயிர்கள் இருந்தாலும் நிலப்பரப்பில் அரிசி பார்லி உருளைக்கிழங்கு பயிரிட்டு வருகின்றனர். பாரம்பரிய மருத்துவம் இங்கு சிறப்பாக கையாளப்பட்டு வருகிறது. சோ பா ரிக் என்று பாரம்பரிய மருத்துவம் அழைக்கப்படுகிறது. தேசிய கொடியில் ஆரஞ்சு குங்கும நிறம் கொண்ட கொடியில் மத்தியில் வெள்ளை நிற டிராகன் இடம் பெற்று இருக்கும். டிராகன் புனிதமாக கருதப்படுகிறது. தேசிய மலருக்கு நீல பாப்பி என்று பெயர். இது தூய்மையான குணத்தை குறிக்கும். 2008இல் முடியாட்சிக்கு மாறியது. மன்னர் செல்வாக்கு உடன் இருந்தாலும் பிரதமர்தான் நிர்வாக பொறுப்பை கவனித்து வருகிறார். இங்குள்ள மக்கள் நமது 500 ரூபாய் நோட்டுக்களை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆனால் மற்ற நோட்டுகளை ஏற்றுக் கொள்கிறார்கள். சுத்தமான காற்றுடன் இயற்கையான சூழ்நிலையில உள்ளதால் கார்பன் எதிர்மறை நாடு என்று போற்றப்படுகிறது. பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. பொது இடங்களில் புகை படிக்க அனுமதி இல்லை. இங்குள்ள மக்கள் தங்கள் பிறப்பை ஞாபகம் வைத்துக் கொள்வதில்லை அதற்கு பதிலாக புத்தாண்டையே தன் பிறந்த நாளாக நினைத்து கொண்டாடி வருகிறார்கள்,. 1989 இல்தான் இங்கு தொலைக்காட்சி அறிமுகம் செய்யப்பட்டது. பூட்டானில் பலதார திருமணம் செய்துகொள்ள அனுமதி உண்டு. பள்ளிகளிலும் அரசு அலுவலகங்களிலும் தேசிய உடை கட்டாயமாக்கப்பட்டுள்ளது. சுமார் 7 லட்சம் மக்கள் தொகை கொண்ட இந்த தூய்மையான நகரத்தையும் நாட்டையும் காண்பதற்கு நாம் கொடுத்து வைத்திருக்க வேண்டும். சுற்றுலா செல்வதற்கு ஏற்ற இடம் .

## வேலைவாய்ப்பு கார்னர்

### கடலூர் மாவட்டத்தில் இன்று தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்

தமிழ்நாடு அரசின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் மூலம் மாவட்ட வாரியாக தனியார் நிறுவனங்களுடன் இணைந்து வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வழங்கப்படுகிறது. பொதுவான சனிக்கிழமைகளில் இந்த முகாம் நடத்தப்படும். அந்த வகையில் தற்போது கடலூர் மாவட்டத்திற்கான மிகப்பெரிய அறிவிப்பு வெளியாகி உள்ளது.

கடலூர் மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் மற்றும் தமிழ்நாடு ஊரக மற்றும் நகர்புற வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்தப்படுகிறது. இந்த முகாமில் 150-க்கும் மேற்பட்ட முன்னணி நிறுவனங்கள் கலந்துகொள்ள உள்ளன. இதன் மூலம் 20 ஆயிரத்திற்கு அதிகமாக காலிப்பணியிடங்கள் நிரப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முகாமில் கலந்துகொள்ளும் நபர்களுக்கு இலவச திறன் மேம்பாட்டு பயிற்சிக்கான பதிவு செய்து தரப்படும். அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தில் பதிவு செய்ய வழிகாட்டுதல் வழங்கப்படும். இவைமட்டுமின்றி இல்லாமல் மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்படுகிறது. இதனால் மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னணி தனியார் நிறுவனங்களில் பணி வாய்ப்பு பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடலூர் வேலைவாய்ப்பு முகாமில் 8-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் முதல் பட்டப்படிப்பு முடித்தவர்கள் வரை அனைவரும் கலந்துகொள்ளலாம். குறிப்பாக ஐடிஐ, டிப்ளமோ மற்றும் பொறியியல் பட்டப்படிப்பு முடித்தவர்களுக்கு தொழிற்சார்ந்த பணி வாய்ப்புகள் உள்ளதால் அவர்களும் கலந்துகொள்ளலாம்.

இந்த முகாமில் கலந்துகொண்டு பணி வாய்ப்பை பெற விரும்பும் நபர்கள் பாஸ்போர்ட் அளவு புகைப்படம், அனைத்து கல்வித்தகுதி சான்றிதழ்கள், ஆதார் அட்டை, சுயக்குறிப்பு உள்ளிட்ட ஆகியவற்றின் அசல் சான்றிதழ்கள் மற்றும் நகல்களுடன் நேரில் கலந்துகொள்ள வேண்டும்.

இடம் : லோட்டஸ் இண்டர்நேஷனல் பள்ளி, பெண்ணாடம்

நேரம் மற்றும் நாள் : 30.08.2025 சனிக்கிழமை. காலை 9 மணி முதல் மதியம் 3 மணி வரை

மேலும் விவரங்களுக்கு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், கடலூர் மாவட்டம் மற்றும் 04142-290039, 9499055908 என்று தொலைபேசி எண்களில் தொடர்புகொள்ளலாம்.

# தமிழகத்தில் 35,000 விநாயகர் சிலைகள் அமைப்பு: போலீஸ் பாதுகாப்புடன் ஆக. 31-ஆம் தேதி விசர்ஜனம்

**சென்னை, ஆக.30:**

விநாயகர் சதுர்த்தியை யொட்டி தமிழகம் முழுவதும் ஹிந்து அமைப்புகள் சார்பில் பொது இடங்களில் 35,000 சிலைகள் புதன்கிழமை அமைக்கப்பட்டன.

இந்து முன்னணி, விசுவ ஹிந்து பரிஷத், சிவசேனை, இந்து மக்கள் கட்சி, பாஜக, ஆர்.எஸ்.எஸ். உள்ளிட்ட 65 ஹிந்து அமைப்புகள் சார்பில் விநாயகர் சிலைகள் புதன்கிழமை அதிகாலை முதல் அமைக்கப்பட்டு பூஜைகள் செய்யப்பட்டன.

சென்னை 2,802 சிலைகள்: சென்னை பெருநகர காவல் துறைக்கு உள்பட்ட பகுதிகளில் 1,519 சிலைகளும், தாம்பரம் மாநகர காவல் துறைக்கு உள்பட்ட பகுதிகளில் 600 சிலைகளும், ஆவடி மாநகர காவல் துறைக்கு உள்பட்ட பகுதிகளில் 686 சிலைகளும் அமைக்கப்பட்டுள்ளன.





குடியிருப்பு சங்கங்கள், பொது நலச் சங்கங்கள் உள்ளிட்ட சில அமைப்புகளால் அமைக்கப்பட்ட விநாயகா சிலைகள், மாலையில் நீா்நிலைகளில் விசா்ஜனம் செய்யப்பட்டன. சென்னை புழல், அண்ணா நகா் உள்ளிட்ட 22 இடங்களில் காவல் துறை அனுமதியின்றி சில அமைப்பினா் விநாயகா் சிலைகளை அமைப்பதற்கு முயற்சித்தனா். இதுகுறித்து தகவலறிந்த போலீஸாா், அந்த சிலைகளை அப்புறப்படுத்தினா். இப்பகுதிகளில் அசம்பாவித சம்பவங்கள் நிகழாத வகையில் போலீஸாா் குவிக்கப்பட்டனா். அங்கு தீவிர ரோந்து, கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டனா்.

அமைக்கப்பட்ட விநாயகா் சிலைகளுக்கு பாதுகாப்பு அளிக்கும் பணியில் புதன்கிழமை முதல் 64,217 போலீஸாா் ஈடுபடுகின்றனா்.


பதற்றமான பகுதிகளில் அமைக்கப்பட்ட விநாயகா் சிலைகளுக்கு, துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. இங்கு சிலைகள் பாதுகாப்பு குழுவினரும், பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனா். சிலைகள் அமைக்கப்பட்டுள்ள பகுதிகளைக் கண்காணிப்பு கேமரா மூலமாவும் காவல் துறை கண்காணிக்கிறது.

விசா்ஜன ஊா்வலம்: விநாயகா் சிலைகளில் பெரும்பாலானவை ஆக. 31-ஆம் தேதி ஊா்வலமாக கொண்டு செல்லப்பட்டு, நீா்நிலைகளில் விசா்ஜனம் செய்யப்படுகின்றன. சென்னையில் பட்டினப்பாக்கம் சீனிவாசபுரம், நீலாங்கரை பல்கலை நகா், காசிமேடு மீன்பிடி துறைமுகம், எண்ணூா் ராமகிருஷ்ணா நகா், திருவொற்றியூா் பாப்புலா் எடை, கோவளம் குன்றுக்காடு ஆகிய இடங்களில் சிலைகளை விஜாசனம் செய்வதற்கான

# சேலத்தில் வீட்டிற்குள் புகுந்த பாம்பை பிடிக்க முயன்ற இளைஞர்: கட்டை விரலில் விஷம் ஏறி பலி

**சேலம், ஆக.30:**

வீட்டிற்குள் புகுந்த நல்ல பாம்பை விளையாட்டாக பிடிக்க முயன்ற இளைஞர், பாம்பு கடித்ததில் உயிரிழந்திருக்கிறார். இந்த சம்பவம் சேலத்தில் சோகத்தை ஏற்படுத்தியிருக்கிறது.



சேலம் மாவட்டம் நிலவரப்படி பகுதியை சேர்ந்த ராஜமுருகன் (21) என்ற இளைஞர் வெல்டிங் வேலை செய்து வருகிறார். தந்தையை இழந்த இளைஞர் ராஜமுருகன் உடல்நலம் பாதிக்கப்பட்ட தாயுடன் வசித்து வந்தார். இந்த நிலையில் நேற்றிரவு தனது வீட்டிற்குள் நுழைந்த பாம்பை பிடிக்க ராஜமுருகன் முயன்றிருக்கிறார். ஆனால் இதற்கு முன்னர் பாம்புகளை பிடித்து அனுபவமில்லாத அவர், விளையாட்டுதனமாக பாம்பை பிடித்திருக்கிறார். சிறிய பாம்பு என்பதால் விஷம் குறைவாக இருக்கும் என்று நினைத்து பிடித்திருக்கிறார். ஆனால் பிடித்த உடனேயே அவரின் கட்டை விரலை பாம்பு கடித்திருக்கிறது. இருப்பினும், சினிமாக்களில் வருவதை போல கையில் துணியை கட்டிக்கொண்டு பாம்பை மீண்டும் பிடிக்க முயன்றிருக்கிறார். ஆனால் வலி கொஞ்சம் கொஞ்சமாக அதிகமாக இருக்கிறது. இதனையடுத்து வேறுவழியின்றி சேலம் அரசு மருத்துவமனைக்கு சென்றிருக்கிறார். அங்கு விஷ முறிவு மருந்து கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் அவர் சுய நினைவை இழந்து, சிகிச்சை பலனின்றி உயிரிழந்திருக்கிறார். இந்த சம்பவம் சேலம் மாவட்டத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. அவர் பாம்பை பிடிக்க முற்படும்போது பாம்பு கடிக்கும் வீடியோ வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# ஓணம் பண்டிகை: சென்னை - கண்ணூர் இடையே சிறப்பு ரயில்

**சென்னை, ஆக.30:**

ஓணம் பண்டிகையை முன்னிட்டு சென்னை-கண்ணூா், கண்ணூா் - பெங்களூரு இடையே போத்தனூா் வழித்தடத்தில் சிறப்பு ரயில் இயக்கப்பட உள்ளதாக ரயில்வே நிா்வாகம் சாா்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




இதுதொடா்பாக, சேலம் கோட்ட ரயில்வே நிா்வாகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: ஓணம் பண்டிகையை முன்னிட்டு பயணிகள் வசதிக்காக, சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் இருந்து வியாழக்கிழமை (ஆகஸ்ட் 28) இரவு 11.55 மணிக்குப் புறப்படும் சென்னை - கண்ணூா் ஒருவழி சிறப்பு விரைவு ரயில் (எண்: 06009) மறுநாள் பிற்பகல் 2 மணிக்கு கண்ணூா் ரயில் நிலையத்தை சென்றடையும்.

இந்த ரயிலானது, திருவள்ளூா், அரக்கோணம், காட்பாடி, ஜோலாா்பேட்டை, சேலம், ஈரோடு, திருப்பூா், போத்தனூா், பாலக்காடு, ஷொரணூா், திரூா், கோழிக்கோடு, வடகரை, தலச்சேரி உள்ளிட்ட ரயில் நிலையங்களில் நின்று செல்லும்.

கண்ணூா் - பெங்களூரு இடையே சிறப்பு ரயில்:

ஓணம் பண்டிகையை முன்னிட்டு, வியாழக்கிழமை ( ஆகஸ்ட் 29) இரவு 9.30 மணிக்கு கேரள மாநிலம் கண்ணூரில் இருந்து புறப்படும் கண்ணூா் - பெங்களூரு விரைவு ரயில் (எண்: 06125) மறுநாள் காலை 11 மணிக்கு பெங்களூரு ரயில் நிலையத்தை சென்றடையும். மறுமாா்க்கமாக வெள்ளிக்கிழமை (ஆகஸ்ட் 30) இரவு 7 மணிக்கு பெங்களூரில் இருந்து புறப்படும் பெங்களூரு - கண்ணூா் விரைவு ரயில் (எண்: 06126) மறுநாள் காலை 7.15 மணிக்கு கண்ணூா் ரயில் நிலையத்தை சென்றடையும்.

இந்த ரயிலானது தலச்சேரி, வடகரை, கோழிக்கோடு, திரூா், ஷொரணூா், பாலக்காடு, போத்தனூா், திருப்பூா், ஈரோடு, சேலம், பங்காருப்பேட்டை, கிருஷ்ணராஜபுரம் உள்ளிட்ட ரயில் நிலையங்களில் நின்று செல்லும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தனியார் நிறுவனங்களில் இனி 10 மணி நேரம் வேலை! - மகாராஷ்டிர அரசு திட்டம்



**புதுடெல்லி, ஆக.30:**

மகாராஷ்டிர மாநிலத்தில் நாள் ஒன்றுக்கு பணியாளர்களின் வேலை நேரத்தை 10 மணி நேரமாக உயர்த்த அந்த மாநில அரசு திட்டமிட்டு பரிசீலனை செய்து வருகிறது.

ஒரு வாரத்திற்கு 48 மணி நேர வேலை என்ற நடைமுறைதான் தற்போது பெரும்பாலான தனியார் நிறுவனங்களில் இருந்து வருகிறது.

இந்நிலையில் மகாராஷ்டிரத்தில், கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 2017-ல் திருத்தம் மேற்கொள்ள அந்த மாநில அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி அங்குள்ள கடைகள், ஹோட்டல்கள், பொழுதுபோக்கு நிறுவனங்களில் வேலை செய்வோருக்கு தற்போதுள்ள 9 மணி வேலை நேரத்தை 10 மணி நேரமாக மாற்ற முடிவு செய்துள்ளது.

தனியார் நிறுவனங்களில் 10 மணி நேரத்திற்கு மேலாக கண்டிப்பாக வேலை வாங்கக்கூடாது எனவும் மாற்றம் செய்யப்பட உள்ளது. இதன் மூலமாக 12 மணி நேர வேலை என்பது நீக்கப்படுகிறது.

அதேபோல வேலை நேரம் தவிர கூடுதல் வேலை நேரத்தின் அளவு 3 மாதங்களுக்கு 125 மணி நேரத்தில் இருந்து 144 மணி நேரமாக மாற்றப்பட்டுள்ளது. அதாவது ஒரு நாளைக்கு அரை மணி நேரம் கூடுதலாக 10.30 மணி நேரம் வேலை செய்துகொள்ளலாம்.

இந்த மாற்றங்கள் குறித்து மகாராஷ்டிர மாநில அரசு பரிசீலனை மேற்கொண்டு வருகிறது.

முன்னதாக தெலங்கானாவில் ஒரு நாள் வேலை நேரம் 10 மணி நேரமாக உயர்த்தப்பட்டது. கர்நாடகத்திலும் 10 - 12 மணி வேலை நேரமாக மாற்ற மாநில அரசு முயற்சி செய்து வருகிறது.

வேலை நேரம் அதிகரிக்கப்படுவது தொழிலாளர்கள் மத்தியில் சற்று கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

# பருத்தி இறக்குமதிக்கு டிசம்பர் 31ந்தேதி வரை சுங்க வரி விலக்கு அளித்தது மத்திய அரசு

**புதுடெல்லி, ஆக.30:**

வெளிநாடுகளில் இருந்து பருத்தியை சுங்க வரி இல்லாமல் இறக்குமதி செய்வதற்கான காலஅவகாசத்தை டிசம்பர் 31ந்தேதி வரை மத்திய அரசு நீட்டித்துள்ளது.

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பருத்திக்கு ஏற்கெனவே 11 சதவீத இறக்குமதி வரி விதிக்கப்பட்டு வந்தது. அதுதவிர, வேளாண் உள்கட்டமைப்பு மற்றும் வளர்ச்சி வரியும் விதிக்கப்பட்டது. இந்த நிலையில் சுங்க வரி இல்லாமல் பருத்தியை இறக்குமதி செய்வதற்கான அறிவிக்கையை மத்திய நிதி அமைச்சகம் ஆகஸ்ட் 18ல் வெளியிட்டது. இந்தச் சலுகை ஆகஸ்ட் 19 முதல் செப்டம்பர் 30-ம் தேதி வரை அமலில் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.



இந்த நிலையில் இந்தியா பொருட்கள் மீதான இறக்குமதி வரியை அமெரிக்கா 50 சதவீதமாக உயர்த்தி உள்ளது. அமெரிக்காவின் வரி விதிப்பால் ஜவுளி துறை கடுமையான பாதிப்பை எதிர்கொண்டுள்ளது. இந்த சூழலில் ஜவுளி ஏற்றுமதியாளர்களை ஆதரிப்பதற்காக, மேலும் 3 மாதங்களுக்கு பருத்தி இறக்குமதிக்கு வரி விலக்கை நீட்டித்து மத்திய அரசு உத்தரவிட்டது. இது தொடர்பாக, மத்திய நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "பருத்தி இறக்குமதிக்கு டிசம்பர் 31 வரை வரி விலக்கு நீட்டிக்கப்பட்டு உள்ளது. ஏற்றுமதியாளர்களை ஆதரிப்பதற்காக இறக்குமதி வரி விலக்கை நீட்டிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இந்த நடவடிக்கை நூல், துணி, ஆடைகள் மற்றும் அலங்காரப் பொருட்கள் உள்ளிட்ட ஜவுளி ஏற்றுமதியாளர்களுக்கு பலனை அளிக்கும். உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோருக்கு மிகவும் தேவையான நிவாரணத்தை வழங்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வரி விலக்கு உள்நாட்டு சந்தையில் பருத்தி கிடைப்பதை அதிகரிக்கும். பருத்தி விலையை உறுதிப்படுத்தும். இதன் மூலம் ஜவுளிப் பொருட்கள் மீதான பணவீக்க அழுத்தத்தைக் குறைக்கும். இது உற்பத்திச் செலவுகளைக் குறைப்பதன் மூலமும், ஜவுளித் துறையில் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு உதவியாக இருக்கும். இந்திய ஜவுளிப் பொருட்களின் ஏற்றுமதி போட்டித்தன்மையை ஆதரிக்கும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## க்ரைம் கார்னர்

### கூகுள் மேப்பால் விபரீதம்: ஆற்றுக்குள் பாய்ந்த வேன் - 4 பேர் பலி

**ஜெய்ப்பூர், ஆக. 30:**

ராஜஸ்தான் மாநிலத்தில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக பல்வேறு ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதனிடையே, ஜெய்ப்பூரை சேர்ந்த குடும்பத்தினர் 9 பேர் நேற்று ஆன்மிக சுற்றுலா சென்றுள்ளனர். அவர்கள் சொந்த ஊருக்கு நேற்று இரவு வேனில் திரும்பிக்கொண்டிருந்தனர்.

இந்நிலையில், வேனை டிரைவர் கூகுள் மேப்பை பார்த்து காரை ஓட்டியுள்ளார். குடும்பத்தினர் அனைவரும் உறங்கிய நிலையில், வேன் சொமி-உப்ரிடா பாலத்தில் சென்றுள்ளது. அந்த பாலம் பராமரிப்பு பணி காரணமாக கடந்த சில மாதங்களாக மூடி இருந்துள்ளது.

ஆனால், கூகுள் மேப்பில் பாலம் பயன்பாட்டில் இருப்பதுபோல் காட்டப்பட்டிருந்ததால் டிரைவர் வேனை இயக்கியுள்ளார். அப்போது, வேன் பாலத்தில் இருந்து திடீரென பனாஸ் ஆற்றுக்குள் பாய்ந்தது. இந்த சம்பவத்தில் வேனில் பயணித்த குழந்தை உள்பட 4 பேர் உயிரிழந்தனர். மேலும், 5 பேர் உயிர் பிழைத்தனர். உயிர் பிழைத்தவர்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் விரைந்து சென்ற போலீசார், ஆற்றில் அடித்து செல்லப்பட்டவர்களின் உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

### அசாமில் ரூ.11 கோடி மதிப்புள்ள போதைப்பொருள் பறிமுதல்

**திஸ்பூர், ஆக.30:**

அசாம் மாநிலம் கர்பி அங்லாங் மாவட்டத்தில் அசாம்-நாகாலாந்து மாநிலங்களுக்கு இடையேயான எல்லையில் போலீசார் வழக்கமான ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

திலாய் பகுதியில் 6 மைல் தொலைவில் ஒரு இடத்தில் சந்தேகத்திற்கு இடமான வகையில் வேகமாக சென்ற ஒரு லாரியை நிறுத்தி சோதனை செய்தனர். சோதனையில் லாரி டிரைவரின் இருக்கைக்குப் பின்னால் 10¾ கிலோ மார்பின் போதைப்பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது.

இவற்றை போலீசார் கைப்பற்றினர். அதன் மதிப்பு ரூ.11 கோடி இருக்கும் என போலீசார் தெரிவித்தனர். இதுதொடர்பாக 2 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இந்த போதைப்பொருள் எங்கிருந்து கடத்தி வரப்பட்டது? யார், யாருக்கு இந்த போதைப்பொருள் வினியோகிக்கப்பட இருந்தது? என்பது குறித்து அம்மாநில போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

### பிறந்த சில மணி நேரத்தில் பெண் குழந்தை கொன்று புதைப்பு: தம்பதி கைது

**எர்ணாகுளம், ஆக.30:**

கேரள மாநிலம் எர்ணாகுளம் மாவட்டம் பெரும்பாவூர் அருகே காஞ்சிரக்காடு பகுதியில் வெளிமாநில தொழிலாளர்கள் குடியிருப்பு உள்ளது. அங்குள்ள பகுதியில் தெருநாய்கள் கூட்டமாக நின்றவாறு, மண்ணை தோண்டியது. இதை கண்ட அப்பகுதி மக்கள் அங்கு சென்று பார்த்த போது, மண்ணுக்குள் பச்சிளம் குழந்தையின் உடல் இருப்பது தெரியவந்தது. இதுகுறித்து அவர்கள் பெரும்பாவூர் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்.

அதன் பேரில் இன்ஸ்பெக்டர் அனில் குமார் தலைமையிலான போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து விசாரணை நடத்தினர். தொடர்ந்து மண்ணில் புதைக்கப்பட்டு இருந்த பெண் குழந்தையின் உடலை மீட்டு, பிரேத பரிசோதனைக்காக பெரும்பாவூர் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

இதையடுத்து குழந்தையை புதைத்தது யார் என்பது குறித்து போலீசார் வெளிமாநில தொழிலாளர்களிடம் தீவிர விசாரணை நடத்தினர். இதில் மேற்கு வங்க மாநிலத்தை சேர்ந்த தம்பதி என்பது தெரியவந்தது. விசாரணையில் மஜ்ரு ஷேக் (வயது 33), அவரது மனைவி ஷீலா கார்த்தூன் (32). இவர்கள் கடந்த 6 மாதத்துக்கு முன்பு பெரும்பாவூர் பகுதிக்கு வந்து கூலி வேலை செய்து வந்தனர். அப்போது ஷீலா கார்த்தூன் கர்ப்பமாக இருந்தார். கடந்த 24-ந் தேதி அவர் வீட்டிலேயே பிரசவித்தார். அவருக்கு பெண் குழந்தை பிறந்து உள்ளது. பெண் குழந்தையை வளர்க்க மனமில்லாததால், பிறந்த சில மணி நேரத்திலேயே குழந்தையை தம்பதி கொன்று வீட்டின் முன்புள்ள தோட்டத்தில் குழி தோண்டி புதைத்தது விசாரணையில் தெரியவந்தது. இதையடுத்து தம்பதியை போலீசார் கைது செய்தனர். மேலும் போலீஸ் பாதுகாப்புடன் ஷீலா கார்த்தூன் உடல் நலக்குறைவால் சிகிச்சைக்காக களமச்சேரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளார். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

### அரசு மருத்துவக் கல்லூரிக்கு வெடிகுண்டு மிரட்டல்

**கடலூர், ஆக.30:**

சிதம்பரம் அண்ணாமலை நகரில் கடலூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை உள்ளது. இந்த நிலையில் இன்று (ஆக.28) காலை 10 மணி அளவில் மருத்துவக் கல்லூரி டீன் அலுவலகத்துக்கு ஒரு தொலைபேசி வந்தது. அதில் பேசியவர் மருத்துவக் கல்லூரியில் வெடிகுண்டு வைத்திருப்பதாக கூறி தொலைபேசியை துண்டித்துள்ளார்.

இதுகுறித்து மருத்துவக் கல்லூரியின் டீன் திருப்பதி, அண்ணாமலை நகர் போலீஸாருக்கு தகவல் அளித்தார். காவல் ஆய்வாளர் அம்பேத்கர் மற்றும் போலீஸார் இதுகுறித்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்துக்கு தகவல் அளித்துவிட்டு, சம்பவ இடத்துக்கு சென்று பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

## தொழில்நுட்ப / அறிவியல் செய்திகள்

### தீப்பெட்டிக்குள் அடங்கும் போன்கள்! வியக்க வைக்கும் அம்சங்கள்!

சாதாரண போன்கள் ஒருபுறம் இருக்க, தீப்பெட்டிக்குள் அடங்கும் அளவிற்கு சிறிய அளவில் போன்களும் இருக்கின்றன. அவற்றின் அளவைக் கேட்டால் நிச்சயம் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். இவை அளவில் சிறியதாக இருந்தாலும், அழைப்பு, மெசேஜிங் மற்றும் சில சமயங்களில் கேமரா போன்ற அம்சங்களை வழங்குகின்றன. இந்த மினி போன்களை விரும்பும் நபர்களும் இங்கு இருக்கத்தான் செய்கிறார்கள். மிகவும் லேசான மற்றும் அளவில் மிக சிறிய போன்களைப் பற்றிப் இந்தப் பதிவில் பார்ப்போம்.

**1. ஜாங்கோ டைனி டி1 (ZANCO TINY T1):**

இது உலகின் மிகச் சிறிய மொபைல் ஆகும். இதன் நீளம் வெறும் 46.7 மிமீ மற்றும் எடை 13 கிராம் மட்டுமே. இது 0.49 இன்ச் OLED திரையைக் கொண்டுள்ளது. 2G நெட்வொர்க் வசதி உள்ளது. 300 தொடர்புகளைச் சேமிக்கும் வசதியும் இதில் இருக்கிறது. இதன் 200 MAH பேட்டரி, ஒருமுறை சார்ஜ் செய்தால் 3 நாட்கள் வரை தாங்கும். இது மிகவும் சிறியதாக இருப்பதால், இதை ஒரு பாக்கெட் அல்லது தீப்பெட்டியில் கூட எளிதாக வைத்து எடுத்துச் செல்லலாம்.

**2. ஜாங்கோ டைனி டி2 (ZANCO TINY T2):**

டைனி டி2 என்பது டைனி டி1-இன் மேம்படுத்தப்பட்ட தயாரிப்பு. இதில் 3G நெட்வொர்க், கேமரா, 128MB RAM மற்றும் 64MB உள் சேமிப்பகம் உள்ளது. இதன் எடை வெறும் 31 கிராம் மற்றும் பேட்டரி பேக்கப் சுமார் 7 நாட்கள் வரை நீடிக்கும். இந்த ஃபோனில் இசை, வீடியோக்கள் மற்றும் அடிப்படை விளையாட்டுகளையும் அணுக முடியும்.

**3. யூனிஹெர்ட்ஸ் ஜெல்லி 2 (UNIHERTZ JELLY 2):**



இது உலகின் மிகச் சிறிய 4G ஸ்மார்ட்ஃபோன் என்று கருதப்படுகிறது. இது 3 இன்ச் திரை, ஆண்ட்ராய்டு 11, 6GB RAM மற்றும் 128GB சேமிப்பகத்துடன் வருகிறது.

ஃபேஸ் அன்லாக், ஜிபிஎஸ், கேமரா, WI-FI மற்றும் கூகுள் ப்ளே ஸ்டோர் வசதிகளும் இதில் உள்ளன. இதன் எடை 110 கிராம் மட்டுமே.

**4. லைட் ஃபோன் 2 (LIGHT PHONE 2):**

அழைப்புகள் மற்றும் மெசேஜ்களுக்காக மட்டுமே இந்தப் போனைப் பயன்படுத்த முடியும். இது 4G நெட்வொர்க் வசதியைக் கொண்டுள்ளது. சமூக வலைதளங்கள், விளையாட்டுகள் அல்லது ஆப்ஸ் என எதுவும் இதில் இல்லை - அத்தியாவசிய அம்சங்கள் மட்டுமே உள்ளன. சிறிய அளவு, பிரீமியம் வடிவமைப்பு மற்றும் நீண்ட பேட்டரி ஆயுள் ஆகியவற்றை இது கொண்டுள்ளது.

5. கியோசெரா KY-01L (KYOCERA KY-01L):

இந்த போன் உலகின் மிக மெலிதான போன் என்று அழைக்கப்படுகிறது. இதன் தடிமன் வெறும் 5.3 மிமீ மற்றும் எடை 47 கிராம். இது 2.8 இன்ச் மோனோக்ரோம் திரையைக் கொண்டுள்ளது. மேலும், இதை அழைப்புகள், மெசேஜ்கள் மற்றும் இணையத்தில் தேடுவதற்கு மட்டுமே பயன்படுத்த முடியும். ஜப்பானில் மிகவும் பிரபலமாக இருந்த இந்த போன் ஒரு கிரெடிட் கார்டு போன்று தோற்றமளிக்கிறது.

இந்தச் சிறிய போன்கள், பெரிய திரைகளைக் கொண்ட ஸ்மார்ட்ஃபோன்களுக்கு ஒரு சுவாரசியமான மாற்றாக இருக்கின்றன. இவை சிறிய அளவு, தனித்துவமான வடிவமைப்பு மற்றும் குறிப்பிட்ட தேவைகளுக்காக உருவாக்கப்பட்டு, பலரையும் வியக்க வைக்கின்றன.

# குற்ற வழக்கை நியாயமற்ற காலத்துக்கு நீட்டிப்பது துன்பம்; சுப்ரீம் கோர்ட்டு

**புதுடெல்லி, ஆக.30:**

தமிழகத்தில் மத்திய கலால் வரி இன்ஸ்பெக்டராக பணியாற்றிய பெண் அதிகாரி ஒருவர் கடந்த 2002-ம் ஆண்டு ரூ.300 லஞ்சம் கேட்டதாக வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட அவர், 31 நாட்கள் சிறையிலும் இருந்தார். அவருக்கு தற்போது வயது 75. ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட இந்த வழக்கை விசாரித்த விசாரணை கோர்ட்டு, பெண் அதிகாரிக்கு ஓராண்டு சிறைத்தண்டனையும், அபராதமும் விதித்து உத்தரவிட்டது.



இதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்த சென்னை ஐகோர்ட்டு, பெண் அதிகாரிக்கு கீழ்கோர்ட்டு விதித்த தண்டனையை கடந்த 2010-ம் ஆண்டு உறுதி செய்தது. எனவே சுப்ரீம் கோர்ட்டில் அந்த பெண் அதிகாரி மேல் முறையீடு செய்தார்.

இதை நீதிபதிகள் அஞ்சாரியா, சந்துர்கர் அமர்வு விசாரித்தது. பின்னர் இதில் தீர்ப்பு வழங்கிய நீதிபதிகள், பெண் அதிகாரி அனுபவித்த 31 நாள் சிறையை அவரது தண்டனை காலமாக கணக்கிட்டு குறைத்தனர். அதேநேரம் அபராத தொகையில் ரூ.25 ஆயிரம் உயர்த்திய நீதிபதிகள், அதை அடுத்த மாதம் 10-ந் தேதிக்குள் செலுத்தவும் உத்தரவிட்டனர். தவறினால் கீழ் கோர்ட்டு வழங்கிய சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்றும் கூறினர். இந்த வழக்கில் 22 ஆண்டுகளுக்கு மேலாக விசாரணை நடந்திருப்பதை சுட்டிக்காட்டிய நீதிபதிகள், குற்ற வழக்கு ஒன்றை நியாயமற்ற காலத்துக்கு நீட்டிப்பது ஒரு வகை துன்பம் என கூறினர். தண்டனையை எதிர்த்து மேல்முறையீடு செய்யும் நபர் தினமும் அந்த வழக்கின் தீர்ப்புக்காகக் காத்திருந்து, துயரத்தில் நேரத்தைச் செலவிடுகிறார் என்று கூறிய நீதிபதிகள், இது குற்ற நடவடிக்கைகளை எதிர்கொள்ளும் நபருக்கு மன ரீதியான சிறைத்தண்டனையாக இருக்கும் எனவும் தெரிவித்தனர்.

இன்றைய நீதி நிர்வாக முறையில், நடவடிக்கைகள் பெரும்பாலும் நியாயமற்றதாகவும், தாங்க முடியாத அளவுக்கு தாமதமாக நீடித்தும் வருகின்றன எனவும், எனவே நீண்ட காலம் கடந்து செல்வது ஒரு நபரை மன வேதனைக்கு ஆளாக்குகிறது என்றும் கூறினர்.

# சாலையோர வியாபாரிகளுக்கான கடன் திட்டம்: 2030-ம் ஆண்டு வரை நீட்டிப்பு

**புதுடெல்லி, ஆக.30:**

ரூ.12,328 கோடி மதிப்பிலான 4 ரெயில்வே திட்டங்களுக்கு மத்திய மந்திரிசபையில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.



பிரதமர் மோடி தலைமையில் மத்திய மந்திரிசபை கூட்டம் நேற்று நடந்தது. இதில் சாலையோர வியாபாரிகளுக்கான ஆத்ம நிர்பார் நிதி (பி.எம். சுவாநிதி) திட்டத்தை மறுசீரமைத்து விரிவாக்கம் செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்டது. கொரோனாவால் ஏராளமான நெருக்கடிகளை சந்தித்த சாலையோர வியாபாரிகளுக்கு உதவுவதற்காக கடந்த 2020-ம் ஆண்டு இந்த திட்டம் தொடங்கப்பட்டது.

அதன்படி இதில் 3 தவணையாக பெறப்படும் கடனை சரியான நேரத்தில் திருப்பிச்செலுத்தும் வியாபாரிகள் யு.பி.ஐ.யுடன் இணைக்கப்பட்ட ரூபே கிரெடிட் கார்டு பெற தகுதிபெறுகின்றனர். இந்த கார்டு மூலம் அவசர வியாபார தேவை மற்றும் தனிப்பட்ட தேவைகளை பூர்த்தி செய்ய முடியும். அந்தவகையில் சில்லரை மற்றும் மொத்த பரிவர்த்தனைகளில் டிஜிட்டல் கட்டணங்களைத் தேர்வு செய்யும் விற்பனையாளர்களுக்கு ரூ.1,600 வரை சலுகைகள் வழங்கப்படும். இந்த திட்டம் பல்வேறு மைல்கல் சாதனைகளை எட்டியுள்ளது. கடந்த ஜூலை 30-ந் தேதி நிலவரப்படி ரூ.13,797 கோடி அளவுக்கு 68 லட்சத்துக்கு அதிகமான சாலையோர வியாபாரிகளுக்கு 96 லட்சம் கடன் வழங்கல்கள் நடந்துள்ளன. டிஜிட்டல் முறையில் செயல்படும் சுமார் 47 லட்சம் பயனாளிகள் ரூ.6.09 லட்சம் கோடி மதிப்புள்ள 557 கோடிக்கும் மேற்பட்ட டிஜிட்டல் பரிவர்த்தனைகளை நடத்தி, மொத்தம் ரூ.241 கோடி கேஷ்பேக்கைப் பெற்றுள்ளனர். இந்த திட்டம் கடந்த 2024-ம் ஆண்டு டிசம்பர் 31-ந் தேதி வரை செல்லுபடியாகி இருந்த நிலையில், இதை மறுசீரமைத்து நீட்டிக்க மந்திரிசபை ஒப்புதல் அளித்துள்ளது.

அதன்படி ரூ.7,332 கோடி செலவில் 2030-ம் ஆண்டு மார்ச் 31-ந் தேதி வரை இந்த திட்டம் நீட்டிக்கப்படுகிறது. மேலும் கூடுதலாக 50 லட்சம் புதிய வியாபாரிகளை சேர்க்கவும் முடிவு செய்யப்பட்டு உள்ளது. நீட்டிக்கப்படும் இந்த திட்டத்தில் கடன் உச்சவரம்பும் உயர்த்தப்படுகிறது.

மேலும் இதில் முதல் தவணை கடன் உச்ச வரம்பு ரூ.10 ஆயிரத்தில் இருந்து ரூ.15 ஆயிரமாக உயர்த்தப்படுகிறது. மேலும் 2-ம் தவணை ரூ.20 ஆயிரத்தில் இருந்து ரூ.25 ஆயிரமாக அதிகரிக்கப்படுகிறது. அதேநேரம் 3-ம் தவணை ரூ.50 ஆயிரமாக நீடிக்கும் என அரசு தெரிவித்து உள்ளது.

இதைத்தவிர ரூ.12,328 கோடி மதிப்பிலான 4 ரெயில்வே திட்டங்களுக்கு மத்திய மந்திரிசபையில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதன்படி தேஷால்பர்-ஹஜிப்பூர்-லுனா மற்றும் வயோர், லக்பத் பகுதிகளை இணைக்கும் ரெயில் பாதை, செகந்திராபாத்-வாடி இடையே 3 மற்றும் 4-வது பாதைகள், பகல்பூர்-ஜமால்பூர் இடையே 3-வது பாதை மற்றும் பர்கேட்டிங்-நியூ தின்சுகியா இடையேயான பாதை இரட்டிப்பு ஆகிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

## ‘ஹெட்மெட் அணியவில்லை என்றால் பெட்ரோல் இல்லை’ - உ.பி அரசின் புதிய பிரச்சாரம்!

**புதுடெல்லி, ஆக.30:**

இந்திய பொருட்களுக்கு அமெரிக்கா 50 சதவீத வரி விதித்ததால் ஜவுளி ஏற்றுமதியாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். அமெரிக்காவின் வரி விதிப்பால் ஜவுளித்துறை பாதிக்கப்படாமல் இருக்க மத்திய அரசு மாற்று வழிகளை தேடி வருகிறது. அதன் ஒரு பகுதியாக, பருத்தி இறக்குமதிக்கு அடுத்த மாதம் 30ம் தேதி வரை தற்காலிக வரி விலக்கு அளிக்கப்படுவதாக, மத்திய அரசு கடந்த சில தினங்களுக்கு முன்பு அறிவித்து இருந்தது.

இந்த நிலையில், தற்காலிகமாக அமல்படுத்தப்பட்டு இருந்த வரிவிலக்கு மேலும் 3 மாதங்களுக்கு, அதாவது டிசம்பர் 31-ந்தேதி வரை நீட்டித்து மத்திய அரசு அறிக்கை வெளியிட்டுள்ளது. இந்த நடவடிக்கை நூல், துணி, ஆடைகள் மற்றும் அலங்காரப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்துக்கும் உள்ளீட்டுச் செலவுகளைக் குறைக்கும் என்றும், உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோருக்கு மிகவும் தேவையான நிவாரணத்தை வழங்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. உற்பத்திச் செலவுகளைக் குறைப்பதன் மூலமும், ஜவுளித் துறையில் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை (SMES) பாதுகாப்பதன் மூலமும் இந்திய ஜவுளிப் பொருட்களின் ஏற்றுமதியில் போட்டித் தன்மையுடன் செயல்பட இந்த அறிவிப்பு உதவும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. பருத்திக்கான இறக்குமதி வரி விலக்கு மேலும் 3 மாதங்களுக்கு நீட்டிக்கப்படுவதாக மத்திய அரசு அறிவித்துள்ளதால், தொழில்துறையினர் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## மகாராஷ்டிராவில் அடுக்குமாடி குடியிருப்பு இடிந்து விபத்து: பலி எண்ணிக்கை 15 ஆக அதிகரிப்பு



**மும்பை, ஆக.30:**

மகாராஷ்டிராவின் பால்கர் மாவட்டத்தில் கட்டிடம் இடிந்து விழுந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 15 ஆக உயர்ந்துள்ளது. மேலும், 9 பேர் காயமடைந்துள்ளதாகவும், இரண்டு பேரை காணவில்லை என்றும், அவர்களைக் கண்டுபிடிக்க மீட்புப் பணிகள் நடைபெற்று வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

பால்கர் மாவட்டத்தின் விரார் கிழக்கில் உள்ள நான்கு மாடி கட்டிடமான ரமாபாய் அடுக்குமாடி குடியிருப்பின் ஒரு பகுதி செவ்வாய்க்கிழமை இரவு இடிந்து விழுந்தது. இந்த சம்பவத்தில் 15 பேர் உயிரிழந்துள்ளனர். 9 பேர் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். 2 பேரை காணவில்லை அவர்களைக் கண்டுபிடிக்க மீட்புப் பணிகள் நடைபெற்று வருகிறது என்று வசாய் விரார் நகராட்சியின் கூடுதல் ஆணையர் சஞ்சய் ஹிர்வாடே செய்தியாளர்களிடம் தெரிவித்தார். மேலும், பால்கரில் இடிந்து விழுந்த கட்டிடத்தை கட்டியவரை இன்று வசாய் விரார் போலீஸார் கைது செய்தனர். இந்த கட்டிடத்தை கட்டியவர் 50 வயது நைலி சேன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். கொலை முயற்சி மற்றும் அலட்சியம் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளின் அவர் மீது காவல்துறை வழக்குப் பதிவு செய்துள்ளது. தீயணைப்புப் படை மற்றும் காவல்துறை உள்ளிட்ட அவசர சேவைகள், தேசிய பேரிடர் மீட்புப்படை குழுக்களுடன் இணைந்து மீட்புப் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. இடிபாடுகளில் இருந்து மீட்கப்பட்டவர்கள் விரார் மற்றும் நலசோபராவில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர், சிலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

# பீகார் வாக்காளர் பட்டியலில் இருந்து 65 லட்சம் ஏழைகளின் பெயர்கள் நீக்கம்: ராகுல்காந்தி குற்றச்சாட்டு





**பாட்னா, ஆக.30:**

பீகாரில் நடந்த வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் மூலம் வாக்குகள் திருட முயற்சி நடப்பதாக நாடாளுமன்ற மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி குற்றம் சாட்டியுள்ளார். மேலும், வாக்காளர் அதிகார யாத்திரை என்ற பெயரில், பீகாரில் ராகுல்காந்தி யாத்திரை நடத்தி வருகிறார். இந்த யாத்திரையின் ஒரு பகுதியாக சீதாமர்ஹியில் நடந்த பேரணியில் ராகுல்காந்தி உரையாற்றியதாவது;

“பீகாரின் வாக்காளர் பட்டியலில் இருந்து ஏழைகள் மற்றும் சமூக ரீதியாக பலவீனமான பிரிவைச் சேர்ந்த 65 லட்சம் பேரின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளது. பாஜக மற்றும் தேர்தல் ஆணையம் தங்கள் வாக்குரிமையை கொள்ளையடிக்க பீகார் மக்கள் அனுமதிக்க மாட்டார்கள். வாக்கு திருட்டில் பாஜக மற்றும் தேர்தல் ஆணையம் ஈடுபட்டது. அதனை நாங்கள் அம்பலப்படுத்தியுள்ளோம். அவர்கள் அதை மகாராஷ்டிரா, ஹரியானா மற்றும் கர்நாடகாவில் செய்தார்கள். இப்போது அவர்கள் பீகாரில் அதை மீண்டும் செய்ய விரும்புகிறார்கள். அதை நாங்கள் செய்ய அனுமதிக்க மாட்டோம். வாக்குத்திருட்டு என அழைத்ததற்கு வரும் மாதங்களில் கூடுதல் ஆதாரங்களை வழங்குவோம்.”

இவ்வாறு அவர் பேசினார். பீகாரில் நடப்பாண்டின் இறுதியில் சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

# சண்டிகரில் 50 கி.மீ தொலைவுக்கு போக்குவரத்து நெரிசல்: வாகன ஓட்டிகள் தவிப்பு





**ஸ்ரீநகர், ஆக.30:**

வட மாநிலங்களில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது.

ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், ஹிமாச்சல பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் பெய்து வரும் கனமழையால் அங்கு பெரும்பாலான இடங்களில் கடுமையான வெள்ள பாதிப்பு ஏற்பட்டுள்ளது. முக்கிய நதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து வருகிறது. சில இடங்களில் நிலச்சரிவும் ஏற்பட்டுள்ளது.

இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் முடங்கியுள்ளது.

சண்டிகர் - குல்லு நெடுஞ்சாலையில் ஏற்பட்ட நிலச்சரிவு காரணமாக கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. 50 கிலோமீட்டர் தொலைவுக்கு வாகனங்கள் அணிவகுத்து நிற்கின்றன. டெல்லி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து காய்கறிகளை ஏற்றி வந்த சரக்கு லாரிகளும் இந்த போக்குவரத்து நெரிசலில் சிக்கியுள்ளன. ஆப்பிள், தக்காளி போன்ற அழுகும் பொருட்களை ஏற்றி வந்த லாரிகளும் இந்த நெரிசலில் சிக்கியுள்ளதால், கடும் நஷ்டம் ஏற்படும் என்று வியாபாரிகளும் விவசாயிகளும் கவலை தெரிவித்தனர்.

சிறிய வாகனங்களுக்கு நெடுஞ்சாலை திறக்கப்பட்டிருந்தாலும், கனரக வாகனங்களுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை. நெடுஞ்சாலையில் 12-க்கும் மேற்பட்ட இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளதாகவும், இதனை சீரமைக்கும் பணிகள் நடப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## விளையாட்டு செய்திகள்

### ‘அஸ்வினுக்கு பணம், புகழ், பெயர் பெரிய விஷயமல்ல’ - ஸ்ரீகாந்த் புகழாரம்

**சென்னை, ஆக.30:**

யூடியூப் சேனலில் கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந்த், அஸ்வின் ஓய்வு குறித்து கூறும்போது, “அஸ்வின் ஏன் ரிட்டையர் ஆனார் என்பது பற்றி எனக்கு உறுதியாக எதுவும் தெரியாது.

நான் அவரிடத்தில் இருந்திருந்தால் இன்னும் 2 ஆண்டுகள் ஐபிஎல் தொடரில் ஆடியிருப்பேன். அஸ்வினுக்கு பணம், பெயர், புகழ் ஒரு பெரிய விஷயமல்ல. இவையனைத்தும் அவருக்கு ஏராளமாக கிடைக்கப் பெற்றன. இன்னும் 2 ஆண்டுகள் ஐபிஎல் தொடரில் ஆடி, அதன் பிறகு மற்ற லீகுகளில் ஆடியிருக்கலாம்.

அஸ்வினைப் போல் மற்ற வீரர்களும் ஐபிஎல் கிரிக்கெட்டில் தங்கள் வாய்ப்பு இல்லை எனும் போது பிற லீகுகள் நோக்கிச் செல்லலாம். ஆனாலும் ஐபிஎல் தொடரில் ஆடுவதால் கிடைக்கும் வெளிச்சம் மற்றும் அங்கீகாரம் பிற லீகுகளில் அவ்வளவாகக் கிடைக்காது.

எனவே பிற லீகுகளில் ஏதோ ஆட வேண்டுமே என்பதற்காக ஆடலாமே தவிர ஐபிஎல் தொடர்களில் கிடைக்கும் பலன்களுக்கு அருகில் கூட மற்ற லீகுகள் நிற்காது. ஐபிஎல் கிரிக்கெட் பெற்ற சிறந்த வீரர் அஸ்வின். அதுவும் கிறிஸ் கெயிலை அவர் அடிக்கடி வீழ்த்தியதில்தான் அஸ்வினுக்கு அங்கீகாரம் வெளிப்படையாகக் கிடைத்தது.

ஐபிஎல் கிரிக்கெட்டில் அஸ்வின் அட்டாக்கிங் ஆகவும் வீசுவார், சிக்கனமாகவும் வீசுவார். மெகா ஏலத்திற்குப் பிறகே 3 ஆண்டு சுழற்சியை விட்டுவிட்டு அவர் பாதியிலேயே போவது ஆச்சரியமாக உள்ளது. இங்கு ஓய்வு பெறும் வீரர்கள் அந்நிய லீகுகளில் பயிற்சியாளர்களாகவும் வீரர்களாகவும் ஆக முடியும் என்பது மகிழ்ச்சியானதே” என்று கூறினார்.

### அமெரிக்க ஓபன் டென்னிஸ் தரவரிசை இல்லாமல் 4:46 மணிநேரம் போராடிய வீரர்கள்

ஆண்டின் கடைசி கிராண் ட்ஸ்லாம் மற்றும் 144 ஆண்டுகால பழமை யான டென்னிஸ் தொடர்களில் ஒன்றான அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடரில் தற்போது தொடக்க சுற்று ஆட்டங்கள் (நியூயார்க் - அமெரிக்கா) நடைபெற்று வருகின்றன. இந்திய நேரப்படி புதன்கிழமை அன்று அதிகாலை நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத் தில் தரவரிசையில் இல்லாத வீரர் களான ஜெர்மனியின் ஆல்ட்மையேர், செர்பியாவின் மெட்ஜேடோவிச் மோதி னர். இரு வீரர்களும் தொடக்கம் முதலே ஆக்ரோஷமாக விளையாடி அடுத்தடுத்து கேம்களை ருசித்தனர். இதனால் ஆட்டத்தின் ஒவ்வொரு நிமிடமும் பரபரப்பாக நகர்ந்தது. 4:46 மணிநேரம் நீண்ட இந்த ஆட்டத்தில் ஆல்ட்மையேர் 7-5, 6-7 (3-7), 7-6 (9-7), 6-7 (5-7), 6-4 என்ற செட் கணக்கில் அபார வெற்றி 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

### ஐபிஎல் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றார் அஸ்வின்

கிரிக்கெட் உலகின் நட்சத்திர ஆல்ரவுண்டரும், தலைசிறந்த சுழற்பந்துவீச்சாளர்களில் ஒருவருமான தமிழ்நாட்டைச் சேர்ந்த ரவிச்சந்திரன் அஸ்வின் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றார். அதன்பிறகு ஐபிஎல் மற்றும் டிஎன்பி எல் (தமிழ்நாடு டி-20 லீக்) தொடர்களில் மட்டும் விளையாடி வந்தார். இந்நிலையில், ஐபிஎல் கிரிக்கெட் போட்டியிலிருந்து ஓய்வு பெறுவதாக அஸ்வின் அறிவித்துள்ளார். இதுதொடர்பாக சமூகவலைத்தளத்தில் அஸ்வின் வெளியிட்டுள்ள அறிக்கையில், “இன்று மிகவும் சிறப்பான நாள் என்பதால், ஒரு நல்ல தொடக்கத்துடன் இன்றைய நாளை தொடங்குகிறேன் என கூறியுள்ளார்.

# சத்தீஸ்கரில் ரூ.81 லட்சம் வெகுமதி அறிவிக்கப்பட்டிருந்த 30 மாவோயிஸ்டுகள் சரண்



**ராய்ப்பூர், ஆக.30:**

சத்தீஸ்கரின் பிஜப்பூர் மாவட்டத்தில் நேற்று 30 மாவோயிஸ்டுகள் சரணடைந்தனர். அவர்களில் இருபது பேருக்கு 81 லட்சம் ரூபாய் வெகுமதி அறிவிக்கப்பட்டிருந்ததாக காவல் கண்காணிப்பாளர் ஜிதேந்திர யாதவ் தெரிவித்தார்.

மாவோயிஸ்டுகளின் ஆதிக்கம் அதிகம் உள்ள சத்தீஸ்கரில் சமீபத்திய மாதங்களில், அதிகளவில் மாவோயிஸ்டுகள் காவல்துறையிடம் சரணடைந்து வருகின்றனர். இந்த நிலையில், சத்தீஸ்கரின் பிஜப்பூர் மாவட்டத்தில் நேற்று 9 பெண்கள் உட்பட 30 மாவோயிஸ்டுகள் சரணடைந்தனர். அவர்களில் 20 பேருக்கு 81 லட்சம் ரூபாய் வெகுமதி அறிவிக்கப்பட்டிருந்ததாக காவல் கண்காணிப்பாளர் ஜிதேந்திர யாதவ் தெரிவித்தார். மேலும், மாநில அரசின் மறுவாழ்வுக் கொள்கையின் கீழ், அவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாய் ஊக்கத் தொகையும் வழங்கப்பட்டது.

இதுகுறித்து பேசிய சத்தீஸ்கரின் துணை முதல்வர் விஜய் சர்மா, “பஸ்தர் பகுதியில் உள்ள பிஜப்பூரில், 30 நக்சலைட்டுகள் மறுவாழ்வு திட்டத்தின் கீழ் சரணடைந்துள்ளனர். இதுவரையிலான சரணடைந்தவர்களில், மிகப்பெரிய எண்ணிக்கை இதுவாகும். சத்தீஸ்கர் அரசின் மறுவாழ்வு கொள்கை, வீரர்களின் துணிச்சல் மற்றும் அரசின் வளர்ச்சிப் பணிகளின் காரணமாக இவர்கள் சரணடைந்துள்ளனர். நக்சலைட்டுகள் பொது நீரோட்டத்தில் இணைந்து தங்கள் வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ளுமாறு நாங்கள் பலமுறை வேண்டுகோள் விடுத்து வருகிறோம்.” என்று தெரிவித்தார்.

முன்னதாக, ஆகஸ்ட் 17 அன்று, கரியாபந்த் காவல்துறையினர் முன்னிலையில் நான்கு நக்சலைட்டுகள் சரணடைந்தனர். இதற்கிடையில், கடந்த திங்களன்று பிஜப்பூர் மாவட்டத்தின் தேசிய பூங்கா பகுதியில் நக்சலைட்டுகளால் நடத்தப்பட்ட ஐஇடி தாக்குதலில் ஒரு ராணுவ வீரர் கொல்லப்பட்டார் மற்றும் இரண்டு பேர் காயமடைந்தனர்.

# அரசுகளுக்கு அடிப்படை உரிமைகள் இருக்க முடியாது: சுப்ரீம் கோர்ட்டில் மத்திய அரசு வாதம்

**புதுடெல்லி, ஆக.30:**

ஜனாதிபதி முடிவை அறிவிக்கவில்லை என்றால் மீண்டும் கோர்ட்டை நாடலாம் என்று எப்படி உத்தரவிட முடியும் என்று வாதிட்டார்.

மாநில அரசுகள் நிறைவேற்றி அனுப்பும் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க கவர்னர் மற்றும் ஜனாதிபதிக்கு காலக்கெடு நிர்ணயித்து சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பளித்திருந்தது. இந்திய அளவில் இந்த தீர்ப்பு முக்கியத்துவம் பெற்ற நிலையில், மத்திய அரசு இந்த தீர்ப்புக்கு அதிருப்தி தெரிவித்திருந்தது. குறிப்பாக, இந்திய அரசியலமைப்பு சட்டம் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க எவ்வித காலக்கெடுவும் நிர்ணயிக்காத நிலையில், சுப்ரீம் கோர்ட்டின் இந்த தீர்ப்பு அரசியலமைப்பை மீறியதாக உள்ளதாகவும் கருத்து தெரிவித்திருந்தது.

இதனிடையே, இந்த தீர்ப்பு தொடர்பாக ஜனாதிபதி திரௌபதி முர்மு விளக்கம் கேட்டு சுப்ரீம் கோர்ட்டிற்கு கடிதம் எழுதியிருந்தார். இதை தலைமை நீதிபதி பி.ஆர். கவாய், நீதிபதிகள் சூர்யகாந்த், விக்ரம் நாத், பி.எஸ். நரசிம்மா, அதுல் எஸ். சந்துர்கர் ஆகியோர் அடங்கிய அரசியல் சாசன அமர்வு கடந்த சில நாட்களாக விசாரித்து வருகிறது.



இந்த வழக்கில் காரசார விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. இன்று மத்திய அரசு தரப்பில் சொலிசிட்டர் ஜெனரல் முன்வைத்த வாதம் வருமாறு:

மத்திய அரசு சார்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா:- மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்கும் விவகாரங்களில் கோர்ட்டு எந்த அளவுக்கு உத்தரவிட முடியும், அது சட்டப்படியானதா என்பது குறித்து ஆய்வு செய்ய வேண்டும். ஜனாதிபதி ஆட்சிக்கு கவர்னர் பரிந்துரைக்கும் நேரங்களில் கவர்னர் உத்தரவுக்கு எதிராக வழக்கு தொடர முடியுமா? என்ற கேள்வி எழுகிறது.

அதேபோல, மசோதாவுக்கு ஒப்புதல் கொடுக்கவில்லை என்றால் அரசியலமைப்பு வழங்கியுள்ள உரிமை மறுக்கப்படுகிறது என்று கூறி மாநில அரசுகள் அரசியல் சாசன பிரிவு 32ன் கீழ் வழக்கு தொடுக்க முடியாது, ஏனெனில் இந்த பிரிவு ஜனாதிபதி, கவர்னர் ஆகியோருக்கு பொருந்தாது.

மேலும், மூன்று மாதத்திற்குள்ளாக மசோதா மீது முடிவு எடுக்கவில்லை என்றால், அதற்கான காரணத்தை கூற வேண்டும் என ஜனாதிபதிக்குக் கோர்ட்டு எப்படி கூற முடியும்? ஜனாதிபதி முடிவை அறிவிக்கவில்லை என்றால் மீண்டும் கோர்ட்டை நாடலாம் என்று எப்படி உத்தரவிட முடியும்? அதேபோல கவர்னருக்கு ஒருபோதும் ஆணை பிறப்பிக்க முடியாது. அடிப்படை உரிமைகள் மீறும் போது மட்டுமே ரிட் மனுவை தாக்கல் செய்ய முடியும். அரசுகளுக்கு அடிப்படை உரிமைகள் இருக்க முடியாது. ஏற்கனவே கேட்கப்பட்ட 14 கேள்விகளுடன் மேலும் 2 கேள்விகளை சேர்க்க கூறியுள்ளார்” என்று வாதிட்டார்.

## திடீரென மாயமாகும் உலகின் மிக பெரிய ஏரி.. காஸ்பியன் கடலுக்கு என்ன ஆச்சு?



**பாகு, ஆக.30:**

உலகின் மிகப் பெரிய உப்புநீர் ஏரியான காஸ்பியன் கடல், திடீரென வேகமாக சுருங்கி வருகிறது. இதே நிலை நீடித்தால் அவை சீக்கிரம் மறைந்தும் கூட போகும். இதனால் அந்த ஏரியில் இருக்கும் மீன்கள், அது சார்ந்து இருக்கும் விலங்குகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. மேலும், பொருளாதாரத்திற்கும் கூட இது மிகப் பெரிய ஆபத்தாக இருக்கிறது. இது தொடர்பாக நாம் விரிவாகப் பார்க்கலாம்.

மனிதர்கள் ஏற்படுத்தும் மாற்றத்தால் உலகின் பல்வேறு பகுதிகளிலும் இயற்கை மொத்தமாகவே மாறி வருகிறது. சில பல இடங்களில் இயற்கை அழிந்தும் கூட வருகிறது. உலகின் பல்வேறு பகுதிகளிலும் நம்மால் இந்தச் சிக்கலைப் பார்க்க முடிகிறது. அப்படியொரு சிக்கல் தான் உலகின் மிகப் பெரிய உப்புநீர் ஏரியான காஸ்பியன் கடலுக்கு ஏற்பட்டுள்ளது.

மேற்கு மற்றும் மத்திய ஆசிய பிராந்தியத்தில் ரஷ்யா, கஜகஸ்தான், துர்க்மெனிஸ்தான், ஈரான் மற்றும் அஜர்பைஜான் உள்ளிட்ட நாடுகளுக்கு நடுவில் இந்த ஏரி அமைந்துள்ளது. பெயரிலேயே இது கடல் என்ற சொல்லைக் கொண்டிருந்தாலும் உண்மையில் இந்த காஸ்பியன் கடல் என்பது உப்பு நீர் ஏரியாகும். இது உலகின் மிகப் பெரிய ஏரியாகும். இந்த ஏரி தான் இப்போது ஆபத்தான வேகத்தில் சுருங்கி வருகிறது. இதனால் எண்ணெய்க் கப்பல் போக்குவரத்து, துறைமுகச் செயல்பாடுகள் மற்றும் கடல்வாழ் உயிரினங்கள் என எல்லாமே பாதிக்கப்படுவதாக அஜர்பைஜான் கவலை தெரிவித்துள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் நீர் மட்டம் 0.93 மீட்டர் குறைந்துள்ளது. கடந்த பத்தாண்டுகளில் 1.5 மீட்டரும், கடந்த 30 ஆண்டுகளில் 2.5 மீட்டரும் நீர் மட்டம் குறைந்துள்ளது.

இப்போது ஆண்டுக்கு 20 முதல் 30 சென்டிமீட்டர் வரை நீர் மட்டம் குறைந்து வருவதாக மதிப்பிடப்படுகிறது. இதே நிலை நீடித்தால் ஏரி மிக விரைவில் மாயமாகிவிடும். இதனால் நீண்டகாலச் சூழலியல் மற்றும் பொருளாதாரப் பாதிப்புகள் கூட ஏற்படலாம் என அஞ்சப்படுகிறது. காஸ்பியன் கடலானது எண்ணெய், எரிவாயு உள்ளிட்டவற்றுக்கு முக்கிய ஆதாரமாக விளங்குவதால் இது முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது..

இது தொடர்பாக அஜர்பைஜான் அதிகாரி ஹாஜியேவ் கூறுகையில், "கடல் மட்டம் 5 மீட்டர் குறைந்தால், சீல்கள் தங்கள் இனப்பெருக்கத் தளங்களில் 81% வரை இழக்கும். 10 மீட்டர் குறைந்தால் இனப்பெருக்கம் செய்யும் எல்லா இடங்களையும் இழந்து சீல்கள் மிக மோசமான நிலைக்குத் தள்ளப்படும்" என்றார். இந்தளவுக்கு ஆபத்தான நிலைக்கு காஸ்பியன் ஏரி தள்ளப்பட்டுள்ளது.

## ஸ்பெயினில் பாரம்பரிய தக்காளி சண்டை திருவிழா கோலாகலம்

**புனோல், ஆக.30:**

ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான ஸ்பெயின் நாட்டில் ஆண்டுதோறும் ஆகஸ்டு இறுதி வாரத்தில் தக்காளி திருவிழா நடத்தப்படும் வழக்கம். பல ஆண்டுகளாக இந்த முறை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இதன்படி, இந்த ஆண்டு ஸ்பெயினின் கிழக்கே. வாலன்சியா நகருக்கு மேற்கே 40 கி.மீ. தொலைவில் புனோல் நகரில் இந்த பாரம்பரிய திருவிழா நடந்தது. இதில், வெள்ளை நிற உடையில் ஆண்கள், பெண்கள் என ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர். இந்த திருவிழாவுக்காக நன்றாக விளைந்த, சிவப்பு நிறத்திலான டன் கணக்கிலான தக்காளிகள் லாரிகளில் கொண்டு வந்து தயாராக வைக்கப்பட்டு இருந்தன. லா டொமேடினா என்ற பெயரில் நடத்தப்படும் இந்த பாரம்பரிய திருவிழாவில் உள்ளூர் மக்கள் மட்டுமின்றி, கென்யா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட வெளிநாடுகளில் இருந்தும் சுற்றுலாவாசிகள் திருவிழாவில் பங்கேற்க திரண்டு வந்திருந்தனர். உள்ளூர் மக்களுக்கு கட்டணம் எதுவும் இல்லை. பட்டாசு வெடிப்புகளுடன் திருவிழா களைகட்ட தொடங்கியது. இந்த திருவிழாவில், தக்காளிகளை ஒருவர் மீது ஒருவர் வீசி மகிழ்ந்தனர். பல மணிநேரம் இப்படி நட்பு ரீதியிலான இந்த சண்டை நீடித்தது. இந்த திருவிழாவுக்கு வந்திருந்த சுற்றுலாவாசிகள் மொபைல் போனில் செல்பி எடுத்தபடியும், தக்காளிகளை மற்றவர்கள் மீது வீசியும், தங்கள் மீது தக்காளிகளை பிழிந்து பூசியபடியும் காணப்பட்டனர்.

## ஸ்தம்பித்த ரஷ்யா.. பெட்ரோல், டீசலுக்கு பெரும் தட்டுப்பாடு.. பல கிமீ காத்திருக்கும் வாகனங்கள்





**மாஸ்கோ, ஆக.30:**

ரஷ்யா தற்போது ஒரு மிகப்பெரிய எரிபொருள் நெருக்கடியைச் சந்தித்து வருவதாக செய்திகள் வெளியாகி உள்ளது. ரஷ்ய ஊடகங்களில் வரும் செய்திகளின் படி, பெட்ரோல் மற்றும் டீசல் எரிபொருள் நிலையங்களில் கிடைப்பதில்லை என்றும், எரிபொருள் நிலையங்களில் நீண்ட வரிசையில் வாகன ஓட்டிகள் நிற்பது போன்ற வீடியோக்கள் வெளியாகி உள்ளன. இது தொடர்பாக சமூக வலைத்தளங்களில் பலரும் பதிவுகளை வெளியிட்டு வருகிறார்கள்.

ரஷ்யாவில் எரிபொருள் அதிக அளவில் உள்ளது. அங்குள்ள எரிபொருளை தனக்கு மட்டுமின்றி, உலகின் பல்வேறு நாடுகளுக்கும் ரஷ்யா வழங்கி வந்தது. இப்போதும் ஏற்றுமதி செய்து வருகிறது. ஆனால் உக்ரைனின் ட்ரோன் தாக்குதல்கள் காரணமாக, தன்னாட்சி பகுதியான கிரிமியா பகுதியில் பெட்ரோல், டீசலுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. குறிப்பாக சொல்வது என்றால். ப்ரிமோர்ஸ்கி *(Primorsky)* மற்றும் காபரோவ்ஸ்க் *(Khabarovsk)* கிரைஸ் பகுதிகளில் நிலைமை மிக மோசமாக உள்ளதாம். அங்கு எரிபொருள் நிலையங்களில் பல கிலோ மீட்டர் நீளத்திற்கு வாகனங்கள் வரிசையில் காத்துக் கிடக்கின்றன வாகன ஓட்டிகள் தங்கள் வாகனங்களில் இருந்து கேன்களை எடுத்துச் சென்று பெட்ரோல் வாங்க நிற்கிறார்கள்.. இப்படியாக வீடியோக்கள் உள்ளது.

ரஷ்யாவின் தேசிய நெடுஞ்சாலைகளில் சுற்றுலாப் பயணிகளும் சிக்கித் தவிக்கும் வீடியோக்கள் வெளியாகி உள்ளன. ரஷ்யா தனது கட்டுப்பாட்டில் எடுத்துக் கொண்ட உக்ரைனின் தன்னாட்சி பகுதியான கிரிமியா *(Crimea)* மற்றும் ஓஆர்டிஎல்ஓ *(ORDLO)* முதல் விளாடிவோஸ்டாக் *(Vladivostok)* வரை இந்த நிலைமை மோசமாக இருப்பதாக கூறப்படுகிறது. கிரிமியாவின் ரஷ்ய நிர்வாகத் தலைவர் அக்ஸ்யோனோவ், இந்த நிலைமை குறைந்தது ஒரு மாதம் நீடிக்கும் என்று கூறினார். இதனால் மக்கள் அதிர்ச்சியில் இருக்கிறார்கள், பெட்ரோல் எங்கே? என்று கேட்டு அப்பகுதி மக்கள் சமூக வலைதளங்களில் விமர்சனங்களை முன்வைத்து வருகிறார்கள். அதற்கு விளக்கம் அளித்த ரஷ்யாவின் அதிகாரிகள், மாற்று எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் தீர்ந்து விட்டது என்றும், பெரிய நிறுவனங்கள் அவசரகாலத் தேவைக்காக எரிபொருளை சேமித்து வைப்பதாகவும் கூறினார்கள். பெட்ரோல், டீசல் விநியோகத்தில் ஏற்பட்ட ஏகபோகம் மற்றும் குளறுபடிகளால் நிலைமை மேலும் மோசமடைந்துள்ளதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உக்ரைன் நாட்டு ட்ரோன்கள் ரஷ்யாவின் சுத்திகரிப்பு நிலையங்கள் மீது நடத்திய தாக்குதல்களால், சில எரிபொருள் ஆலைகள் மூடப்பட்டுள்ளன. ஒரு சில எரிபொருள் உற்பத்தி நிலையங்கள் பகுதியளவு அழிக்கப்பட்டுள்ளன. இதனால் எரிபொருள் உற்பத்தி குறைவு ஏற்பட்டுள்ளது. மேலும் பெட்ரோல் டீசல் விநியோகச் சங்கிலியில் சிக்கல் ஏற்பட்டுள்ளதே தட்டுப்பாட்டிற்குக் காரணம் என கிரிமியாவில் உள்ள ரஷ்யாவின் அதிகாரிகள் ஒப்புக்கொண்டுள்ளனர். ஏனெனில் கிரிமியாவை பொறுத்தவரை பெட்ரோல் பெரும்பாலும் சாலை வழியாகவே கொண்டு செல்லப்படுகிறது.

இதற்கிடையில், ஜபாய் கல்ஸ்கி கிராய் பகுதியில், டோக்கன்முறையில் எரிபொருள் விற்பனை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சந்தையில், AI-95 ரக பெட்ரோலின் விலை ஒரு டன்னுக்கு 81,337 ரூபாயை தாண்டி புதிய உச்சத்தை எட்டியிருக்கிறது. எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் விலை உயர்வு ரஷ்யாவின் முழு பொருளாதாரத்தையும் பாதித்துள்ளதாக கூறப்படுகிறது. ரஷ்யாவில் சரக்கு போக்குவரத்துச் செலவுகள் அதிகரித்து, சரக்கு ஏற்றுமதி அளவு குறைந்து, பணவீக்கம் அதிகரித்து வருவதாக கூறப்படுகிறது.. இதனால் ரஷ்யாவின் பல பகுதிகள் முழுமையாக ஸ்தம்பிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று ஐரோப்பாவில் உள்ள ஊடகங்கள் கூறுகின்றன.

## பாகிஸ்தானில் கனமழைக்கு 802 பேர் பலி!

**இஸ்லாமாபாத், ஆக.30:**

பாகிஸ்தானில், 2 மாதங்களாகத் தொடர்ந்து பெய்து வரும் கனமழை மற்றும் அதனால் ஏற்படும் திடீர் வெள்ளத்தினால், தற்போது வரை 802 பேர் பலியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில், கடந்த ஜூன் 26 ஆம் தேதி பருவமழை தொடங்கியது. அன்று முதல் தொடர்ந்து பெய்து வரும் கனமழையால், அந்நாட்டின் நீர்நிலைகள் நிரம்பி அவ்வப்போது திடீர் வெள்ளம் ஏற்பட்டு வருகின்றது. இதனால், ஆயிரக்கணக்கான மக்கள் தங்களது வீடுகளை இழந்து முகாம்களில் வசித்து வருகின்றனர்.



இந்நிலையில், தொடர்ந்து வரும் கனமழை மற்றும் வெள்ளத்தினால் தற்போது 802 பேர் பலியானதாகவும், 1,088 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும், பாகிஸ்தானின் தேசிய பேரிடர் மேலாண்மை அதிகாரம் தெரிவித்துள்ளது.

அதன்படி, கனமழையால் அதிகம் பாதிக்கப்பட்ட கைபர் பக்துன்குவா மாகாணத்தில் 479 பேர் பலியானதுடன், 347 பேர் படுகாயமடைந்தது உறுதியாகியுள்ளது.

இதேபோல், பஞ்சாபில் 165 மரணங்களும், 584 படுகாயங்களும்; சிந்து மாகாணத்தில் 57 மரணங்களும், 75 படுகாயங்களும்; பலூசிஸ்தானில் 24 மரணங்களும் 5 படுகாயங்களும் பதிவாகியுள்ளன.

இத்துடன், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில், 24 பேர் பலியானதுடன் 29 படுகாயமடைந்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

தொடர்ந்து பெய்து வரும் கனமழையால், பஞ்சாப் மாகாணத்தில் உள்ள ஆறுகள், ஏரிகள் உள்ளிட்ட நீர்நிலைகள் நிரம்பி வரும் சூழலில், ஜஸ்ஸார் பகுதியில் உள்ள ரவி நதிக்கு பாகிஸ்தானின் வானிலை ஆய்வு மையம், உயர்நிலை வெள்ள அபாய எச்சரிக்கை விடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## புதின், கிம் ஜாங் உன் உள்பட 26 வெளிநாட்டு தலைவர்கள் அடுத்த வாரம் சீனாவுக்கு பயணம்

**பெய்ஜிங், ஆக.30:**

சீனாவில் நடைபெற உள்ள வெற்றி தினப் பேரணி நிகழ்ச்சியில் ரஷ்ய அதிபர் புதின், வட கொரிய தலைவர் கிம் ஜாங் உன் உள்ளிட்டோர் கலந்து கொள்ள உள்ளனர். சீன தலைநகர் பெய்ஜிங்கில் செப்டம்பர் 3-ஆம் தேதி இந்த வெற்றி தினப் பேரணி கொண்டாடப்படுகிறது. இரண்டாம் உலகப் போரில் ஜப்பானுக்கு எதிராக சீனா வெற்றி பெற்றதன் 80-வது ஆண்டு தினத்தை முன்னிட்டு இந்த கொண்டாட்டம் நடைபெறுகிறது. இந்த பேரணி அணிவகுப்பு நிகழ்ச்சிகளின் போது சீனாவின் நவீன ராணுவ வலிமையை பறைசாற்றும் வகையில், அதிநவீன ஆயுதங்களின் அணிவகுப்பும் நடத்தப்பட உள்ளது.

இந்த விழாவில் 26 உலக நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகவும், ரஷ்ய அதிபர் விளாதிமிர் புதினும், வட கொரிய தலைவர் கிம் ஜாங் உன் உள்ளிட்டோரும் கலந்து கொள்வார்கள் என்று சீன வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. பெய்ஜிங்கில் உள்ள தியான்மென் சதுக்கத்தில் நடைபெறும் அணிவகுப்பை மேற்குலக நாடுகளும், சர்வதேச நோக்கர்களும் உன்னிப்பாக கவனித்து வருகிறார்கள். அமெரிக்காவின் வரி யுத்தத்திற்கு நடுவே, சீனாவில் 26 நாடுகளின் தலைவர்கள் ஒன்றாக கூடுவது முக்கியத்துவம் பெற்றுள்ளது.

## அதிவேகமாக காரை ஓட்டிய துருக்கி போக்குவரத்து மந்திரிக்கு அபராதம்





**அங்காரா, ஆக.30:**

துருக்கி நாட்டின் போக்குவரத்து துறை மந்திரியாக இருப்பவர் அப்துல்காதீர் உரலோக்லு. சொகுசு கார் ஒன்றை அங்காரா சாலையில் அவர் ஒட்டி கொண்டு சென்றார். அப்போது அவர் கார் ஒலிபெருக்கியில் பாடல் கேட்டபடியும், நாட்டின் அதிபர் எரோடகனின் பிரசாரத்தை கேட்டபடி சென்றார். மேலும் காரை மணிக்கு 180 முதல் 200 கி.மீட்டர் வேகத்தில் இயக்கினார். இதுதொடர்பான வீடியோவை அவர் சமூக வலைத்தளத்தில் வெளியிட்டார்.

இந்தநிலையில் நாட்டின் போக்குவரத்துத்துறை மந்திரியே சாலை விதிகளை மதிக்காமல் காரை இயக்கியதற்கு விமர்சனங்கள் எழுந்தன. அங்கு அதிகபட்சமாக மணிக்கு 130 கி.மீ வேகத்தில் செல்லவே அனுமதி உள்ளநிலையில் அவர் அந்த வீடியோவை உடனடியாக நீக்கினார். தொடர்ந்து அப்துல்காதீருக்கு ரூ.20 ஆயிரம் (9 ஆயிரம் லிராக்கள்) அபராதம் விதிக்கப்பட்டது.

## அமெரிக்கா: பள்ளி வளாகத்தில் துப்பாக்கி சூடு: இருவர் உயிரிழப்பு

**வாஷிங்டன், ஆக.30:**

அமெரிக்காவின் மின்னசோட்டா மாகாணத்தில் உள்ள மினியபோலிஸ் கத்தோலிக்க பள்ளியில் இன்று காலை மாணவர்களுக்கான வழக்கமான பிரார்த்தனை கூட்டம் நடைபெற்றது. அப்போது பள்ளி வளாகத்திற்குள் துப்பாக்கியுடன் புகுந்த நபர், அங்கிருந்தவர்கள் மீது சரமாரியாக துப்பாக்கி சூடு நடத்தினார்.

இதனால் ஆசிரியர்களும், மாணவர்களும் அலறியடித்துக் கொண்டு நாலாபுறமும் சிதறி ஓடினர். இந்த தாக்குதல் சம்பவத்தில் 2 பேர் உயிரிழந்த நிலையில், 20-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இது குறித்து தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த போலீசார், துப்பாக்கி சூடு நடத்திய நபரை சுட்டுக் கொன்றனர்.

படுகாயமடைந்தவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இந்த சம்பவம் குறித்து அமெரிக்க அதிபர் டிரம்ப் தனது சமூக வலைதள பக்கத்தில், "மின்னசோட்டாவில் பள்ளி வளாகத்தில் ஒரு சோகமான துப்பாக்கி சூடு சம்பவம் நிகழ்ந்துள்ளது. எப்.பி.ஐ. அதிகாரிகள் இது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்" என்று பதிவிட்டுள்ளார்.

## கச்சத்தீவை ஒருபோதும் விட்டுத்தர முடியாது: இலங்கை மந்திரி பேட்டி

**கொழும்பு, ஆக.30:**

தவெக இரண்டாவது மாநில மாநாடு மதுரையில் கடந்த 21ஆம் தேதி நடைபெற்றது. இந்த மாநாட்டில் பேசிய விஜய், "தமிழ்நாடு மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்குதலுக்கு ஆளாகியுள்ளனர்.

அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்குத் தீர்வாக, கச்சத்தீவை மட்டும் மீட்டுக்கொடுங்கள்" எனப்பேசியிருந்தார். இந்நிலையில் இன்று இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர் விஜித ஹேரத் கொழும்புவில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவரிடம் இது குறித்து கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு விஜித ஹேரத் கூறியதாவது; தற்போது தென்னிந்தியாவில் தேர்தல்காலம் என்பதால், ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தைக் கூறி வருகின்றனர். அதனை நாம் பொருட்படுத்தத் தேவையில்லை. அரசு மட்டத்தில் யாராவது கருத்து தெரிவித்திருந்தால், அதன் மீது கவனம் செலுத்தலாம். எனவே இவ்வாறான கருத்துகளை நாம் பொருட்படுத்த வேண்டாம். கச்சத்தீவை இந்தியாவுக்கு நாம் ஒருபோதும் விட்டுக்கொடுக்க மாட்டோம்" என்று கூறினார்.

## செல்பி எடுப்பதற்கு மிகவும் ஆபத்தான நாடு இந்தியா - ஆய்வில் தகவல்

**நியூயார்க், ஆக.30:**

செல்பி எடுப்பதற்கு ஆபத்தான நாடுகள் பட்டியலில் இந்தியா முதலிடத்திலும், அமெரிக்கா இரண்டாவது இடத்திலும் உள்ளது.

அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தில் உள்ள 'தி பார்பர்' சட்ட நிறுவனம், கடந்த 2014 முதல் 2025 மே மாதம் வரை செல்பி எடுக்கும்போது ஏற்பட்டுள்ள உயிரிழப்புகள் மற்றும் காயங்களை கண்காணித்து ஆய்வு நடத்தியது. இந்த ஆய்வு, செல்பி எடுக்க நேரடியாக முயற்சித்து மரணத்தை விளைவிக்கும் நிகழ்வுகள் குறித்து செய்திகள் மற்றும் கட்டுரைகளை அடிப்படையாக கொண்டு நடத்தப்பட்டது.

அதில் அதிகமக்கள்தொகை, ரெயில் தண்டவாளங்கள், பாறைகள் போன்ற ஆபத்தான இடங்களுக்கு செல்வது, சமூக ஊடக கலாசாரம் உள்ளிட்ட பல காரணிகளை ஆராய்ச்சியாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர். அதன் அடிப்படையில் ஆய்வு செய்யபட்டது. இதில் உலகளவில் பதிவான அனைத்து நிகழ்வுகளில் 42.1 சதவீதம் இந்தியாவில் நிகழ்ந்துள்ளதாக கூறப்படுகிறது. இதன்படி உலகில் செல்பிஎடுப்பதற்கு ஆபத்தான நாடுகள் பட்டியலில் இந்தியா முதலிடத்திலும், அமெரிக்கா இரண்டாவது இடத்திலும் உள்ளதாக தெரியவந்துள்ளது. இந்த ஆய்வு முடிவுகளின்படி செல்பிஎடுப்பதற்கு ஆபத்தான நாடுகள் மற்றும் அந்நாடுகளில் நிகழ்ந்த செல்பி தொடர்பான உயிரிழப்புகளின் பட்டியல் பின்வருமாறு:-

1) இந்தியா - 271 நிகழ்வுகள் (214 உயிரிழப்புகள், 57 காயங்கள்)

2) அமெரிக்கா - 45 நிகழ்வுகள் (37 உயிரிழப்புகள், 8 காயங்கள்) 3) ரஷ்யா - 19 (18 உயிரிழப்புகள் மற்றும் ஒரு காயம்)

4) பாகிஸ்தான் - 16 இறப்புகளுடன் நான்காவது இடத்தில் உள்ளது, எந்த காயமும் இல்லை, 5) ஆஸ்திரேலியா -13 செல்பி இறப்புகளுடன் முதல் 5 இடங்களைப் பிடித்தது. செல்பி தொடர்பான அனைத்து இறப்புகளிலும் பெரும்பாலும் 46 சதவீதம் கூரைகள், பாறைகள் அல்லது உயரமான கட்டமைப்புகளில் இருந்து விழுவதே காரணமாக இருப்பதாக ஆய்வில் தெரியவந்துள்ளது குறிப்பிடத்தக்கது.